Follow us:

வாரவெளியீடு

தமிழன்

THAMILAN

தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 94 பிலவ வருடம், பங்குனி மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(10.04.2022) ஹிஜ்ரி-1443, ரமழான் - 08, 0115886187 - பக்கங்கள் 16+8+8+8

விலை ரூ.50

2 வாரங்களில் பதவி விலகாவிடின் அதிர்ச்சித் தகவல்கள் வெளிவரும்

ஜனாதிபதியை எச்சரித்து வெளியான வீடியோ

உலகில் மிக பயங்கரமான கணினி ஹெக்கர்கள் அணி எனக் கூறப்படும் எனோனிமஸ் அணியினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதை காட்டும் காணொளி ஒன்று சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி 14 நாட்களுக்குள் பதவியில் இருந்து விலக வேண்டும் எனவும் அதிகாரங்களை புதிய நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர்கள் அந்த காணொளியில் கூறியுள்ளனர்.

02 ஆம் பக்கம்

போராட்டங்களுக்கு இடமளிக்கவேண்டும்

- கனடா கோரிக்கை -

இலங்கையில் சீரழிந்து வரும் பொருளாதார நிலை மற்றும் உள்நாட்டு அமைதியின்மை குறித்து கனடா ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியம் என கனேடிய வெளியுறவு...

02 ஆம் பக்கம்

'வெடிமணியம்'



"கலிகாலம்" வரும் எண்டு சொல்லுவினம். எல்லாரும் அதை நம்ப மாட்டினம்.

இன்னும் 20 வருசத்துக்கு அசைக்கமுடியாத குடும்ப ஆட்சி எண்டு கட்டப்பட்ட சாம்ராஜ்ஜியத்தின் அழிவு வெறும் இரண்டு வருடங்களுக்குள் நிகழ்ந்துவிட்டது.

இதுதான் கலிகாலம்!

ராஜபக்ஸவும் கோட்டாபயவும் கனவில் கூட நினைத்திருக்கமுடியாத சம்பவங்கள் அவர்கள் கண்ணெதிரே நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

அவர்கள் குடும்பத்துக்குள்ளேயே துரோகம், ஏமாற்று, குழிபறிப்பு என்று கனக்க....!

அசைக்கமுடியாத 2/3 பெரும்பான்மையோடு இறுமாப்பாக ஆட்சிக்கட்டில் அமர்ந்த ராஜபக்ஸ ஆட்சியாளர்களின் நம்பிக்கையை வாக்களித்த அந்த மக்களே தவிடுபொடியாக்கிவிட்டார்கள்.

இது நிகழுமா? நிகழ்ந்துவிடாதா? என்ற ஏக்கத்தில் தான் தமிழர்கள் இதுகாலும் பொறுமையாக இருந்தார்கள்.

ஏனெனில் "தமிழர்களின் வாக்குகள் தேவையில்லை. எனக்கு சிங்கள மக்களின் வாக்குகளே போதும். அவர்களின் தலைவன் நான்" என்று கோட்டாபய இறுமாப்போடு சொன்னார்.

இன்று ...

அதே தமிழ்மக்களின் கண்களின் முன்னால் வாக்களித்த சிங்கள மக்கள் கோட்டாவை மிகக்கேவலமாக ஏசுகிறார்கள்.

கொடும்பாவிகளை எரிக்கிறார்கள்.

மின் கம்பத்தில் கோட்டாபயவின் உருவப்பொம்மைகளை தூக்கில் போடுகிறார்கள்.

சவப்பெட்டிகளில் ராஜபக்ஸ குடும்பத்தினரை ஏற்றி ஊர்வலம் போகிறார்கள்.

03 ஆம் பக்கம்

படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

கொழும்பில் மக்கள் அலை!

"கோட்டா கோ ஹோம்" ஓங்கி ஒலிப்பு

02 ஆம் பக்கம்

அனைத்து மருந்து வகைகளும் தீரும் அபாயம்!

- நா. தினுஷா -

நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன் எதிர்வரும் மூன்று வாரங்களில் அனைத்து மருந்துவகைகளும் தீர்ந்துவிடும் அபாயம் உருவாகியுள்ளதாக சுகாதாரத்துறை தகவல்கள் 'தமிழன்' வார இதழுக்கு நேற்றிரவு உறுதிப்படுத்தின.

இந்த சுகாதார நெருக்கடி நிலைமை குறித்து சுகாதார அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக வைத்திய நிபுணர்களால் அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அது குறித்து...

02 ஆம் பக்கம்

எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கும்

நிதி அமைச்சர் சப்ரி அறிவிப்பு

அரசாங்க நிதியை சரிசெய்வதற்காக வரிகளை அதிகரிக்கவேண்டியிருக்கும். அடுத்த ஆறு மாதங்களிற்குள் மீண்டும் எரிபொருள் விலைகளை அதிகரிக்கவேண்டியிருக்கும், இந்த நடவடிக்கைகளுக்கு மக்கள் ஆதரவளிக்கப்போவதில்லை. ஆனால், நாடு தற்போதைய நிலையிலிருந்து மீள்வதற்கு இதனை செய்தே ஆக வேண்டும் என நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கம்

ஈஸ்ரர்தின தாக்குதலை விசாரிக்கத் தவறிய அரசு பதவி விலக வேண்டும்

- நீர்கொழும்பில் நேற்று பேரணி -

- நீர்கொழும்பு நிருபர் செல்வா -

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எடுக்க முடியாமல்போன இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (09) நீர்கொழும்பில் கத்தோலிக்க மக்கள்...

02 ஆம் பக்கம்

மருந்துகள் சிலவற்றின் விலை அதிகரிப்பு

வர்த்தமானியில் அறிவிக்கப்படாத சில மருந்துப் பொருட்களுக்கு 20 சதவீதம் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய ஒளடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விலை அதிகரிப்பு நேற்று முன்தினம் (08) முதல் நடைமுறைக்கு...

02 ஆம் பக்கம்

11, 12ஆம் திகதிகளில் வங்கிகள் திறந்திருக்கும்

அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் நாளை 11 மற்றும் 12ஆம் திகதிகளில் சாதாரண வங்கி நடவடிக்கைகளுக்காக...

02 ஆம் பக்கம்

இப்புத்தாண்டில் மக்கள் வங்கியில் சுபமான வைப்புக்களைச் செய்து, சர்வதேச தரத்துடன் தயாரிக்கப்படும் Noritake தரஅடையாளம் கொண்ட Rice Bowls, Dinner Plates மற்றும் Mugs பரிசில்களாக பெற்றிடுங்கள்.
முழு வருடத்தினையும் குதூகலமாக்குங்கள். சகல பரிவர்த்தனைகளுக்கும் ஒரு பரிசு.

இப்புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் சுபமான வைப்புக்களாகவே அமையட்டும்!

பரிசுகள் கையிருப்பில் இருக்கும் வரை மட்டுமே. நிபந்தனைகளுக்குட்பட்டது

PEOPLE'S BANK
Pride of the Nation

MOBILE

வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.

OOKLA® தடையற்ற தொடர் வெற்றியை கடந்த 3 வருடங்களாக SLT-MOBITEL பதிவு செய்துள்ளது!

SLT-MOBITEL மீண்டும் ஒரு முறை இலங்கையின் முதன்மையான அதிவேக வலையமைப்பாக OOKLA® Speedtest® விருதினை வென்றுள்ளது.

இன்றே SLT-MOBITEL உடன் இணையுங்கள்!

OOKLA SPEEDTEST AWARDS FASTEST 2021
OOKLA SPEEDTEST AWARDS FASTEST 2020
OOKLA SPEEDTEST AWARDS FASTEST 2019

Based on analysis by Ookla of Speedtest® Intelligence® data for Q1 - Q4 2019, Q1 - Q2 2020 and Q1 - Q2 2021.
Ookla trademarks used under licence and reprinted with permission.

www.sltmobitel.lk

SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

கொழும்பில் மக்கள்...

படங்கள் : பிரதீப் தம்பரகே

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பு காலி முகத்திடலில் நேற்று முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். இவர்களில் பெருமளவானோர் இளைஞர் யுவதிகளாவர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பேற்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அரசாங்கமும் பதவி துறக்கவேண்டுமென வலியுறுத்தி நேற்றுக் காலை காலி முகத்திடலில் ஒன்றுகூடிய மக்கள் அங்கு சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பித்தனர். "கோட்டா கோ ஹோம்" என்று குரல் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதிக்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து, கோட்டை பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தொலைபேசி சேவைகளை முடக்கும் நோக்கம்கொண்ட பாதுகாப்புத் தரப்பினரால் இயக்கப்பட்டதால் அப்பகுதியில் கைத்தொலைபேசி மற்றும் இணைய சேவைகள் செயலிழந்து காணப்பட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கு குடிநீர் மற்றும் உணவுப்பொருட்கள் சமூக ஆர்வலர்களாலும் நலன்விரும்பிகளாலும் வழங்கப்பட்டன. இந்த செய்தி அச்சுக்குபோகும்வரை ஆர்ப்பாட்டம் நடந்துகொண்டிருந்தது.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் அங்கவீனமுற்ற புலன்களை இழந்தவர்கள் பலர் கலந்துகொண்டிருந்தமை பலரின் கண்களை பனிக்கச் செய்தன.

2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தேர்தல் ஆணைக்குழு
011-2868441 / www.elections.gov.lk

எரிபொருள் விலை...

"நீங்கள் (மக்கள்) இதனை செய்யவேண்டும் அல்லது நிரந்தரமாக தோல்வியை தழுவவேண்டும். இதுவே எங்கள் முன்னால் உள்ள தெரிவு" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் ரொய்ட்டர்ஸ் செய்தி சேவைக்கு வழங்கிய நேர்காணலில் இதனை குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

எரிபொருள், மருந்துகள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கும் பொருளாதார நெருக்கடியை கையாள்வதற்கும் இலங்கைக்கு 3 பில்லியன் டொலர் வெளிநாட்டு உதவி அடுத்த ஆறு மாதங்களுக்கு தேவைப்படும்.

இந்தியாவிடமிருந்து எரிபொருளிற்காக மேலும் 500 மில்லியன் டொலர்களை இலங்கை கோரும். இது ஐந்து வார தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக காணப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, நட்பு நாடுகளிடமும் அரசாங்கம் உதவியை நாடும்.

நாங்கள் எங்கிருக்கின்றோம், என்ன நிலையில் இருக்கின்றோம் என்பது தெரியும். இந்த நிலைமைக்கு எதிராக போராடுவதை தவிர வேறு வழியில்லை.

அரசாங்க நிதியை சரிசெய்வதற்காக வரிகளை அதிகரிக்கவேண்டியிருக்கும். அடுத்த ஆறு மாதங்களிற்குள் மீண்டும் எரிபொருள் விலைகளை அதிகரிக்க வேண்டியிருக்கும். இந்த நடவடிக்கைகளிற்கு மக்கள் ஆதரவளிக்கப் போவதில்லை. ஆனால், நாடு தற்போதைய நிலையிலிருந்து மீள்வதற்கு இதனை செய்தே ஆக வேண்டும். நீங்கள் இதனை செய்யவேண்டும் அல்லது நிரந்தரமாக தோல்வியை தழுவவேண்டும். இதுவே எங்கள் முன்னால் உள்ள தெரிவு என குறிப்பிட்டுள்ளார்.

11,12ஆம் திகதிகளில்...

தற்காலிகமாக மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

நாளை மறுதினம் 11 மற்றும் 12ஆம் திகதிகள் பொது விடுமுறை தினங்களாக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே வங்கிகள் வழமை போன்று திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2 வாரங்களில்...

அப்படிச் செய்யவில்லை என்றால், ராஜபக்ஷ குடும்பத்தின் அனைத்து தகவல்களையும் வெளியிடப்போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். எனோனிமஸ் என்ற இந்த அணியினர் உலகில் பிரபலமான தலைவர்கள் மறைத்து வைத்துள்ள சொத்துகளை வெளியிட்ட அணியினர் என கருதப்படுகிறது.

பென்டோரா ஆவணங்கள், பனாமா ஆவணங்கள், விக்கிலீக்ஸ் என கடந்த காலங்களில் உலகில் அதிர்ச்சிகளை ஏற்படுத்தும் தகவல்களை இந்த அணியினரே வெளியிட்டுள்ளனர்.

இந்த அணியினர் ஏற்கனவே உக்ரைன் நாட்டுக்குள் நுழைந்த ரஷ்யப் படையினரின் தகவல்கள், பெயர்கள் புகைப்படங்கள் ஆகியவற்றை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மருந்துகள் சிலவற்றின்...

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியைக் கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறித்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தின...

மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர். ஆர்ப்பாட்டப் பேரணியை தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டம் இடம்பெறுவதற்கு முன்பாக நீர்கொழும்பு வேளாலயங்களில் காலை ஆராதனை இடம்பெற்று. பின்னர் காலை 8 மணி முதல் அங்கிருந்து மக்கள் நகரின் வர்த்தகப் பிரதேசம் அமைத்துள்ள கிரீன்ஸ் வீதியில் ஒன்றுதிரண்டனர்.

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர். சர்வமதத் தலைவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்குபற்றியோர் கலோக அட்டைகளை ஏந்தியிருந்ததோடு, அரசுக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

போராட்டங்களுக்கு...

அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

இந்த கடினமான காலத்தில் இலங்கை மக்களுடன் தாம் ஒற்றுமையாக இருப்பதாக அவர் ட்வீட் செய்துள்ளார்.

இலங்கையில் தொடரும் போராட்டங்களின் விளைவாக கனடா உட்பட பல நாடுகள் இலங்கைக்கான பயண எச்சரிக்கைகளை விடுத்துள்ளன.

இலங்கைக்கு செல்லும் கனேடியர்கள் உயர் பாதுகாப்பு நிலையை கருத்திற்கொள்ளவேண்டும்.

அத்துடன் தற்போதைய சூழ்நிலையில் உள்ளூர் ஊடகங்களைக் கண்காணிக்க வேண்டும்,

அதேநேரம் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பாரிய கூட்டங்கள் நடைபெறும் பகுதிகளைத் தவிர்க்கவேண்டும் என்றும் கனடா குறிப்பிட்டுள்ளது.

அனைத்து மருந்துவகை...

நடவடிக்கை எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதய நோய், புற்றுநோய் ஆகியவற்றுக்கான உயிர்காக்கும் மருந்துவகைகள் ஏராளமான வைத்தியசாலைகளில் தீர்ந்துபோயுள்ளன.

இதன் காரணமாக எதிர்காலத்தில் மருந்துகள் இல்லாமல் நோயாளர்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை நிபுணர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மே மாத இறுதியளவில் அனைத்து வகையான மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படுவதால் அதிலிருந்து மீள்வதற்கு மருத்துவ நிபுணர்கள் சர்வதேச நாடுகளினதும் அமைப்புகளினதும் உதவியை நாடியுள்ளார்கள்.

இதன் உண்மைத்தன்மை குறித்து அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாண் இரத்தினசிங்கத்திடம் வினவியபோது, இவ்வாறான நிலைமை நாட்டில் உருவாகியுள்ளதை உறுதிப்படுத்தினார்.

இந்த இக்கட்டான சுகாதார நெருக்கடி குறித்து அரச உயர் மட்டத்துக்கு, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்ற வகையில் எழுத்து மூலமாக அறிவித்துள்ளோம். எனினும் அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

அரசாங்க சுகாதார நெருக்கடி நிலைமையை மறைப்பதற்கு முயற்சிக்கிறது. இதனால் நோயாளர்களே பாதிப்புக்கு உள்ளாவார்கள். இன்னும் ஒருசில வாரங்களில் மக்கள் கடுமையாக பாதிக்கப்படும்போது அரசாங்கம் உண்மை நிலைமையை கூறவேண்டி வரும் என்றார்.

'வெடி'மணியம்

- தொடர்ச்சி

வெளிநாடுகளில் ராஜபக்ல குடும்பத்துக்கு எதிராக புலம்பெயர்ந்த சிங்கள மக்கள் கொதித்தெழுந்து போராட்டம் செய்கிறார்கள்.

நாட்டைவிட்டு ராஜபக்லகுடும்பம் தப்பித்து போகக்கூடாது. அவர்களின் சொத்துகள் எல்லாம் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்ற கோஷத்தை எழுப்புகிறார்கள்.

நாளுக்கு நாள் தலைநகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் போராட்டங்கள் வலுப்பெறுகின்றன.

அமைதியான போராட்டங்கள் இன்னும் கொஞ்ச நாட்களில் "வன்முறையில்" முடியும்.

இந்த "வன்முறையை" இரும்புக்கரம் கொண்டு ஆளும் அரசு அடக்கும்.

"வன்முறைகள்" புதிய வடிவில் வெடிக்கும்.

மக்களின் சொத்துக்களும் அரச சொத்துக்களும் சேதமாகும்.

ஆயிக்காறங்களும் பொலிசும் சனமும் றோட்டில கட்டப்பிடிச்சு புரண்டு குத்துப்படும்.

நாடு இருக்கும் நிலையில் இதெல்லாம் தேவையா?

இலங்கையை பொறுத்தவரை இந்த பொருளாதார சிக்கலை இன்னும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு தீர்க்கவே முடியாது.

இந்த பொருளாதார அழிவை மேற்குலகும் இந்தியாவும் திட்டமிட்டே செய்தன.

சிறிலங்காவில் இருந்து சீனாவை கீக்கும் "ஒப்பிறேசனின்" ஒரு வகைத்தாக்குதல் தான் இன்றைய இந்த பொருளாதார நெருக்கடி.

இந்தளவு பிரச்சினை போகுது ஆனால் இதுவரைக்கும் சீனா வாய் திறக்கவேயில்லை.

கொஞ்சக்காலத்துக்கு முன்னம் சும்மா ஏதோ அமெரிக்கா வாய்விட்டதுக்கு சீனா வானத்துக்கும் பூமிக்கும் குதிச்சவை.

இப்ப ஒரு சத்தம் சவாரும் இல்லாமல் பொத்திக்கொண்டு இருக்கிறது சீனா.

சீனா இருக்குமட்டும் ராஜபக்ல குடும்ப ஆட்சியை ஒருத்தராலும் அசைக்கவேமுடியாது எண்டெல்லாம் கனபேர் சொன்னவை.

ஆனால் இப்ப நிலமை தலைகீழாகப்போய்க்கிடக்கிறது.

2009இல் இன அழிப்பு போரை சீனா தான் தான் முன்னுக்கு நின்று எல்லாம் குடுத்து செய்தாக மார்தட்டி ராஜபக்ல குடும்பத்தை ஆட்சிக்கட்டில் ஏற்றியது.

ஆனால் அதே சீனா சிறிலங்காவில் ராஜபக்லஆட்சி பற்றிஎரியும்போது பார்த்துக்கொண்டு இருக்கிறது.

ஐ.நாடுகள் சபையில் ஸ்ரீலங்காவையும் ராஜபக்லஆட்சியாளர்களையும் பிணையில் எடுத்த சீனா இன்று கையை கட்டிக்கொண்டு வேடிக்கை பார்க்கிறது.

சீனாவின் தலையீடுகளையும் முதலீடுகளையும் மலைபோல நம்பிய ராஜபக்லகுடும்பத்தை நடுத்தெருவில் அந்தரிக்கவிட்டுள்ளது சீனா!

ராஜபக்ல குடும்பம் மட்டுமல்ல அவரது மந்திரிகளும் எம்.பிமாரும் கூட நிம்மதியாக வீடுகளில் நித்திரைகொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை!

இதுக்குள்ள எங்கட ஆக்களின் கூத்து பெருங்கூத்து.

போனகிழமை கோட்டாபயவோட பேசிப்போட்டு ஏதோ கோட்டாபய "எல்லாம்" தருவார் எண்ட றேஞ்சுக்கு "பிடப்" விட்டிச்சினம்.

பிறகு இந்தக்கிழமை "கோ ஹோம் கோட்டா" எண்டு றோட்டில நின்டு கூவுகினம்.

இவங்களை புரிஞ்சுகொள்ளவே முடியவில்லை ஆண்டவரே!

சிங்கள பேரினவாத சிந்தனையாளர்களால் கட்டமைக்கப்பட்ட வழியில் தெற்கின் சிங்கள பேரினவாத வாக்குகளால் மட்டுமே ராஜபக்ல குடும்பம் பெருவெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்தது.

அதே சிங்கள பேரினவாதிகளால் மீண்டும் கிண்டிவிடப்பட்ட சிங்களமக்களே இன்று வீதியில் இறங்கி அதே ராஜபக்ல குடும்பத்துக்கும் ஆட்சிக்கும் எதிராக போராடுகிறார்கள்.

இது இரண்டுக்கும் இடையில் எங்களுக்கென்ன வேலை எண்டு கேக்குறம்!

முக்கியமாக தமிழரசுக்கட்சியை சேர்ந்த மூஞ்சூறுகள் சில இந்த போராட்டங்களில் குறுக்கமறுக்க ஓடித்திரிவதன் "நோக்கம்" என்ன?

ஏற்கனவே போனகிழமை சொன்னதுபோல பேயுக்கும் பிசாசுக்கும் நடக்கும் சண்டையில் குறுக்க போகக்கூடாது.

சிங்கள பேரினவாத எதிர்க்கட்சிகள் பல இன்று நடு றோட்டுக்கு வந்து போராடுகிறார்கள்.

போராடட்டும். அவர்கள்தான் போராடவேண்டும். நாங்களல்ல!

இந்த தெளிவு இலங்கை தமிழரசுக்கட்சிகளின் "மூஞ்சூறுகள்" சிலவற்றுக்கு புரியவேண்டும்.

இந்த போராட்டங்கள், வன்முறைகள் இந்தமாசமோ அடுத்த மாசமோ உச்சம் பெறலாம். அல்லது முடிவுக்கு வரலாம்.

அதுக்குப்பிறகு பேயும் பிசாசும் ஒண்டாகவும் கூடும்.

தேள்வையில்லாமல் உசுப்பேத்தி தமிழ்ச்சனத்தை "கோ ஹோம் கோட்டா" எண்டு கூவவைச்சு;

பிறகு அதால வாற பின் விளைவுகளுக்கு யார் பொறுப்பு கூறுவது?

கொழும்பில் ஏற்பட்டிருக்கும் இந்த "சிங்கள போராட்ட மனநிலை" நிரந்தரமானது அல்ல!

உரிமைகளை கேட்டு அந்த சிங்கள மக்கள் போராடவில்லை!

கறண்டுக்கும் பாணுக்கும் எரிவாயுவுக்கும் டீசலுக்கும் போராடும் அந்த மக்கள் அது கிடைச்சதும் பாதிப்பேர் அமைதியாகி வீடுகளில் தங்கட வேலையை பாக்க போய்விடுவார்கள்.

அரசியல் உரிமைகளுக்காக சிங்கள மக்கள் போராடும் போது;

எங்களின் அரசியல் உரிமைகளையும் அவர்கள் மதிச்சால்;

சேர்ந்து போராடலாம்.

அதுவரையும் பொத்திக்கொண்டு வேடிக்கை மட்டும் பாருங்கள்.

வில்லங்கங்களுக்குள் வீணாக மூக்கை நுழைக்காதீர்கள்.

தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் மேலாண்மை மாதமிரு வாரமிரு இதழ்கள்
இல. 91, விநேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி : 0112 67 34 42.
தொலைநேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilanedilor@gmail.com

அரசின் அக்கறையீனம்!

எதிர்வரும் ஜூன் மாதமளவில் முழு நாடும் இருளில் மூழ்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்களால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை நியமிக்கப்படாததால் உலக நாடுகளுடனோ அல்லது வேறு அமைப்புகளுடனோ பேச்சுவார்த்தைக்குச் செல்ல முடியாதென சுட்டிக்காட்டியுள்ள நிபுணர்கள், நாட்டின் தலைமைத்துவம் இதுகுறித்துச் சிந்திக்க வேண்டுமென கோரியுள்ளனர்.

நாடு பொருளாதார நெருக்கடியின் உச்சத்தில் இருக்கிறது. இதிலிருந்து மீள்வதற்கு துரித நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

நாடு முழுவதும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தன்னெழுச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் மக்களின் குரலுக்கு அரசாங்கம் என்ற வகையில் பதில் வழங்கப்படவில்லை. அதாவது மக்களின் கோரிக்கைகள் செயற்படுத்தப்படவில்லை.

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து கருத்துகளை தெரிவிப்பதற்காக இரு நாட்கள் நாடாளுமன்ற விவாதத்துக்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் ஒதுக்கப்பட்டன. ஆனால் அவ்விரு நாட்களிலும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் காத்திரமான அபிப்பிராயங்களை வெளியிடவில்லையென்பதே கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டை மீட்டெடுப்பதற்கு நாடாளுமன்றத்துக்கு பொறுப்பு இருப்பதால் அந்தப் பொறுப்பைப் ஏற்று செயற்பட வேண்டுமென சபாநாயகர் உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார்.

"நாடாளுமன்ற விவாதத்தில் தற்போதைய நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பது தொடர்பில் நேர்மறையான கருத்துக்களோ அல்லது தீர்வுகளோ முன்வைக்கப்படாமை கவலைக்குரியதாகும். விவாதத்தை ஆரம்பிப்பதற்கு ஒழுங்குப்பத்திரத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கும்போது அதனைக் குழப்பியமை, இரண்டு தடவைகள் சபையை ஒத்திவைக்க நேர்ந்தமை தற்போதைய சூழலில் இடம்பெறக்கூடாத நிகழ்வுகள் என நான் பார்க்கின்றேன்.

சகல உறுப்பினர்களும் சபையில் வழமைபோன்று அரசியல் குறித்த பிரச்சினையை முன்வைத்தமை கவலையளிக்கிறது என்பதை மீண்டும் நினைவுபடுத்தி, அதனை அனைவரும் மனத்தில் கொண்டு விவாதத்தின் இறுதியில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டமொன்றை முன்வைக்கும் வகையில் செயற்படுமாறு நான் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்" என உறுப்பினர்களிடம் வினயமாகக் கேட்டார் சபாநாயகர்.

இருப்பினும் இருநாள் விவாதத்தின் இறுதியில் எந்தவொரு திட்டமும் உறுப்பினர்களால் முன்வைக்கப் படவில்லை.

இதேவேளை, எதிர்வரும் ஜூலை மாதம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுக் கடனாக செலுத்தப்பட வேண்டும். அதனைச் செலுத்த முடியாவிட்டால் நாடு மேலும் வீழ்ச்சியடையும் என இலங்கை வர்த்தக சபையின் உபதலைவரும் பொருளாதார நிபுணருமான துமிந்த ஹுலங்கமுவ தெரிவித்துள்ளார். இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் ஊடாக மே மாதம் வரையிலேயே மின்சாரத்தை பயன்படுத்த முடியும் எனவும் அதன் பின்னர் நாடு இருளில் மூழ்கும் எனவும் அவர் அபாய எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், நாட்டில் ஓர் அமைச்சரவை இல்லாத காரணத்தினால் வேறு நாடுகளுடனோ அல்லது சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகளுடனோ பேச்சுவார்த்தை நடத்த முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான அரசாங்கமும் நிபுணர்களின் ஆலோசனைகளை கடந்த காலங்களில் கேட்கவில்லை. அதன் விளைவுகளை முழு நாட்டு மக்களும் இன்று அனுபவித்து வருகிறார்கள். குடும்ப ஆட்சியில் வீட்டு சாப்பாட்டு மேசையில் நாடு தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களாகவே கடந்த கால செயற்பாடுகள் அமைந்திருந்தன.

ராஜபக்ஷ குடும்பத்துக்கு அதிகாரத்தின் மீது இருந்துவரும் ஆசையே இந்தக் காலச் சூழலில் பட்டினியோடு மக்கள் வாழ வேண்டிய நிலைமையை உருவாக்கியிருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்த வேண்டுகோளுக்கு அமைய சர்வகட்சிக் கூட்டம் ஜனாதிபதியால் கூட்டப்பட்டது.

அதற்கு அடுத்த கட்டமாக எவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறப்போகின்றன என்பதை மக்கள் எதிர்பார்ப்புடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மிகத் துரிதமாக செயற்பட வேண்டிய காலகட்டத்தில் சர்வகட்சி மாநாட்டின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் இடம்பெறாதிருப்பதானது அரச உயர்பீடத்தின் அக்கறையீனத்தையே சுட்டிநிற்கிறது.

நாடு இருளுக்குள் வீழும் என்ற எச்சரிக்கையை அரச உயர்பீடம் மிக இலாவகமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. நாட்டை மீட்டெடுக்க மிகத் துரிதமான செயற்பாடுகள் அவசியமாகியுள்ள சூழலில், அவற்றைச் சற்றேனும் புரிந்துகொள்ளாத வகையான ஆட்சியாளர்களின் மனப்போக்கு கண்டிக்கத்தக்கது.

சண்டே சாம்பார்

* முற்றிவிட்ட அரசியல், பொருளாதார நெருக்கடிகள்

* நிலைமையை சமாளிக்க புதிய அரசியல் வியூகம் வகுத்த ஜனாதிபதி - நாடாளுமன்றத்தில் நடக்கப்போகும் மாற்றங்கள்

* ரணிலின் ஆலோசனையை ஏற்ற கோட்டா நாட்டு மக்களுக்கு உரையாற்ற மறுத்தது ஏன்?

* பெசிலுக்கெதிராக பொங்கியெழுந்த மஹிந்தானந்த - அமைதிகாத்த எம்.பிக்கள்

* நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் ஷொக் கொடுத்த சஜித்

நாட்டின் பொருளாதார நெருக்கடியுடன், அரசியல் நெருக்கடியும் சேர்ந்து விட்டது.

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்திருக்கிறது பிரதான எதிர்க்கட்சி. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை அவசரப்பட்டு கொண்டுவரப்பட்ட ஒன்றாக பேசப்பட்டாலும் இப்போதைய நிலைமையில் இதனை கொண்டுவருவதன் பின்னணியில் பல அரசியல் காரணங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது.

அரசாங்கத்திற்குள் இருக்கும் பலர் சுயாதீனமாக இருக்கப்போவதாக அறிவித்துள்ளனர். அரசாங்கத்தின் செயற்பாடுகளில் அதிருப்தி இருப்பதாக அவர்கள் மக்களுக்கு கூறும் அதேசமயம், அரச மேல் மட்டத்துடன் அவர்கள் இரகசிய உறவில் இருப்பதாக சமூகத்தில் ஐயமொன்று உள்ளதல்லவா? இப்போது அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மேற்படி சுயாதீனமாக செயற்படுவோரென கூறிக்கொள்வோர் கட்டாயம் கையொப்பமிடவேண்டும். அப்படி கையொப்பமிடாத பட்சத்தில், அவர்களின் உண்மைத்தன்மை வெளிப்பட்டுவிடும். அதேசமயம் ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை ஒன்றை கொண்டுவர ஜே.வி.பி. முயற்சிகளை எடுத்துள்ளது. இந்த இரண்டு நடவடிக்கைகளும் அடுத்தடுத்து இடம்பெறுவதால் அரச தரப்பு கலக்கமடைந்துள்ளது.

அரசமைப்பு ரீதியாக முன்னெடுக்கப்படும் இவ்விரு நகர்வுகளுக்கும் ஆதரவு வழங்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் ஆதரளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டு, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடுகள் இன்னும் உறுதியாக வெளியாகவில்லை. சுயாதீன அணிகளின் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்காத பட்சத்தில் மேற்படி உறுப்பினர்களும் இவ்விரு நகர்வுகளுக்கும் ஆதரவாக செயற்படக்கூடும்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த வாரமளவில் சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு கையளிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் நகர்வுகள் எவை?

1. அரசாங்கம், பிரதமர், அமைச்சரவை போன்றன நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறவேண்டும். அந்தவகையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கான காரணங்களை உள்ளடக்கிய பிரேரணை எம்.பிக்களின் கையொப்பத்துடன் சபாநாயகரிடம் கையளிக்கப்படும்.

அரசுக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கட்டாயம் இத்தனை எம்.பிக்கள் கையொப்பம் இட்டாக வேண்டும் என்ற எண்ணிக்கை வரையறை இல்லை.

2. இவ்வாறு கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை சட்டவலுவானதா என்பது தொடர்பில் சபாநாயகரால், நாடாளுமன்ற செயலாளரிடம் விளக்கம் கோரப்படும்.

3. மேற்படி பிரேரணையானது சட்டவலுவுடையது, நாடாளுமன்ற நிலையியற்கட்டளைக்கு உட்பட்டதென நாடாளுமன்ற செயலாளர் உறுதிப்படுத்திய பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெறும்.

4. குறித்த யோசனை நாடாளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் உள்ளடக்கப்படும்.

5. நாடாளுமன்ற ஒழுங்கு புத்தகம் அச்சிடப்படும் எம்.பிக்களுக்கு பகிரப்படும்.

6. அதன் பின்னர் 5 வேலை நாட்களுக்குள் விவாதம் நடத்தலாம். எனினும், விவாதம் நடத்துவதற்கான திகதியை சபாநாயகர் தலைமையிலான நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவே தீர்மானிக்க வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் உள்ளிட்டோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். முக்கியத்துவம்மிக்க விவகாரமாக கருதி அண்மித்த காலப்பகுதியை விவாதத்துக்குரிய நாளாக ஒதுக்குவது சம்பிரதாயம். ஆனால் ஆளுந்தரப்புக்கு தேவை ஏற்படும் பட்சத்தில் இழுத்தடிப்புகளையும் செய்யலாம்.

7. விவாதத்துக்கான நாள் நிர்ணயிக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்கப்படும். குறித்தொகுக்கப்பட்ட நாளில் விவாதம் நடத்தப்படும். இறுதியில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

8. வாக்கெடுப்பில் கலந்துகொண்டும் உறுப்பினர்களில் பெரும்பான்மையே வெற்றியை நிர்ணயிக்கும். 113 என்பது கட்டாயம் இல்லை. சுமார் 100 எம்.பிக்கள் வாக்கெடுப்பில் பங்கேற்றால் 51 பேர் ஆதரவாக வாக்களித்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றதாக கருதப்படும். அடுத்தக்கட்ட நகர்வுகள் ஜனாதிபதி ஊடாக மேற்கொள்ளப்படும்.

9. நம்பிக்கையில்லாப் பிரேரணைமீதான விவாதத்துக்கு முன்னர், அரசு பதவி விலகினால் நம்பிக்கையில்லாப் பிரேரணை வலுவிழந்துவிடும். ஜனாதிபதி நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்தினால், மீண்டும் முன்வைக்க வேண்டிவரும்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்...

சண்டே சாம்பார் தொடர்ச்சி...

இலங்கை நாடாளுமன்றத்தில் முதலாவதாக டட்லி சேனாநாயக்க தலைமையிலான அரசுக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டது. அதன் பின்னர் இற்றைவரை சுமார் 23 வரையான பிரேரணைகள் அரசுகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன. இவற்றில் 2018 இல் முன்வைக்கப்பட்ட பிரேரணை மட்டுமே வெற்றிபெற்றது. (52 நாட்கள் அரசியல் சூழ்ச்சியின்போது)

அதுவும் ஒழுங்கு பத்திரம் உட்பட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளை நிறுத்திவிட்டுதான், பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஜனாதிபதி நிராகரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தற்போதைய 9ஆவது நாடாளுமன்றத்தில் இறுதியாக வலுசக்தி அமைச்சராக இருந்த உதய கம்மன்பிலவுக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

வாக்கெடுப்பின்போது அதனை மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசு தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவை மாற்றத்தில் குழப்பங்கள் ஏன்?

அமைச்சரவை மாற்றம் நடக்கும் என்றும் நடக்காதென்றும் முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றனவே. அப்படி என்னதான் நடக்கிறது என்ற குழப்பம் எல்லோருக்கும் இருக்கிறது. இந்த குழப்பம் ஆரம்பத்தில் இருந்து இருக்கிறது. முதலில், பெசில் ராஜபக்ஷவே நிதியமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யவேண்டுமென கோரப்பட்டது. ஆனால் அவர் மறுத்துவிட்டார். அதனையடுத்து பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த இராஜினாமா செய்ய தீர்மானித்தார். ஆனால், பிரதமர் பதவி வெற்றிடமானால் முழு அமைச்சரவையும் இருக்காதென கருதப்பட்டதால் பிரதமரை பதவிவிலக வேண்டாமென வலியுறுத்திய அமைச்சர்கள், தாங்கள் அனைவரும் பதவி விலக தீர்மானித்தனர். அதன்படி முழு அமைச்சரவையும் பதவி விலகியது. ஆனால், நாடாளுமன்ற மற்றும் நிதி செயற்பாடுகளை முன்னெடுக்க மாத்திரம் நான்கு அமைச்சர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிதியமைச்சர் பதவியை ஏற்ற அலி சப்ரி பதவியேற்ற மறுநாளே தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். குடும்ப உறுப்பினர்களின் அழுத்தம் காரணமாக அவர் இவ்வாறு இராஜினாமா செய்திருந்தபோதும் அந்த இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்கவில்லை. நிதியமைச்சு பதவியை ஏற்குமாறு பந்துல குணவர்தன, ரமேஷ் பத்திரண உட்பட்ட சிலருக்கு ஜனாதிபதி தரப்பிலிருந்து அழைப்பு சென்றாலும் அவர்கள் எவரும் ஏற்கமுன்வரவில்லை. அதனால் அலி சப்ரியே பதவியை தொடர தீர்மானித்தார்.

புறக்கோட்டைக்கு சென்று சில்லறைக்கடைகளில் பேசுவதுபோன்று சர்வதேச நாணய நிதியத்துடன் பேச முடியாது. அதற்கு சில திறமைகள் வேண்டும். நிதியமைச்சராக பதவி வகிப்பதற்கு பொருளாதார நிபுணராக இருக்க வேண்டிய அவசியமில்லை. மாகாண சமரவீர நிதியமைச்சராக பதவி வகித்தது போல நீங்களும் செயற்படுங்கள். நாங்கள் இயன்ற ஒத்துழைப்பினை தருகிறோம் என்று முக்கியமான தொழிலதிபர்கள் சிலர் அலி சப்ரிக்கு தொலைபேசியில் தெரிவித்த கையோடு மீண்டும் நிதியமைச்சுப் பதவியில் தொடர தீர்மானித்தார் சப்ரி.

இனி புதிய அமைச்சரவையொன்று சித்திரை புதுவருடத்திற்கு முன்னர் அமையவுள்ளது. குறைந்தளவு அமைச்சர்களே அதில் அங்கம் வகிக்கவுள்ளனர். முக்கிய விடயம் இந்த அமைச்சரவையில் பெசில், சமல், நாமல், சவீந்திர ஆகிய ராஜபக்ஷமார் அங்கம் வகிக்கப்போவதில்லை. கடந்த காலங்களில் ஆளுங்கட்சி கூட்டங்களில் ஏகபோகமாக கருத்துகளை தெரிவித்த ராஜபக்ஷமார் இப்போதெல்லாம் அடக்கி வாசிப்பதாக தகவல்.

சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஆளுங்கட்சி கூட்டமொன்றில் மஹிந்தானந்த அளுத்கமகே, பெசில் ராஜபக்ஷ மீது கடும் கண்டனங்களை தெரிவித்து இந்த நிலைமைக்கு அவரும் காரணம் என்று தெரிவித்திருக்கிறார். ஆனால் வழமைபோல பெசிலுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஆளுங்கட்சி எம்.பி மார் வாயே திறக்கவில்லையாம். இப்போதுள்ள நிலைமைகளை பார்க்கையில், இனி ராஜபக்ஷமாருக்கு அரசியலில் இறங்குமுகம்தான்.

குழப்பமிகு கொழும்பு அரசியல்

ஜனாதிபதி கோட்டாபய கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்திற்கு சென்றார். அங்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலுடன் நீண்ட நேரம் தனி அறையில் பேச்சு நடத்தினார். சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் உடனடியாக செல்லவேண்டுமெனவும், அதற்கு முன்னர் அரசியல் நெருக்கடியை தீர்க்குமாறும் ரணில் இங்கு ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். அதேபோல அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கி உடனடியாக நாட்டு மக்களுக்கு உரையாற்றுமாறு ரணில் கேட்டுக்கொண்டார். ரணிலின் கோரிக்கையின்படி அன்றையதினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றவிருந்தார் கோட்டா. ஆனால் அரசாங்கத்தின் உண்மை நிலையை மக்களுக்கு சொன்னால் அது அரசு பலவீனமாக இருப்பதை காட்டிவிடுமென தெரிவித்து ஜனாதிபதியின் உரைக்கு முட்டுக்கட்டை போட்டனர் ஆளுங்கட்சியின் உயர்மட்ட அரசியல் பிரமுகர்கள்.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட்ட 11 அரசியல் கட்சிகளும், அனுர பிரியதர்ஷன யாப்பா அணியினரும் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி இடைக்கால அரசை புதிய பிரதமர் தலைமையில் நியமிக்குமாறு கேட்டுள்ளனர். ஆனால் அதனை அரசு பரிசீலிக்கும் நிலையில் இல்லை. இதனால் அடுத்தடுத்த நாட்களில் அரசியல் நெருக்கடி தொடரவே போகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களை சந்தித்த ரணில், நாட்டின் நிலைமை மோசமடையப்போவதாக எச்சரித்துள்ளார்.

ஜூன் மாதமளவில் எள்ளுருண்டை சுற்றக்கூட கடதாசி இருக்காது. பணம் மக்களிடம் இருக்காது. இந்தியாவின் உதவிகள் தொடர்ந்து கிடைக்காவிட்டால் அடுத்தகட்ட நகர்வு என்ன என்பது அரசுக்கு திட்டம் இல்லை. நிலைமை பாரதூரமாகிக்கொண்டிருக்கிறது.. என்று அவர்களிடம் எச்சரித்துள்ளார். இதனையே சற்று விரிவாக கடந்த வெள்ளிக்கிழமையும் நாடாளுமன்ற உரையில் கூறியிருந்தார் ரணில்.

இடைக்கால அரசு வரப்போகிறது அதில் டலஸ் அலகப்பெரும பிரதமர் ஆகிறார் என்ற செய்திகள் வந்த கையோடு சில தினங்களுக்கு முன்னர் டலஸை சந்தித்த பிரதமர் மஹிந்த, இந்த செய்திகள் குறித்து விளக்கியிருக்கிறார். என்னை அரசியலுக்கு கொண்டுவந்தவர் நீங்கள். உங்கள் முதுகில் குத்தமாட்டேன். நீங்கள் தானே பிரதமர். பிறகேன் புதிய பிரதமர் என்று சாரப்பட அதற்கு பதிலளித்தாராம் டலஸ் எம்.பி.

தீர்மானமிகு வாரம்

பிறக்கும் வாரம் நாட்டுக்கு மிக முக்கியமானது. இலங்கை வரலாற்றில் வரிசைகளில் பொருட்கள் வாங்க நின்றபடி பொருளாதார சுமைகளுடன் சித்திரைப்புத்தாண்டை மக்கள் கொண்டாடவுள்ளனர். அதற்குள் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டால் ஆளுங்கட்சிக்குள் நெருக்கடி வரலாமென நினைத்து அதனை பிற்போட அரச மேலிடம் எண்ணக்கூடும். எதிர்வரும் 19 ஆம் திகதி நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தால் நாடாளுமன்ற அமர்வுகளை ஜனாதிபதி அதிகாரத்தினூடாக ஒத்திவைக்க அரச மேலிடத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது. அப்படி ஒத்திவைத்தால் பிரேரணை செல்லுபடியற்றதாகிவிடும். அதற்குள் புதிய நாடாளுமன்ற அமர்வுகளை ஆரம்பிக்க முன்னர் பொருளாதார நெருக்கடிகளை சீர்செய்யலாமென அரச மேலிடம் கருதுகிறது.

சபாநாயகர் கையில் எல்லாம் இருப்பதால், அவருக்கு அழுத்தங்கள் அதிகரித்திருப்பதால் இன்றைய நிலையில் சபாநாயகரை முழுமையாக நம்பும் நிலையில் அரசு இல்லை. அதனால்தான் சுயாதீனமாக செயற்படவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதி சபாநாயகரை பதவியில் இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார் ஜனாதிபதி. எதிர்க்கட்சிகளின் அழுத்தத்திற்கு அடிபணிந்து ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை சபாநாயகர் ஏற்பாராயின், சட்டத்தின்பிரகாரம் அதற்கு பின்னர் ஜனாதிபதியினால் நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திவைக்கவோ அல்லது கலைக்கவோ முடியாது. எனவேதான் வரும் வாரங்கள் தீர்மானமிக்கவையாக இருக்கப்போகின்றன.

இந்தியாவின் உதவி தொடர்ந்து கிடைக்காது, மறுபுறம் சீனாவின் உதவியும் இலங்கைக்கு உடனடியாக கிடைக்கும் வாய்ப்பில்லை. அரசியல் நெருக்கடியும், பொருளாதார நெருக்கடியும் ஒருசேர தொடரும் அறிகுறியே காணப்படுகின்றது.

- சிவா இராமசாமி -
rh i



திசை மாற்றப்படும் அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சிப் போராட்டம்

எம். எஸ். அமீர் ஹுசைன்

அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பு நாடளாவிய ரீதியில் வலுவடைந்து வருகின்றது. ராஜபக்ஷ குடும்பம் பதவி விலக வேண்டும் என்று கோரி வரும் எதிர்ப்பாளர்கள் மத்தியில் தற்போதைய அரசாங்கம் குறித்து கடுமையான வெறுப்பு ஏற்பட்டிருக்கின்றது. மக்களது சுதந்திரமான உரிமையை கூட அனுபவிக்கவிடாது 03ஆம் திகதி நாடு முழுவதற்கும் அவசரகால நிலைமையை பிறப்பித்து ஜனநாயக உத்தரவு பிறப்பித்தமையால் இந்த எதிர்ப்பு மேலும் தீவிரமடைவதை கட்டுப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். ஆனாலும் மின்னல் அதே எதிர்ப்பு, திசை மாறுவதை அறிந்தவுடன் 05ஆம் திகதி மேலும் ஒரு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அதனை வாபஸ் பெற்றார்.

இந்நிலையில், அமைச்சர்கள் அனைவரும் தமது அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து பதவிகளை இராஜினாமா செய்வதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அறிவித்துள்ளனர். அதன்படி அமைச்சரவைப் பதவி விலகியுள்ள நிலையில் 2022 ஏப்ரல் 04ஆம் திகதி பிரதி அமைச்சர்களும் பதவி விலகுவதாக அறிவித்தனர். அதனையடுத்து நாட்டின் பொருளாதார நெருக்கடியின் மற்றுமொரு காரண கர்த்தாவாக இருந்த இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால் பதவி விலகினார். தற்போது அவருக்கு வெளிநாடு செல்வதற்கான தடையுத்தரவு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருக்கின்று. அவர் முறையற்ற விதமாக நிதியை கையாண்டதாக செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டையடுத்தே இந்த தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

2022 ஏப்ரல் 03ஆம் திகதி இரவு ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னரே பதவி விலகும் தீர்மானத்தை அமைச்சர்கள் எடுத்துள்ளனர். இந்த பதவி விலகல் தொடர்பாக மக்களுக்கு பாரிய சந்தேகம் எழுந்திருக்கின்றது. இதுவும் ஓர் அரசியல் நாடகமே என்று கருதி ராஜபக்ஷ குடும்பமே ஆட்சியிலிருந்து விலகி ஒதுங்கவேண்டும் என்பதே மக்கள் கோரிக்கையாக மாறிவருகின்றது.

இந்நிலையில், மீண்டும் எஞ்சி இருக்கின்ற 03 வருட பதவிக்காலத்தை எப்படியாவது கடத்தலாம் என்ற நினைப்பில் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்க அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணையுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினரும் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து வெளியே போடப்பட்ட முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்சவின் கோரிக்கையும் தேசிய அரசாங்கமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். இந்த வேண்டுகோளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்திருக்கின்றது. அதேபோன்று அநுரகுமார திசாநாயக்கா தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியும் ஜனாதிபதியின் வேண்டுகோளை நிராகரித்திருக்கின்றது.

இப்படியான ஓர் இக்கட்டான நிலையில் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிவந்த 42 உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்ததால் பெரும்பான்மையை இழந்திருக்கின்றது. ஆனாலும் இவ்வாறு ஆதரவை விலக்கிக்கொண்டதாக அறிவித்திருப்பவர்கள் மதில்மேல் பூனைகளாக இருப்பவர்கள் என்றே கருத முடிகின்றது. சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப நாட்டில் மக்கள் எதிர்ப்பின் முன்னிலையில் மக்களின் ஆதரவாளர்கள்போல் நடிப்பதற்காகவே இவ்வாறு அரசாங்கத்திற்கு ஆதரவாக இல்லை என்பதை வெளிப்படுத்த முயற்சி செய்கின்றனர். நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு எதிராக அல்லது தற்போதைய நிலையில் வாக்கெடுப்பொன்று நடத்தக்கூடும் என்னதான ஒன்று வருமானால் இவர்கள் அதனை எதிர்த்து வாக்களிப்பார்களா என்பது சந்தேகமானதாகும்.

அதிலும் மைத்திபால சிறிசேனவின் தலைமையிலான ஸ்ரீ.ல.சு. கட்சி வேறொரு கோணத்தில் முயற்சியெடுத்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. தற்போதைய நிலையில் பிரதமர் பதவி விலகி ஒரு கூட்டாட்சி ஏற்படுமாயின் அதில் பிரதமர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவுக்கு வழங்க ஜனாதிபதி முயற்சிதெதால் அந்தப் பதவியில் கண்வைத்தவராகவே மைத்திபால சிறிசேனவின் காய்நகர்த்தல்கள் உள்ளன.

அவசரகால நிலைமையை பிரகடனம் செய்ததை ஜனாதிபதி விடேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 05ஆம் திகதி வாபஸ் பெற்றதுடன், அதற்கு மைத்திபால சிறிசேன தலைமையிலான 14 பேர்களைக்கொண்ட ஸ்ரீல.சு.கட்சியே உரிமை கோருகின்றது. நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பொன்று வருமானால் அதற்கு சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிக்கும் என்று தெரிவித்ததால் ஜனாதிபதி அவசரகால நிலைமை நீடிப்பை வாபஸ் பெற்றதாகக் கூறிவருகின்றனர்.

இந்த சுதந்திரக் கட்சி உண்மையாக தற்போதைய நிலையில் மக்களின் பக்கம் இருந்தால் எதற்காக அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிப்பதாக கூறி இந்நிலையில் ஜனாதிபதியின் தலைமையிலான அரசாங்கத்தைப் பாதுகாக்க முயற்சி செய்ய வேண்டும். ஏற்கனவே அவசரகால நிலைமை நீடிப்பு செய்தமைக்கு நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று த.தே.கூ. அமைப்பின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் கூறிவந்தார். அத்தகைய ஒரு விவாதமும் வாக்கெடுப்பும் வருவதையும் அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது என்பதையும் தடுக்கவே திரை மறைவிலிருந்து சுதந்திரக் கட்சி முட்டுக் கொடுப்பதை இது காட்டுகின்றது. உண்மையாகவே சுதந்திரக் கட்சி மக்களது போராட்டத்திற்கு ஆதரவும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை குறித்து கவலையும் அடைந்து மக்களது பக்கத்திலிருந்து சிந்திப்பதாக இருந்தால் தனியாக ஜனாதிபதியுடன் பேசி சபையில் வாக்கெடுப்பொன்று வருவதை தடுத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

நாடளாவிய ரீதியில் மக்களது ஒரே கோரிக்கையாக அமைந்திருப்பது இந்த ஆட்சியாளர்கள் பதவி விலக வேண்டும் என்பதாக இருந்தாலும் அரசியலமைப்பால் மேலும் சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது. அத்துடன், அரசாங்கமும் மக்களது போராட்டத்திற்கும் கோரிக்கைக்கும் வளைந்து கொடுப்பதாக தெரியவில்லை. எப்டியோ தாக்குப் பிடிக்கும் அறிகுறிகளே தென்படுகின்றன. காரணம், இந்த மக்கள் எழுச்சி எதுவரை நீடிக்கும் என்பதே அரசாங்கத்தின் இத்தகைய ஸ்திர நிலைக்கு காரணமாக இருக்கின்றது.

அரசாங்கம், இன்னும் இந்தப் போராட்டமும் எதிர்ப்பும் மக்கள் எதிர்நோக்குகின்ற பலவிதமான நெருக்கடிகளுக்கும் பட்டினிக்கும் எதிரானது என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து வருகின்றமையாகும். இந்த எதிர்ப்பானது ஜே.வி.பியினதும் சுமகி ஜன பல வேகயான பிரதான எதிர்க்கட்சியினதும் அரசியல் நாடகம் என்றும் இந்த மக்கள் எழுச்சிக்குள் கதித்திட்டம் இருக்கின்றது என்று கூறி இந்த போராட்டத்தை திசை திருப்பி நிலைமையை சமாளிக்க முற்படுகின்றனர். பிரச்சினைகளை கண்டும் காணாதமாதிரி இருக்க முயற்சி எடுக்கப்படுகின்றது. அத்துடன், 1989 -1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்டதுபோன்று ஜே.வி.பியின் இளைஞர்களை பழிகொடுக்கும் கிளர்ச்சி என்று நிலைமையை திசை திருப்ப முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பொன்னாண்டோ முயற்சிசெய்து வருகின்றார்.

தொடர்ச்சியாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பொன்னாண்டோ இற்குப் பொறுப்பாக்கப்பட்டதை மக்களை எதிரணியினரின் தவறான வழிநடத்தல் என்று குற்றஞ்சாட்டி மலினப்படுத்தி ஜனாதிபதியை பாதுகாக்கும் முயற்சியில் கடுமையாக ஈடுபட்டுள்ளார். பதவி விலகியதாகக் கூறிக்கொள்ளும் அல்லது நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவு இல்லாதுபோன்று காட்டிக்கொள்ள முயற்சி செய்யும் 42 உறுப்பினர்களும் வெறுமனே மக்கள் எதிர்ப்பைக் கண்டு தம்மை பாதுகாத்துக்கொள்ள மேற்கொண்ட தந்திரோபாயமாகவே இருக்கின்றன.

எந்தவொரு நிலையிலும் அவர்கள் நாட்டில் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் கடுமையான கஷ்ட நிலையை அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டு வெளிப்படையாக எடுத்துக் கூறத் தயங்குகின்றனர். ஜனாதிபதி தாம் எதிர்பாக்க இருப்பதாகக் கூறி மீண்டும் புதியதோர் அமைச்சரவையை ஏற்படுத்தினால் அதில் தமக்கு அமைச்சர் பதவியொன்று கிடைக்காமல் போகுமோ என்ற அச்சநிலையில் தவிப்பதையே காட்டுகின்றது.

அதேநேரம் மக்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் தலைவணங்கி ஜனாதிபதி பதவி விலகினாலும் அடுத்து அந்த இடத்தை நிரப்ப இருப்பதும் பிரதமர் என்ற வகையில் அதுவும் ஒரு ராஜபக்ஷவே என்பதால் ஆளும் கட்சிக்குள் இருக்கும் சுயநலமாக செயற்படுவதைக் கூறும் 42 பேரின் நடத்தை இவ்வாறு அமைய மற்றுமொரு காரணமாக அமைகின்றது.

அத்துடன், இந்தளவு கொடூரமான எதிர்ப்பு வெளிப்பட்டாலும் அரசாங்கம் மௌனம் காக்கும்போது எதிர்வரும் நாட்களில் இந்த மக்கள் எதிர்ப்பு தாமாகவே தணிந்துவிடலாம் என்ற எதிர்பார்ப்பும் இருக்கின்றது. முன்னோக்கி வருவது சிங்கள, தமிழ் புதுவருடமாக இருப்பதால் - மக்கள் பொருட்களை வாங்குவதற்காக காலத்தை செலவிட வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருப்பதால் இதற்கு அப்பால் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக நேரத்தை செலவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

இப்படியானதொரு நிலையில் அரசாங்கத்தை பதவி விலகச்செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட மக்கள் எழுச்சி பலனற்றதாக மாறும் கவலையான நிலை தென்படுகின்றது. அத்துடன், அரசியலமைப்பின் ஏற்பாடுகள் ஜனாதிபதியை பதவி விலகச் செய்ய எவ்வாறான வகதியை ஏற்படுத்திபிருக்கின்றது என்பதே இங்கு முக்கியமானதாகும். தற்போதைய நிலையில் பதவியில் இருக்கின்ற ஜனாதிபதியை பதவி விலகச் செய்யவேண்டுமானால் இருக்கின்ற ஒரே வழி ஒன்றில் ஜனாதிபதி தாமாகவே பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். அல்லது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அரசவாசிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களது கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு எதிரான ஒரு நம்பிக்கையில்லைப் பிரேரணை கொண்டுவரப்பட்டு அந்த பிரேரணை மூன்றில் இரண்டுபெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் அத்தியாயம் 07 இல் உறுப்புரை 38 (1) இற்கமைய ஜனாதிபதியின் பதவி வகிதிறுப் போவதற்காக சொல்லப்பட்ட வேறு எந்த காரணமும் செல்லுபடியாகக் கூடியதாக இல்லை. உறுப்புரை 38 (1) இற்கமைய பின்வரும் வழிகளில் ஜனாதிபதியின் பதவி இல்லாமல் போக வேண்டும். அவர் இறப்பதன் மூலம், சுயாநாயகருக்கு முகவரியிட்ட கடிதம் மூலம் தமது கைப்பட எழுதப்பட்ட கடிதத்தின் ஊடாக பதவி விலகியதாக அறிவித்தல், அவர் இலங்கைப் பிரஜையாக இல்லாதிருத்தல் (இந்த சந்தர்ப்பம் அரசியல் அமைப்பின் 20ஆவது திருத்தம் மூலம் பலமிழக்கச் செய்யப்பட்டது) ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவர் அந்த பதவியை அரசியலமைப்பு குறிப்பிடும் அந்த பதவி தொடங்கிய திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பதவியை ஏற்காமல் இருந்தால், அல்லது ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவர் முறையாக தெரிவாகியவர் அல்ல என்றும் அந்தப் பதவிக்கு தெரிவாக வேண்டியவர் வேறொருவர் என்று உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும்போது ஜனாதிபதியின் பதவி அற்றுப் போகலாம்.

இவை தவிர, உறுப்புரை 38 (2) இன்படி ஜனாதிபதி அவரது உடற் பலவீனம் காரணமாக பதவியை கடமைப் பொறுப்புகளை நிறைவேற்ற முடியவென்று கருதுகின்றபோது அல்லது பின்வரும் காரணங்களின் அடிப்படையில் :

38 (2) (i) ஜனாதிபதி அரசியலமைப்பினை வேண்டும் என்றே மீறிய குற்றம்

(ii) தேசத் துரோக குற்றம் புரிதல்

(iii) இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு

(iv) தமது பதவிக்குரிய அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு அல்லது துர்நடத்தை

(v) ஒழுக்கக்கோட்டை வெளிப்படுத்தும் ஏதேனும் சட்டத்தின் கீழான நிரூபிக்கத்தக்க காரணங்கள்.

இந்த காரணங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளை அல்லது குற்றச்சாட்டை முன்வைத்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களது கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு எதிரான ஒரு நம்பிக்கையில்லைப் பிரேரணை கொண்டுவரப்பட்டு அந்த பிரேரணை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் அத்தியாயம் 07 இல் உறுப்புரை 38 (1) இற்கமைய ஜனாதிபதியின் பதவி வகிதிறுப் போவதற்காக சொல்லப்பட்ட வேறு எந்த காரணமும் செல்லுபடியாகக் கூடியதாக இல்லை. உறுப்புரை 38 (1) இற்கமைய பின்வரும் வழிகளில் ஜனாதிபதியின் பதவி இல்லாமல் போக வேண்டும். அவர் இறப்பதன் மூலம், சப

கட்டுரையாளர்:
யோ.தர்மராஜ்
dharmarajmayuran@gmail.com

"கோ.ஹோம் கோட்டா"

"கோ ஹோம் கோட்டா" என்ற ஒற்றை வார்த்தை இலங்கையையும் தாண்டி முழு உலகத்திலும் பலமாக ஒலிக்கிறது. பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்து அரசியல் நெருக்கடியாக உருமாறியுள்ளதால் ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரசாங்கமும் உடனடியாக பதவி விலகவேண்டுமென முழு நாடும் முழங்குகிறது.

பொருளாதார நெருக்கடியை தீர்க்கத் தவறிய அரசு இன்று மக்களின் எதிர்ப்புக்கும் முகங்கொடுக்க முடியாது தினறுகிறது. எவ்வாறு மக்களை கட்டுப்படுத்துவது, என்ன செய்வது, யார் கூறினால் கேட்பார்கள் என எதுவும் தெரியாது திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது.

எந்தவொரு ஆளுந்தரப்பு எம்.பியும் வீதிக்கு மாத்திரமல்ல, நாடாளுமன்றம் சென்றுகூட வீடு திரும்ப முடியாத சூழல் உருவாகியிருப்பது இலங்கை அரசியலில் கரும்புள்ளியாக உருமாறிக்கொண்டிருக்கிறது. எம்.பிக்கள், அதிகாரிகள் என அனைவரின் வீடுகள், காரியாலயங்கள் மற்றும் வாகனங்கள் என எதைக் கண்டாலும் அடித்து நொறுக்க வேண்டும் என்ற உச்சக்கட்ட கோபத்தில் இருக்கின்றனர் மக்கள்.

ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என ஆரம்பித்து இன்று நாடாளுமன்றத்திலுள்ள 225 எம்.பிக்களும் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என முழங்குகிறது நாடு. முழக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கமும் ஊடங்குச் சட்டம் என எல்லாவற்றையும் ஆயுதமாக பயன்படுத்திவிட்டது. மக்களின் முழக்கமும் எதிர்ப்பும் குறைந்தபாடில்லை.

நெருக்கடிகளுக்கு பயந்து பதவி விலகுவதோ அல்லது மற்றவரை பதவி நீக்குவதோ பொருத்தமானதல்ல. நெருக்கடிகளுக்கு தீர்வை வழங்க வேண்டும் என்பதே மக்களின் மற்றொரு கோரிக்கையாகவுள்ளது.

என்கு நடந்தது தவறு?

அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலரும் கூட இந்த பொருளாதார நெருக்கடி தொடர்பாக அரசுக்குள் முரண்பட்டுக்கொண்டதோடு நின்றுவிடாது, அரசாங்கத்திலிருந்தும் விலகி வந்து அரசை கடுமையாக சாடத் தொடங்கினர். நிதி அமைச்சரின் அக்கறையீனமே நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்துக்கொண்டிருப்பதாக அரசின் பங்காளிகள் நேரடியாகவே ஏளகனைத் தாக்குதல் நடத்தினர். உண்மையில் பொருளாதார நெருக்கடிகள் ஆரம்பித்தவுடன் அதனை நிர்வகிப்பதற்கு அரசாங்கம் தவறியதை தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது.

வரி குறைப்பு, கடன் மீள்சூழ்ச்சி, வரையறையற்ற பண அச்சீடு என்பவற்றோடு நிபுணர்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்காது தான்தோன்றித்தனமாக செயற்பட ஆரம்பிக்கும்போதே இலங்கை பொருளாதாரத்தின் நெருக்கடி நிலைமை உக்கிரமடைய ஆரம்பித்தது. கையிருப்பிலிருந்த அந்நிய செலாவணியும் தீரும் தறுவாயில் இருந்தபோது, நாளுக்கு நாள் வரலாற்றில் இல்லாதவாறு பணத்தை அச்சிட்டது அரசு. வரையறை இல்லாத பண அச்சீடு காரணமாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைய ஆரம்பித்தது, பணவீக்கம் உயர்வடைந்தது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து டொருக் கான பெறுமதி அதிகரித்தமையினால் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களின்போது கொடுக்கவேண்டிய டொலரை பெற்றுக்கொள்ள முடியாது பெரும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது இலங்கையின் பொருளாதாரம். இந்த நெருக்கடியால் எரிவாயு, எரிபொருள், பால்மா, அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், மின் உற்பத்தியும் தடைப்பட்டதால் நாடு இருளில் மூழ்கியது.

எப்போது ஆரம்பித்தது மக்களின் போராட்டம்

ஆட்சிக்கு வந்தவுடன் கேதைப பலனத் திட்டத்தைக் கொண்டுவந்த அரசாங்கம், எவ்வித துரநோக்கு திட்டமிடலும் இல்லாது உடனடியாக அமுல்படுத்தியதுடன், இரசாயன உர இறக்குமதிக்கும் தடை போட்டது. இந்தத் தடை இலங்கை விவசாயத்தையே தலைகீழாக புரட்டிப்போட்டது. இரசாயன உரத்துக்கு பழக்கப்பட்ட நிலங்கள் உமின்றி வறண்டுபோயின.

இரசாயன உரம் மாத்திரமல்ல, கேதைப் பலனையும் இல்லாதபோனதால் பெரும்போகத்தில் 50 வீதமான விளைச்சல் இல்லாதுபோனது. தங்களுடைய வினைனலுக்கு உரத்தைத் தேரி, முதல் தடவையாக மக்கள் வீதிக்கு இறங்க ஆரம்பித்தனர். இந்தப் போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்க அரசாங்கம் இராசயன உரத்தை இறக்குமதி செய்ய ஆரம்பித்தது.

இந்தப் பிரச்சினை தணியும்போது மற்ற பக்கத்தில் பொருளாதார நெருக்கடியால் எரிவாயு, எரிபொருள், பால்மா, அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் நாட்டில் வரிசை யுகமொன்று உருவாகியது. நாட்கள் செல்லச்செல்ல வரிசைகள் போராட்டக்களமாக மாற ஆரம்பித்தன.

முதலில், "நாங்கள் வாழ எங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களைக் கொடு" என ஆரம்பித்த போராட்டங்கள், தற்போது 'கோ ஹோம் கோட்டா' என்ற போராட்டமாக மாறியுள்ளன. ஒருசில மாவட்டங்களில் ஆரம்பித்த போராட்டங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இன்று முழு நாட்டிலும் முன்னெடுக்கப்படுகின்றன.

"கோ ஹோம் கோட்டாவும் அரசின் நிலைப்பாடும்"

முழு நாடும் முழு உலகமும் "கோ ஹோம் கோட்டா" என முழங்குகின்றன. ஜனாதிபதிக்கு 69 இலட்சம் மக்கள் வாக்களித்துள்ளதால், அவர் ஒருபோதும் பதவி விலகமாட்டார். சவால்களுக்கு நாங்கள் முகங்கொடுப்போம் என ஆளுந்தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பொ்ணான்டோ சபையில் திட்டவட்டமாக அறிவித்து மார்தட்டிக்கொள்கிறது அரசு.

ஜனாதிபதிக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் கடந்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது தான் பதவி பெரும்பான்மையை சாட்ட முடியும் என்றாலும், இந்தத் தெரிவுக்கு எதிரணிகள் தயாரில்லை. இதனால் அரசியலமைப்பு மற்றும் அரசியல் நெருக்கடி மேலும் உக்கிரமடைந்துள்ளன.

சட்டம் என்ன சொல்கிறது?

2020 ஆகஸ்ட் 05இல் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதன்படி தற்போதைய 9ஆவது நாடாளுமன்றத்துக்கு 2025 வரை பதவிக்காலம் உள்ளது. இந்த காலப்பகுதிக்கு முன்னர் - நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டுமானால், அரசியலமைப்பின் பிரகாரம், முதலாவது நாடாளு மன்ற கூட்டத்தொடர் நடைபெற்ற நாளிலிருந்து இரண்டரை வருடங்களுக்கு பிறகே ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும். இதற்காக 2023 பெப்ரவரி வரை காத்திருக்கவேண்டிவரும்.

வேறுப்புகள் மேலும் மேலும் உக்கிரமடைவதால் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கோரினாலும் அந்த பதவிகளுக்கான மாற்றீடுகள் என்ன என்ற கேள்விக்கு மக்களிடம் பதி லில்லை என்பதே நிதர்சனம். மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலகினால் நெருக்கடிகள் மேலும் உக்கிரமடையலாம் என்பதே நிபுணர் களின் கருத்தா கவுள்ளது. ஜனாதிபதி பதவி விலகினால் அவ்விடத்திற்கு பிரதமரே நியமனம் பெறுவார். 19 மற்றும் 20ஆவது திருத்தத் திற்கமைய தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மூன்றாவது முறையாக ஜனாதிபதிய நியமிக்க முடியாது.

இவர் இல்லாதபோது, நாடாளுமன்றத்திலிருக்கும் அடுத்த நபர் யார்? அவரையும் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? அரசாங்கமே பதவி விலகினால் எதிர்க்கட்சியால் ஆட்சியமைக்கும் பெரும்பான்மையை பெற முடியுமா? அதற்கு அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்குமா என்பதும் கேள்விக்குறியே.

மக்களின் எதிர்பார்ப்பால் அமைச்சரவை கலைக்கப்பட்டதால் நாட்டில் தற்போது அமைச்சரவை இல்லை. ஏதேனும் அவசரமான நிலையோ அல்லது சுகதாரfar நெருக்கடியோ ஏற்பட்டால் அதனை நிர்வகிக்க அமைச்சர்கள் இல்லை. நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட அலி சப்ரி பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அறிவித்தபோதிலும் தற்போது இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்குள்ளே இவ்வாறான குழப்பங்கள் இருக்கும்போது, தற்போதைய நெருக்கடிக்கு எவ்வாறான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும். நிதி உதவிக்கான சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பேசுவதற்கு நிதி அமைச்சர் இல்லை. நாடு மிகநீண்டகாலமாக இல்லாதபோது அவர்களும் உதவியெய்ய முன்வரமாட்டார்கள்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என மக்கள் கோரியதால் அவர் தன்னுடைய அமைச்சரவையை கலைத்தார். இன்று அமைச்சரவை இல்லாத நாடாக இலங்கை, வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. இந்த அதேபோல் விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமெனில், அதற்கான யோசனையொன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு மூன்றி லிரண்டு பெரும்பான்மை அவசியமில்லை. அரசியலமைப்பில் இந்த இரு ஏற்பாடுகள் மட்டுமே உள்ளன.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைகளுக்கு அவர் செவிசாய்த்து பதவி விலக முடியும். அவ்வாறு அவர் விரும்பவில்லை என்றால், அரசியலமைப்புக்கு அமைய அவரை பதவியிலிருந்து நீக்க வேண்டும். ஜனாதிபதிக்கெதிராக குற்றப்பிரேரணை ஒன்றினை நாடாளு மன்றத்தில் கொண்டுவந்து ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்யும் வழிமுறைகளைப் பற்றி அரசியலமைப்பில்

38 (2)ஆம் உறுப்புரையின்படி விளக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை எழுத்து மூலமாக நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மைக்கு குறையாதோரின் கையொப்பத்துடன் சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டும். 2/3 இற்கு குறைவாக இருப்பின், குறித்த குற்றப் பிரேரணையை சபாநாயகரால் மறுக்கவும் முடியும்.

குறித்த பிரேரணை நாடாளுமன்ற விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். விவாதம் முடிவில் நடத்தப்படும் வாக்கெடுப்பில் 2/3 பெரும்பான்மை வாக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர், அதற்கு உயர்நீதி மன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கிய பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, நாடாளுமன்றத்தில் மீண்டும் 2/3 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யலாம். இதனை தவிர, மக்கள் எந்தப் போராட்டங்களை முன்னெடுத்தாலும் ஜனாதிபதியை பதவி நீக்குவதென்பது கேள்விக்குறியே?

தீர்வுதான் என்ன?

ஜனாதிபதி, அவரின் அரசாங்கத்தின் மீது மக்களுக்குள்ள வெறுப்பை மேலும் மேலும் உக்கிரமடைவதால் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கோரினாலும் அந்த பதவிகளுக்கான மாற்றீடுகள் என்ன என்ற கேள்விக்கு மக்களிடம் பதி லில்லை என்பதே நிதர்சனம். மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலகினால் நெருக்கடிகள் மேலும் உக்கிரமடையலாம் என்பதே நிபுணர் களின் கருத்தா கவுள்ளது. ஜனாதிபதி பதவி விலகினால் அவ்விடத்திற்கு பிரதமரே நியமனம் பெறுவார். 19 மற்றும் 20ஆவது திருத்தத் திற்கமைய தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மூன்றாவது முறையாக ஜனாதிபதிய நியமிக்க முடியாது.

இவர் இல்லாதபோது, நாடாளுமன்றத்திலிருக்கும் அடுத்த நபர் யார்? அவரையும் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? அரசாங்கமே பதவி விலகினால் எதிர்க்கட்சியால் ஆட்சியமைக்கும் பெரும்பான்மையை பெற முடியுமா? அதற்கு அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்குமா என்பதும் கேள்விக்குறியே.

மக்களின் எதிர்பார்ப்பால் அமைச்சரவை கலைக்கப்பட்டதால் நாட்டில் தற்போது அமைச்சரவை இல்லை. ஏதேனும் அவசரமான நிலையோ அல்லது சுகதாரf நெருக்கடியோ ஏற்பட்டால் அதனை நிர்வகிக்க அமைச்சர்கள் இல்லை. நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட அலி சப்ரி பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அறிவித்தபோதிலும் தற்போது இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்குள்ளே இவ்வாறான குழப்பங்கள் இருக்கும்போது, தற்போதைய நெருக்கடிக்கு எவ்வாறான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும். நிதி உதவிக்கான சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பேசுவதற்கு நிதி அமைச்சர் இல்லை. நாடு மிகநீண்டகாலமாக இல்லாதபோது அவர்களும் உதவியெய்ய முன்வரமாட்டார்கள்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என மக்கள் கோரியதால் அவர் தன்னுடைய அமைச்சரவையை கலைத்தார். இன்று அமைச்சரவை இல்லாத நாடாக இலங்கை, வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. இந்த அதேபோல் விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமெனில், அதற்கான யோசனையொன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு மூன்றி லிரண்டு பெரும்பான்மை அவசியமில்லை. அரசியலமைப்பில் இந்த இரு ஏற்பாடுகள் மட்டுமே உள்ளன.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைகளுக்கு அவர் செவிசாய்த்து பதவி விலக முடியும். அவ்வாறு அவர் விரும்பவில்லை என்றால், அரசியலமைப்புக்கு அமைய அவரை பதவியிலிருந்து நீக்க வேண்டும். ஜனாதிபதிக்கெதிராக குற்றப்பிரேரணை ஒன்றினை நாடாளு மன்றத்தில் கொண்டுவந்து ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்யும் வழிமுறைகளைப் பற்றி அரசியலமைப்பில்

38 (2)ஆம் உறுப்புரையின்படி விளக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை எழுத்து மூலமாக நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மைக்கு குறையாதோரின் கையொப்பத்துடன் சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டும். 2/3 இற்கு குறைவாக இருப்பின், குறித்த குற்றப் பிரேரணையை சபாநாயகரால் மறுக்கவும் முடியும்.

குறித்த பிரேரணை நாடாளுமன்ற விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். விவாதம் முடிவில் நடத்தப்படும் வாக்கெடுப்பில் 2/3 பெரும்பான்மை வாக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர், அதற்கு உயர்நீதி மன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கிய பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, நாடாளுமன்றத்தில் மீண்டும் 2/3 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யலாம். இதனை தவிர, மக்கள் எந்தப் போராட்டங்களை முன்னெடுத்தாலும் ஜனாதிபதியை பதவி நீக்குவதென்பது கேள்விக்குறியே?

தீர்வுதான் என்ன?

ஜனாதிபதி, அவரின் அரசாங்கத்தின் மீது மக்களுக்குள்ள வெறுப்பை மேலும் மேலும் உக்கிரமடைவதால் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கோரினாலும் அந்த பதவிகளுக்கான மாற்றீடுகள் என்ன என்ற கேள்விக்கு மக்களிடம் பதி லில்லை என்பதே நிதர்சனம். மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலகினால் நெருக்கடிகள் மேலும் உக்கிரமடையலாம் என்பதே நிபுணர் களின் கருத்தா கவுள்ளது. ஜனாதிபதி பதவி விலகினால் அவ்விடத்திற்கு பிரதமரே நியமனம் பெறுவார். 19 மற்றும் 20ஆவது திருத்தத் திற்கமைய தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மூன்றாவது முறையாக ஜனாதிபதிய நியமிக்க முடியாது.

இவர் இல்லாதபோது, நாடாளுமன்றத்திலிருக்கும் அடுத்த நபர் யார்? அவரையும் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? அரசாங்கமே பதவி விலகினால் எதிர்க்கட்சியால் ஆட்சியமைக்கும் பெரும்பான்மையை பெற முடியுமா? அதற்கு அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்குமா என்பதும் கேள்விக்குறியே.

மக்களின் எதிர்பார்ப்பால் அமைச்சரவை கலைக்கப்பட்டதால் நாட்டில் தற்போது அமைச்சரவை இல்லை. ஏதேனும் அவசரமான நிலையோ அல்லது சுகதாரf நெருக்கடியோ ஏற்பட்டால் அதனை நிர்வகிக்க அமைச்சர்கள் இல்லை. நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட அலி சப்ரி பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அறிவித்தபோதிலும் தற்போது இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்குள்ளே இவ்வாறான குழப்பங்கள் இருக்கும்போது, தற்போதைய நெருக்கடிக்கு எவ்வாறான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும். நிதி உதவிக்கான சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பேசுவதற்கு நிதி அமைச்சர் இல்லை. நாடு மிகநீண்டகாலமாக இல்லாதபோது அவர்களும் உதவியெய்ய முன்வரமாட்டார்கள்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என மக்கள் கோரியதால் அவர் தன்னுடைய அமைச்சரவையை கலைத்தார். இன்று அமைச்சரவை இல்லாத நாடாக இலங்கை, வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. இந்த

போராட்டத்தை மக்களும் கைவிடமாட்டார்கள். ஜனாதிபதியையும் அவர் தலைமையிலான அரசையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எனக் கூறினாலும் அடுத்து என்ன செய்வது என்பது குறித்து அவர்களிடத்திலும் தீர்வு ஒன்றும் இல்லை. தலைமைத்துவம் இல்லாத போராட்டம் என்பது இரத்த ஆறு ஓட இடமளிக்கும்.

பிரதமர் மஹிந்தவை அப்படியிலிருந்து தீர்த்துவதற்கு அரசு தயாரில்லை. தரப்பில் ஜனாதிபதியும் பிரதமரும் நியமிக்கப்பட வேண்டும் என்பதால் எதிர்க்கட்சிகளும் அரசுக்கு ஆதரவளிக்க மறுக்கிறது. அவர்களுக்கு நாட்டின் பிரச்சினையை தீர்ப்பதற்கு தேவை இல்லை.

அமைச்சரவை இல்லாது நாடு வங்குரோத்தடைந்துள்ளது. நாட்டுக்கு புதிய பிரதமர் மற்றும் புதிய இடைக்கால அரசாங்கமே ஒரே தீர்வு. நாடாளுமன்றத்தை கலைத்து, தேர்தல் நடத்தினால் இப்போதிருக்கும் எந்த கட்சிக்கும் 5 ஆசனங்களைக் கூட பெற முடியாது. தற்போதைய நெருக்கடி தொடர்ந்தால் மக்கள் பிச்சை எடுக்க நேரிடும்.

விஜயதாச ராஜபக்ஷ எம்.பி

எப்போது ஆரம்பித்தது மக்களின் போராட்டம்

ஆட்சிக்கு வந்தவுடன் கேதைப பலனத் திட்டத்தைக் கொண்டுவந்த அரசாங்கம், எவ்வித துரநோக்கு திட்டமிடலும் இல்லாது உடனடியாக அமுல்படுத்தியதுடன், இரசாயன உர இறக்குமதிக்கும் தடை போட்டது. இந்தத் தடை இலங்கை விவசாயத்தையே தலைகீழாக புரட்டிப்போட்டது. இரசாயன உரத்துக்கு பழக்கப்பட்ட நிலங்கள் உமின்றி வறண்டுபோயின.

இரசாயன உரம் மாத்திரமல்ல, கேதைப் பலனையும் இல்லாதபோனதால் பெரும்போகத்தில் 50 வீதமான விளைச்சல் இல்லாதுபோனது. தங்களுடைய வினைனலுக்கு உரத்தைத் தேரி, முதல் தடவையாக மக்கள் வீதிக்கு இறங்க ஆரம்பித்தனர். இந்தப் போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்க அரசாங்கம் இராசயன உரத்தை இறக்குமதி செய்ய ஆரம்பித்தது.

இந்தப் பிரச்சினை தணியும்போது மற்ற பக்கத்தில் பொருளாதார நெருக்கடியால் எரிவாயு, எரிபொருள், பால்மா, அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் நாட்டில் வரிசை யுகமொன்று உருவாகியது. நாட்கள் செல்லச்செல்ல வரிசைகள் போராட்டக்களமாக மாற ஆரம்பித்தன.

முதலில், "நாங்கள் வாழ எங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களைக் கொடு" என ஆரம்பித்த போராட்டங்கள், தற்போது 'கோ ஹோம் கோட்டா' என்ற போராட்டமாக மாறியுள்ளன. ஒருசில மாவட்டங்களில் ஆரம்பித்த போராட்டங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இன்று முழு நாட்டிலும் முன்னெடுக்கப்படுகின்றன.

"கோ ஹோம் கோட்டாவும் அரசின் நிலைப்பாடும்"

முழு நாடும் முழு உலகமும் "கோ ஹோம் கோட்டா" என முழங்குகின்றன. ஜனாதிபதிக்கு 69 இலட்சம் மக்கள் வாக்களித்துள்ளதால், அவர் ஒருபோதும் பதவி விலகமாட்டார். சவால்களுக்கு நாங்கள் முகங்கொடுப்போம் என ஆளுந்தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பொ்ணான்டோ சபையில் திட்டவட்டமாக அறிவித்து மார்தட்டிக்கொள்கிறது அரசு.

ஜனாதிபதிக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் கடந்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது தான் பதவி

விலகப்போவதில்லை என ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தை பதவி விலகுமாறு அழுத்தங்கள் இருப்பதால் ஜனாதிபதியின் அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளது. இதுவரை நான்கு அமைச்சர்களைக்கொண்டே நாட்டின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதுவும் தற்காலிகம் எனக் கூறுகிறது அரசு.

இடைக்கால அரசுக்கு அழைப்பு

மக்களின் அந்தக் கோரிக்கையை ஏற்பதற்கு அரசு தயாரில்லை. மாறாக, கூட்டரசை அமைக்கும் நோக்கில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அழைப்பை பிரதான எதிர்க்கட்சி உட்பட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் நிராகரித்துள்ளன.

நாடாளுமன்றத்தில் அரசுக்கான ஆதரவை 42 உறுப்பினர்கள் விலக்கிக் கொண்டுள்ளனர். சுயாதீனமாக செயற்பட்டபோவதாக அறிவித்துள்ளனர். நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து எதிரணிகளும், அரசிலிருந்து வெளியேறியவர்களும் ஒன்றிணைந்தால் ஆட்சியமைப்பதற்கான

ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென மக்களே கூறுவதால், அவர் விரும்பினால், சபாநாயகருக்கு கடிதமொன்றை எழுதிக் கொடுத்துவிட்டு தேவையான நேரத்தில் பதவியை இராஜினாமா செய்ய முடியும்.

அவ்வாறு ஜனாதிபதி பதவி விலகினாலோ அல்லது வெளிநாடு சென்றாலோ தற்காலிகமாக ஜனாதிபதிபொறுப்பை நியமிக்க முடியும். அரசியலமைப்புக்கமைய அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரதமர் தற்காலிக ஜனாதிபதியாக செயற்படலாம். அவ்வாறு பிரதமரால் அந்த பதவியை ஏற்க முடியாவிட்டால் சபாநாயகர் அந்த தற்காலிக ஜனாதிபதியாக கடமையாற்றலாம்.

எமது நாட்டை பொறுத்தவரையில் ஜனாதிபதி பதவி வெற்றிடமானால் பிரதமர் அந்த பதவியை ஏற்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி இராஜினாமா செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த சுருக்கத பதிவு செய்யவில்லை. யார் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும் குறித்த நபர் பதவியை இராஜினாமா செய்தால், பிரதமர் அந்த பதவிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படும்போதும் ஜனாதிபதியாக நியமிக்கப்படும் போது கவனத்தில் கொள்ளப்படும் தலைமைகள் பெரிதும் தாக்கம் செலுத்தும்.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படும் பட்சத்தில், அதற்கான தீர்மானத்தை உயர் நீதிமன்றமே வழங்க வேண்டும். காரணம் அரசியலமைப்பை பரிசீலிக்கும் உரிமை உயர் நீதிமன்றத்துக்கு மாத்திரமே இருக்கிறது.

தேர்தல் ஆணைக்குழு முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய

'மாற்றத்தை எம்மிடமிருந்தே தொடங்குவோம்'

இலங்கையின் ஆட்சியும், அதிகாரங்களும், அவலங்களும்

- அக்கினியான் -

ஆட்சியும் அதிகாரங்களும் ஆடும் நாற்காலிகளுக்கு சமமானது என்பதற்கு உதாரணம் தற்போது இலங்கையின் தலைவருக்கு ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியும் மக்களின் ஆர்ப்பாட்ட அகோரங்களுமாகும். தனக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக இடைக்கால அரசொன்றை அமைக்க கட்சித் தலைவர்களையும் நாடாளுமன்றில் அங்கம் பெறும் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணையுமாறு பகிரங்கமான அழைப்பொன்றை விடுத்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

"நாட்டில் ஏற்பட்டிருக்கும் தேசிய நெருக்கடிக்குத் தீர்வுகாண ஆதரவு தாருங்கள்" என்பது அவரின் அந்த அழைப்பின் நோக்காக காணப்படுகிறது. "113 ஆசனங்களைக்கொண்ட எவரும் வாருங்கள். நாட்டைக் கையளிக்க நான் தயாராக இருக்கிறேன். அமைச்சுப் பதவிகளை ஏற்று நாட்டின் நெருக்கடியை தீர்க்க உதவுங்கள்" என பகிரங்க அழைப்பொன்று அவரால் விடுக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதிக்கு எதிராக "கோட்டாபய நீ பதவி விலகவேண்டும், பிரதமர் மஹிந்தவின் ஆட்சி எமக்கு வேண்டாம். ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் அனைவரிடமிருந்தும் நாட்டைப் பாதுகாக்க போராடுகிறோம். அனைவரும் எமது போராட்டத்தில் கலந்துகொள்ளுங்கள். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவிவிலகச் சொல்லுங்கள். இவர்கள் எமக்கு வேண்டாம்" என்று தெருத் தெருவாக மக்கள் கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதுதான் ஜனாதிபதியின் இந்த அழைப்புக்குக் காரணமாக இருக்கலாம்.

மக்களின் இந்தப் போராட்டத்தினால் நாடு கதிகலங்கிக் காணப்படுகிறது. குழப்பமும் கொந்தளிப்பும் அமைதியின்மையும் நாட்டை சீரழியும் நிலைக்குத் தள்ளிவிடுமோ என்று எல்லோரும் பயப்படுகிறார்கள்.

இப்போராட்டத்தின் பின்னணியில் ஏதாவது கட்சிகள் இருக்கிறதா? அரசியல்வாதிகள் உள்ளனரா? நாடுகள் உள்ளதா? என்று துருவிப்பார்த்தால் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்போராட்டம் மக்களின் தன்னிச்சையான போராட்டமாகவே பார்க்கப்படுகிறது. இப்போராட்டத்தில் இளைஞர்கள், யுவதிகள், சட்டத்தரணிகள், அதிகாரிகள், கல்விமான்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் என்ற அனைத்து தரப்பினரும் பங்குகொண்டு வருகிறார்கள். சிங்களவர்கள், முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் என்ற வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினரும் பங்குகொண்டுவருவதை காணமுடிகிறது. சுருக்கமாகக் கூறுவதாயின், பசிக்கும் பட்டினிக்குமான போராட்டமாக இது மாறியிருக்கிறது. ஆளும் அரசாங்கத்தை மாற்றியமைக்கவேண்டுமென்ற தீவிரத்துடன், மக்கள் போராட்டங்களை நடத்துவதாக விவரிக்கப்படுகிறது.

இப்போராட்டங்களின் பிரதிபலிப்பாக அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருந்த அமைச்சர்கள் அனைவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03.04.2022) கூட்டாக பதவி விலகியுள்ளனர். நாடாளுமன்றில் ஆளுங்கட்சி ஆசனத்தில் அமைர்ந்துகொண்டு அரசை அலங்கரித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தாம் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அறிவித்து வருகிறார்கள். அரசுக்கு ஆதரவு நல்கியிருந்த இரட்டையர்களில் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவும் அவரது சகாக்கள் 14 பேரும் சுயாதீனமாக செயற்படப்போவதாக அரசாங்கத்திடமிருந்து கழன்றுள்ளனர். ஏலவே வெளியேறிய அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் "அமைச்சர்கள் கூட்டாக பதவி விலகியது மக்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கான வெற்றி" என வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக இருந்த ஜீவன் தெண்டமான் அமைச்சுப் பதவியிலிருந்து விலகி தனது கட்சியின் ஆதரவையும் விலத்திக் கொண்டுள்ளார். பங்காளிக்கட்சிகளாக இருந்த 11 கட்சிகள் என அரசுக்கு ஆதரவு நல்கிய உறவினர்களும் கைகழுவிய நிலையில் பிரதி சபாநாயகர் பதவி விலகியுள்ளார். மத்திய வங்கி ஆளுநர் உட்பட பல முக்கிய பதவியாளர்கள் பதவி விலகிக்கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரங்களான ஒஸ்லோ, பக்தாத் மற்றும் சிட்னி தூதரகங்கள் மூடப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டில் நடந்துகொண்டிருக்கும் ஒட்டுமொத்த நிகழ்வுகளையும் உற்றுப்பார்ப்பின் வரலாற்றில் என்றுமே நடந்திராத பயங்கர அரசியல் சூறாவளியொன்று இலங்கையில் வீசிக்கொண்டிருக்கிறது. ஆனால், மக்கள் யாரை பதவி விலகவேண்டுமென்று இப்போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்களோ அவர்கள் பதவி விலகிக்கொண்டதாக எந்தச் செய்தியும் வெளிவரவில்லை.

கோட்டாபயவின் அழைப்பை ஏற்று கூட்டரசாங்கத்தை அல்லது தேசிய அரசாங்கத்தை அமைக்க தாம் ஆதரவு வழங்கப்போவதில்லை என அல்லது அரசாங்கத்துடன் இணையப்போவதுமில்லை என பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ் மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் சமூக கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மலையக மக்களின் தமிழ் முற்போக்கு கூட்டணி என எல்லாத்தரப்பினரும் கூட்டரசாங்கத்துக்கோ அன்றி இடைக்கால அரசாங்கத்துக்கோ தாம் உடன்பாடில்லையென பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

இத்தைகைய நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டின் தலைவராகிய ஜனாதிபதிக்கோ பிரதமருக்கோ துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாத நிலையொன்று உருவாகியுள்ளது என்பது தெளிவாகவே உணர்த்தப்படுகிறது. உலகில் எந்தவொரு நாட்டு அரசில் வரலாற்றிலும் இத்தகையதொரு நெருக்கடியும் இக்கட்டுகளும் பதிவாகியுள்ளதாக இதுவரை அறியப்படவில்லை.

தமிழர்களுக்கு எதிரான இறுதிப் போர் நிகழ்ந்த காலத்தில் தெருவில் இறங்கி ஆதரவு தெரிவித்த தென்னிலங்கை மக்கள் பாற்சோற்றை அன்னதானமாக்கியவர்கள் இன்று அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் 69 இலட்சம் மக்களால் தெரிவாகிய தலைவருக்கு எதிராக இந்த நிலை இன்றைய ஆட்சியாளர்களுக்கு ஏன் உருவாகியது என்ற வரலாற்றுப் பின்னணியை அறியவேண்டியது அவசியமானது. சிங்கள தேசத்தை மீட்டெடுத்த துட்டகைமுனு என கோட்டாபயவை புகழ்ந்த சிங்கள மக்கள், இப்பொழுது அவரிடமிருந்து இலங்கையை மீட்பதற்கான போராட்டத்தை தொடங்கியிருக்கிறார்கள். பௌத்த - சிங்கள பேரினவாதத்தை வெளிக் கிளப்பி அந்த வெறி எழுச்சியில் 69 இலட்சம் சிங்கள மக்கள் வாக்களித்து இலங்கையின் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிய தலைவருக்கு எதிராக இன்று அதே மக்கள் தமது வெறித்தனமான கோபத்தை காட்டும் வகையில் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்புரட்சி செய்யும் துரதிர்ஷ்டவசமான நிலைமை இன்று இலங்கையில் நடந்துகொண்டிருக்கிறது.

இனவாதத்தையும் மதவாதத்தையும் உருவாக்கிய ராஜபக்ஷக்களின் குடும்பத்தை அழிக்கவேண்டும் என்று கோஷமிட்டபடி இப்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டங்களை நடத்திவருகிறார்கள்.

சுதந்திர இலங்கையில் இதுவரை அமைக்கப்பட்ட அரசாங்கங்களில் முதல் முறையாக அமைக்கப்பட்ட அந்த அரசாங்கத்துக்கு எதிராக ஒரு மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. அரச தலைவர் மற்றும் ஆட்சியாளர்கள் வீடுகள் சுற்றிவளைப்பு. ஐந்துபேர் கொண்ட குடும்ப ஆட்சிக்கெதிரான கிளர்ச்சியாக இது மாறியிருக்கிறது.

பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை வீழ்ச்சிகளைக்கண்டு விரக்தியடைந்த மக்களின் முதல் பொருளாதாரப் போராட்டமாக இது எண்ணப்படுகிறது. அரசியல் கட்சிகளின் தூண்டுதலோ பின்னணியோ அற்ற மக்கள் போராட்டம் என இது முன்வைக்கப்படுகிறது.

இதற்கப்பால் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற அச்சம். கலைக்கப்பட வேண்டுமென்ற கோஷங்கள் தீவிரமடைந்துவரும் நிலை. இராணுவமய ஆட்சி ஏற்படுமா என்ற பீதியும் பயமும் கொண்ட நிலை. இவையே இன்றைய மக்களின் போராட்டத்தின் உட்கிடக்கையாக விவரிக்கப்படுகிறது. இத்தனை சம்பவங்களுக்கும் நிலை குலைவுகளுக்கும் கால்கோள் இட்டதாக காணப்படுவது கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்னால் நடத்தப்பட்ட போராட்டம். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானோர் இளைஞர், யுவதிகள். மின்னாமல் முழங்காமல் இந்தப் போராட்டம் நடத்தப்படடிருக்கிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை (3.4.2022) அரசாங்கத்துக்கு எதிராக நாடுதழுவிய போராட்டத்துக்கு அழைப்புவிடப்பட்டிருந்த நிலையில் இப்போராட்டம் திடீரென ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ளது.

மின் துண்டிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருட் தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையேற்றம் என்பவற்றை முன்வைத்து விரக்தி, வெறுப்பு மேலிட ஆட்சியாளர்களுக்கும் ஜனாதிபதிக்கும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி வியாழக்கிழமை நுகேகொடையில் ஜனாதிபதி இல்லம் அமைந்துள்ள மிரிஹானை சந்தியில் மக்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவமானது நாடுதழுவிய அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டமாக மாறும் நெருக்கடியொன்றை உருவாக்கியிருந்தது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். அமைதியை கொண்டுவருவதற்காக மின்தடை தொலைத்தொடர்பு தடங்கல், ஊரடங்கு உத்தரவு என்ற பல தடைகளை விதித்ததோடு முடியாத நிலை காரணமாக இராணுவம், பொலிஸ் விசேட அதிரடிப்படை வரவழைத்து கண்ணீர்ப்புகைப் பிரயோகம், போலி இறப்பர் குண்டுவீச்சு, தண்ணீர்த் தாரகை பிரயோகம், தடியடி போன்றவற்றை பிரயோகித்து ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்தவேண்டிய நெருக்கடி நிலை உருவாகியிருந்தது. இந்த நெருக்கடி நிலை காரணமாக பல பொதுமக்கள் தாக்கப்படடிருக்கிறார்கள். ஊடகவியலாளர்கள் படுகாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் வாக்குவாதங்கள், வன்முறைகள் இடம்பெற்றிருக்கின்றன. பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பொலிஸார் காயத்துக்குள்ளாகியுள்ளனர். வாகனங்கள் பல தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன.

சுதந்திர இலங்கையில் பிரதமர் சிறிமாவோ ஆட்சி உருவாகிய 1970ஆம் ஆண்டுக்குப் பின் பட்டினிப் போரை எதிர்கொண்டிருக்கும் மக்களின் சுயசிந்தனைப் போராட்டமாக இது வெடித்துள்ளது. குறிப்பாக, 1953ஆம் ஆண்டு லங்கா சமாசமாஜக் கட்சியால் நடத்தப்பட்ட ஹர்த்தால் என்று அழைக்கப்பட்ட நிர்வாக முடக்கப் போராட்டத்துக்கு நிகராக ஆட்சியை மாற்றுவதற்கான போராட்டமாக இது பரிணமித்திருக்கிறது.

நாட்டில் குறிப்பாக, கோட்டாபய அரசாங்கத்துக்கு எதிராக ஏன் இந்த ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் ஏற்பட்டன என்பது சாதாரணமாக ஆராயப்படக்கூடிய அரசியல் நிகழ்ச்சியல்ல. ஆழமாகவும் அடிப்படை தேடலுடனும் ஆராயப்படவேண்டிய சம்பவங்களாகும்.

கொவிட் தொற்று காரணமாக 2000ஆம் ஆண்டுக்குப்பின் நாடு பொருளாதார ரீதியாக நோய்வாய்ப்படத் தொடங்கியது. உள்நாட்டு உற்பத்தியில்லை, ஏற்றுமதிகள் வீழ்ச்சி, உல்லாசப் பயணத்துறை படுமோசமாகியது. அலுவலக சேவைத்துறைகள் முடங்கிப்போயின. தனியார் வருமானங்கள் வீழ்ச்சி. கம்பனிகளும் தொழிற்சாலைகளும் கூட்டுத்தாபனங்களும் நட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. பெருந்தோட்டத்துறை மற்றும் சிறுகைத்தொழில்துறை ஸ்தம்பிதமடைந்தன. வெளிநாட்டு வியாபாரம், வர்த்தகம் ஆகியன தடுமாறிப்போயின. இச்சந்தர்ப்பத்தில்தான் விவசாயத்துக்கான உரப்பாவனையில் எந்தத் திட்டமுமின்றி ஜனாதிபதி கைவைத்துக்கொண்டதனால் ஒட்டுமொத்த விவசாயிகளின் சினத்துக்கும் ஆளாகவேண்டி வந்தது. விவசாயிகள் நாடுதழுவிய போராட்டங்களை நடத்தினார்கள். தங்கள் எதிர்ப்பை ஜனநாயக வழியில் முன்னெடுத்துச் சென்றார்கள்.

இதன் அடுத்த தலையெடுப்பு போராட்டமாக மாறியதுதான் பொருளாதார நெருக்கடிகளுக்கான ஆர்ப்பாட்டங்கள். மக்கள் தீப்பந்தங்களை ஏந்தி தமது எதிர்ப்பைக் காட்ட முற்பட்டதன் முற்றிய விளைவே இன்றைய போராட்ட வடிவங்களாகும். ஏலவே அரசியல் மாற்றங்கள் என்றவகையில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை காரணங்காட்டி 20ஆவது அரசியல் திருத்தம் மூலம் அதி வல்லமையுடைய அதிகாரங்களை தனதாக்கிக்கொண்டதுடன், நிர்வாக நடவடிக்கைகள் என்றவகையில் ஜனாதிபதி மேற்கொண்ட நியமனங்களில் இராணுவத் தளபதிகளையும் படைத்துறைசார் துறையினரையும் நியமித்து அரச நிர்வாகத்துறையை இராணுவமயமாக்க முயற்சிக்கிறார் என்ற குற்றச்சாட்டுகள் எதிர்க்கட்சியினராலும் அரச அதிகாரிகளாலும் முன்வைக்கப்பட்டது.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விஷம்போல் ஏறிக்கொண்டமை, பால்மா, அரிசி, சீனி, பருப்பு என்பவற்றுக்கு உண்டாக்கியிருந்த தட்டுப்பாடுகளும் விலையேற்றங்களும் எரிபொருட்களுக்கான தட்டுப்பாடுகள், விலையேற்றங்கள் குறிப்பாக, எரிவாயுக்கான தட்டுப்பாடுகள் சாதாரணமான பாமர மக்கள் தொடக்கம் மத்தியதர மற்றும் சீமான் வாழ்க்கை வாழ்கின்றவர்வரை நேரடியாக தாக்க முற்பட்டன.

எரிபொருள் தட்டுப்பாடு, டொலர் பற்றாக்குறை ஆகியவற்றை காரணங்காட்டி மின்வெட்டு என்ற அடிப்படை வசதிகள் மீது கை வைக்கத் தொடங்கியதன் விளைவே இன்றைய போராட்டங்களின் நதி மூலகங்களாக அமைந்தது. இது ஒரு புறமிருக்க, ஜனாதிபதியின் வெளிநாட்டு பொருளாதார அரசியல் கொள்கைகள் மீது நேரடியாகவே வெறுப்புக்கொண்ட சர்வதேச நாடுகளும் நிறுவனங்களும் மேற்கொண்ட சதியின் வெளிப்பாடு இவ்வாறு நச்சு வளையம்போல் நாட்டை தாக்கத் தொடங்கியது. அனுபவமற்ற அதிகாரிகளின் வழிகாட்டல்கள் ஆலோசனைகளை உள்வாங்கிக்கொண்டு எதையுமே தீர ஆராயாமல் ஜனாதிபதி நாட்டை வழிநடத்த முற்பட்டது, பிழையான வாய்ப்பாடாக போய்விட்டது.

அனைத்தையும் மீறிய பலவீனமாக மாறிய டொலர் பிரச்சினை இலங்கையின் பொருளாதாரத்துக்கு பாரிய பாதிப்பை உண்டுபண்ணியதாக பொருளாதார அறிஞர்கள் சுட்டிக்கட்டுகிறார்கள். இதுவே எரிபொருள் தட்டுப்பாடு, ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்பு, இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிப்பு, மின்துண்டிப்பு அனைத்து சுழற்சிக்கும் காரணமாகியது என்று எடுத்துக்காட்டப்பட்டது.

உள்நாட்டு பொருளாதாரத்துக்கு இத்தகைய ஊறுகளை விளைவித்த டொலரின் வீழ்ச்சியினால் இலங்கை அரசாங்கத்துக்கு அந்நியநாடுகளிடமும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமும் பெற்ற கடனுக்கான கடன் மீள்செலுத்துகை கடனுக்கான வட்டி இறுப்பு ஆகியவற்றில் பாரிய பாதிப்புகளை உண்டுபண்ணியதன் ஒட்டுமொத்த விளைவாகவே இன்றைய நெருக்கடிக்கான காரணங்களாக மாறியுள்ளன.

டொலர் இன்மை நெருக்கடி என்பது இவ்வாறு பொருளாதார முறையில் விளக்கப்படுகிறது. உலக வங்கியின் ஒரு பிரதான பிரிவாக இயங்கிவருவது சர்வதேச நாணய நிதியம். இதை ஆங்கிலத்தில் (I.M.F) என்று அழைப்பார்கள். உலக நாடுகளின் நாணய நிதிக்கொள்கையை தீர்மானிப்பதில் இந்நிறுவனம் பிரதான பங்கு வகிக்கிறது. இதில் முக்கியமான விடயம், அமெரிக்க டொலரின் பெறுமதியிலேயே நாடுகளின் நாணயங்கள் மதிக்கப்படும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இலங்கை தனது பொருளாதார நடவடிக்கைகளுக்காக குறித்த அளவு டொலரை இருப்பாக சர்வதேச நாணய நிதியத்திடம் வைத்திருக்க வேண்டும். உதாரணமாக, 6 பில்லியன் என அவை வரையறுக்கப்பட்டிருந்தபோதும் அந்தளவு இருப்பை பேணாததன் காரணமாகவும் டொலரை பெறும் வருமான மூலகங்களாக ஏற்றுமதிகள், சுற்றுலாத்துறை, நாடுகளின் கடன் சர்வதேச நிதி நிறுவனங்களின் கடன்கள், உதவிகள், நன்கொடைகள் என்பன தொடர்ச்சியாக வீழச்சி கண்டதே இன்றைய டொலர் பற்றாக்குறைக்கான காரணங்களாக மாறியுள்ளன. தற்போதைய போராட்ட நிலைமைகளையும் அதன் மறுதலிப்புகளையும் இனி பார்ப்போம்.

கடந்த ஒரு வாரமாக இந்த ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அரசாங்கம் அல்லது நாடாளுமன்றம் கலையும் மட்டும் இப்போராட்டங்கள் தொடரலாம். ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகவேண்டும் என்ற கோஷங்கள் அடங்கவேண்டுமாயின் அவ்வாறானதொரு நிலைமை தோன்றுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கக்கவேண்டும். ஜனாதிபதி பதவி விலகுவதற்கோ அன்றி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கோ சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரியவில்லை. இவை இடம்பெறவேண்டுமாயின் அரசியல் யாப்புக்கமைய காரியங்கள் நடந்தேறவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவரும் மக்கள் எழுப்பும் கோஷங்களும் பதாகை வாக்கியங்களும் எதை சுட்டி நிற்கிறதென்றால்.

ஜனாதிபதி அவர்களே, அமெரிக்காவுக்கு ஓடுங்கள். ஒரு குடும்பத்தை பாதுகாக்கவா அவசரகால சட்டத்தை பிறப்பித்துள்ளீர்கள்? இலங்கை மக்களாகிய எங்கள் எதிர்காலம் எங்கே? நீங்கள் திருடிய பணத்தை திறைசேரியில் இடுங்கள். டொலர் இல்லை என்று கூறி எமது பணத்தை வெளிநாட்டுக்கா அனுப்புகிறீர்கள்? மக்களே, பசிபோக்க எங்களோடு வந்து சேருங்கள். ராஜபக்ஷக்களின் ஆட்சி எமக்கு வேண்டாம்

என்ற ஆர்ப்பாட்டக்காரர்களின் கோஷங்களும் காரசாரமான வாக்கியங்களும் வசனங்களும் மக்களின் விசனங்களை வெளிப்படுத்துகின்றன. அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கும் எதிரான இத்தகைய நெருக்கடிகளும் ஆர்ப்பாட்டங்களும் ஆரவாரங்களும் மக்கள் எழுச்சிகளும் அரசாங்கத்தை மாற்றியமைக்கப் போகிறதா? ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை பதவியிலிருந்து தூக்கி எறியுமா? நாடாளுமன்றம் கலைக்கப்படுமா? என்ற சந்தேகங்களையும் எதிர்பார்ப்புகளையும் சங்கடங்களையும் உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில்தான் நாட்டின் நெருக்கடிகளை தீர்ப்பதற்கு உதவுங்கள், ஒத்துழைப்பு தாருங்கள், இடைக்கால அரசாங்கத்தை அமைக்க ஒன்றிணையுங்கள் என்று நாடாளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு கூவி அழைப்பு விடுத்திருக்கிறார் ஜனாதிபதியவர்கள். ஆனால், அவர்கள் எல்லோரும் மறுப்பு தெரிவித்துவருவதுடன், கட்சியோடு ஜனாதிபதியோடு கூடிக்குலாவியவர்கள் ஆளைவிட்டால் போதுமென்று அரசாங்கத்தைவிட்டு விலகிக்கொண்டிருக்கிறார்கள்.

இதேவேளை, மூன்றில் இரண்டு பலம் கொண்டவர்கள் பலம் பொருந்திய ஆட்சியை அமைத்துள்ளோம் என்று பெருமை பேசிக்கொண்டிருந்த இன்றைய ஆட்சியாளர்களான பொதுஜன பெரமுன பெரும்பான்மையை நாடாளுமன்றில் இழக்கும் அவல நிலையொன்று உருவாகியுள்ளது என்பதும் உண்மை நிலைவரமாக காணப்படுகிறது.

கோட்டாபயவின் வெற்றியைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலுக்குப்பின் ஸ்ரீலங்கா - பொதுஜன பெரமுனவுக்கான கூட்டணிக்கு 145 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றதுடன், மூன்றில் இரண்டு பெரும்பான்மைகொண்ட ஆதரவுடன் ஆட்சியமைக்கப்பட்டது. தற்போது அரசுக்கு எதிரான நெருக்கடிகள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் தீவிரமாக தலைதூக்கி நிற்கும் நிலையில், அரசில் அங்கம் வகித்த பங்காளிக்கட்சிகள் மற்றும் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் சிலர் ஆகியோர்கொண்ட குழுவான 42 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் சுயாதீனமாக செயற்படப்போவதாக அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர். இதன் காரணமாக அரசாங்கத்தின் ஆட்சிப்பலம் ஈடாடிக்கொண்டிருக்கிறது.

மேற்படி குழுவினர் (42) மூன்று பிரிவாக பிரிந்து தமது தீர்மானத்தை கடந்த 5ஆம் திகதி (5.4.2022) நாடாளுமன்றில் அறிவித்துள்ளனர். இந்த அறிவித்தல் காரணமாக ஆட்சியாளர்கள் பெரும்பான்மையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்றில் தற்போதைய ஆட்சியாளர்களுக்கே அறுதிப் பெரும்பான்மையுள்ளது என்றும் எடுத்துக்கூறப்படுகிறது. 42 பேரின் அறிவித்தல்படி பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 10 உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சியைச் சார்ந்த 14 உறுப்பினரும், பங்காளிக் கட்சியைச் சேர்ந்த 15 பேரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 2 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸை சேர்ந்த ஒருவரும் இதில் உள்ளடங்குகிறார்கள். இந்த 42 உறுப்பினர்களும் சுயாதீனமாக செயற்படப்போவதாக அறிவித்துள்ள நிலையில் ஆளும் அரசாங்கம் பலம் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலைமை தொடர்ந்து இருந்துவருமா அல்லது மாற்றமடையுமா என்பதை ஆருடமாகக் கூற முடியாவிட்டாலும் நாடாளுமன்றை கலைக்கவேண்டும், ஜனாதிபதி வீட்டுக்கு செல்லவேண்டும், பிரதமர் பதவி விலகவேண்டுமென்ற மக்களின் ஆக்கிரோஷமான கோஷங்களுக்கும் கொந்தளிப்புக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் முடிவு எவ்வாறு அமையப்போகிறதென்ற கேள்விக்கு மிக விரைவில் முடிவு காணப்படலாம். ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 14 உறுப்பினர்கள், விமல் வீரவங்ச தலைமையிலான 6 உறுப்பினர்கள், அத்துடன், வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில கட்சி மற்றும் வேறு கட்சிகளைச் சேர்ந்த சுமார் 50இற்கும் மேற்பட்டவர்கள் நாடாளுமன்றில் சுயாதீனமாக இயங்கப்போவதாக அறிவித்துள்ள நிலையில், பொதுஜன பெரமுன 113 என்ற பெரும்பான்மையை இழக்கவேண்டிய நிர்க்கதி ஏற்பட்டுள்ளது. அண்மையில் பொதுஜன பெரமுன சமர்ப்பித்த வரவு-செலவுத்திட்டத்துக்கு 160 வாக்குகள் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது இவ்விடத்தில் கவனத்துக்குரிய விடயமாக பார்க்கப்படவேண்டும். இவ்வாறான அரசுக்குத்தான் இன்றைய நிலை உருவாகியுள்ளது. இத்தகைய போக்கில் நாடாளுமன்றுக்கு என்ன நடக்கப்போகிறது? பிரதமர் என்ன செய்யப்போகிறார் ஜனாதிபதி என்ன? முடிவை எடுக்கப்போகிறார் என்பதெல்லாம் நிதானமாக அவதானிக்கப்பட வேண்டிய நிகழ்வுகள்.

நேரத்திற்கு உசிதமாக செயற்படாமையே அரசின் வீழ்ச்சிக்கு காரணம்

- சொல்கிறார் செந்தில் தொண்டமான்

(நேர்காணல் - நா.தினுஷா)
(படப்பிடிப்பு – எஷான் தசநாயக்க)

"நாட்டின் வருவாய்கள் நெருக்கடிக்குள்ளாக ஆரம்பித்தபோதே, டொலர் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கான திட்டங்களை அரசாங்கம் வகுத்து அவற்றை செயற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அதனை இந்த அரசாங்கம் செய்யவில்லை. அதன்காரணமாகவே, இன்று இந்த அரசாங்கம் வீழ்ச்சியை சந்தித்துள்ளது" என்று ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

"தமிழன்" வார இதழுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு,

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள். கட்சிக்குள் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளீர்கள்?

கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட கட்சி என்ற வகையில், மறைந்த தலைவர்களான சௌமிய மூர்த்தி தொண்டமான் மற்றும் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரால் கட்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அந்த கொள்கைகளுக்கு ஏற்றவாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறும் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற, ஜனநாயக தீர்மானங்கள் எடுக்கப்படும்.

அடுத்த தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்வேன்

நுவரெலியா மாவட்டம் இல்லாமல், வெளிமாவட்டத்தை சேர்ந்த ஒருவர் என்ற அடிப்படையில், நீங்கள் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். அவ்வாறாயின், நுவரெலியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் கட்சியின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும்?

நுவரெலியா மாவட்டம் மாத்திரமல்ல முழு மலையக பிரதேசங்களையும் எமது கட்சி பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மாவட்ட மட்டத்தில் மாத்திரம் எங்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் எமது கட்சிப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

எனவே, எதிர்காலத்தில் மலையகம் சார்ந்த சகல பிரதேசங்களிலும் எமது பணிகள் முன்னெடுக்கப்படும். மத்திய மாகாணம் தவிர்ந்த ஏனைய சகல மலையக பிரதேசங்களிலும் சமமான பணிகளை முன்னெடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

கட்சிக்குள் புதிய மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்க முடியுமா?

நிச்சயமாக, கட்சிக்குள் புதிய மாற்றங்கள் ஏற்படும். அந்த மாறறங்கள் ஜனநாயக ரீதியானதாக அமையும்.

நாடாளுமன்றம் செல்லும் எதிர்பார்ப்பு இருக்கிறதா?

எதிர்பார்ப்பு இருக்கிறது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவேன்.

1000 ரூபா சம்பளம் முழுமையாக வழங்கப்படவில்லை. ஒப்புக்கொள்கிறேன்

அரசாங்கத்திலிருந்து விலகக் காரணம் என்ன? மக்கள் எதிர்ப்பினாலா விலகினீர்கள்?

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தீர்மானங்களை எடுத்து வெவ்வேறு கட்சிகளை ஆதரிப்பதில்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதானமாக சிந்தித்து முடிவெடுக்கக்கூடிய பொறுப்பு எமது கட்சிக்கு இருக்கிறது. கராணம் முடிவுகள் எடுக்கும்போது சகலரதும் ஆலோசனைகள் அவசியமாக காணப்படுகின்றன.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி தொடர்பில் எமக்கு பாரிய அதிருப்தி இருந்தது. எமது கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானும் இதற்கு கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தார். மேலும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் மலையக மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் விரிவாக கலந்துரையாடியிருந்தோம்.

தேர்தல் காலகட்டத்தில் எங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தோம். எமது கோரிக்கைகளுக்கும் நிலைப்பாடுகளுக்கும் சாதகமான பதிலையே இந்த சந்திப்பின்போது ஜனாதிபதி வழங்கியிருந்தார். எமது நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையில், இந்த கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என ஜனாதிபதி கருதினாலும் அதனை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

எங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி சாதகமான பதிலை வழங்கியிருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதென்பது தற்போதுள்ள சூழ்நிலையில் மிகவும் கடினமான விடயமாகும். ஜனாதிபதியுடனான இந்த கலந்துரையாடலை தொடர்ந்து, எமது கட்சியின் உயர்மட்டத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம்.

இதன்போது அரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவை கைவிட வேண்டும் என்று சகலராலும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அதையடுத்தே ஜீவன் தொண்டமான் தனது இராஜாங்க அமைச்சை இராஜினாமா செய்தது மாத்திரமல்லாமல், அரசாங்கத்திலிருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட முடிவு செய்தோம்.

இந்த நெருக்கடி நிலைமையிலிருந்து மீள்வதற்கு உங்கள் கட்சியின் பரிந்துரை என்ன?

டுபாயில் வளங்கள் இல்லாவிட்டாலும் பொருளாதாரத்தில் அந்த நாடு பலம்பொருந்திய நாடாக உள்ளது. அதற்கு காரணம், அவர்களின் பொருளாதார திட்டங்கள். அந்த நாட்டை விட எமது நாட்டில் எல்லா வளங்களும் இருக்கின்றன. அந்த வளங்களை முறையாக பயன்படுத்தினாலேயே பொருளாதார மட்டத்தில் நாம் முன்னேறலாம். வளங்களை பொக்கிஷங்களாக பாதுகாத்தால் அவை பயனற்றவையாகிவிடும்.

அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளநிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அடுத்தகட்ட நகர்வுகள் எவ்வாறு அமையும்?

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எப்போதுமே அரசாங்கத்துடன் இருந்ததில்லை. அரசாங்கத்தில் இருந்துகொண்டு பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு தொடர்ந்து குரல்கொடுத்துக்கொண்டே இருக்கும்.

மீண்டும் புதிய அமைச்சரவையொன்று நியமிக்கப்பட்டு அரசாங்கத்தின் செயற்பாடுகள் சீராகுமாக இருந்தால், தொடர்ந்து இந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் எதிர்பார்ப்பு இருக்கிறதா?

எமது கட்சியின் சார்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானிடமே அமைச்சு பதவி இருந்தது. அரசாங்கத்துக்குள் இருந்து எவ்வாறான சூழ்நிலையை எதிர்கொண்டார், சவால்களை எதிர்கொண்டார் என்பது அவருக்கே தெரியும்.

ஆகவே, கட்சி ரீதியாக ஜீவன் தொண்டமானின் பதில்களை பொறுத்தே இதுதொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுப்போம்.

மாற்று அரசாங்கமொன்று ஆட்சிக்கு வருமாக இருந்தால் எவ்வாறு செயற்படுவீர்கள்?

தலைமைத்துவ ரீதியாக ஜீவன் தொண்டமானே அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சு பதவியொன்றை வகித்திருந்தார். தற்போதுள்ள சூழ்நிலையில் எதை செய்ய வேண்டும், செய்யக் கூடாது என்பது அவருக்கே சரியாக தெரியும். அவருடன் கலந்துரையாடிய பின்னர், அவரால் எடுக்கப்படும் முடிவுக்கமைய, அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதா இல்லையா என்பது தொடர்பில் கட்சி இறுதி தீர்மானம் எடுக்கும்.

இ.தொ.கா. குடும்பக் கட்சியா?

அதில் எந்த சந்தேகமும் இல்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலுள்ள சகலரும் ஒரே குடும்பம் தான். மாற்றுக் கருத்து இல்லை. எமது கட்சியின் கீழ் எத்தனை இலட்சம் பேர் இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் ஒரே குடும்பம் தான்.

கட்சியின் முக்கிய பொறுப்புகள் ஒரு தனிக்குழுவிடம் இருக்கிறது. அப்படி இருக்கையில் இந்தக் கட்சியை மக்கள் கட்சியென ஏற்றுக்கொள்ள முடியாதல்லவா?

கட்சியிலுள்ள பொறுப்புகள் வாக்கெடுப்பு மூலம் தெரிவுசெய்யப்படும் பதவிகள் இல்லை. நியமனங்கள் மூலம் வரும் தெரிவுகள் என்றால் குடும்பக் கட்சியா என்ற பிரச்சினை உருவாகலாம்.

ஒவ்வொரு குடும்பத்திலிருந்து வந்த அனைவரும் ஒரே குடும்பமாக செயற்படுவதே காங்கிரஸ். எங்கள் கட்சியின் கீழுள்ள பிரதிநிதிகள் ஒவ்வொரு மாவட்டங்கள், தோட்டங்களைச் சேர்ந்தவர்கள். அதனடிப்படையில், காங்கிரஸ் என்ற ஒரு குடும்பத்துக்குள் வரும்போது காங்கிரஸின் பிரதிநிதிகளாக செயற்படுகின்றோமே தவிர உறவினர்கள் என்ற அடிப்படையில் பிரதிநிதிகளாக நாங்கள் செயற்படுவதில்லை.

அரசாங்கத்தின் மீதான அதிருப்தியால் விலகத்தீர்மானித்தோம்

அவ்வாறிருக்கையில், கட்சிக்குள்ளேயே கருத்துகள் மறுக்கப்படும் வாய்ப்பு காணப்படுகின்றதல்லவா?

இதுவொரு குழு செயற்பாடு மாத்திரமே. நான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கட்சித் தலைவர் பதவியில் இருந்தாலும், கட்சியிலுள்ள ஒவ்வொரு கருத்துகளே எனது பதிலாக அமையும். நான் கட்சித் தலைமை பொறுப்பை ஏற்றதிலிருந்து என்னுடைய தனிப்பட்ட முடிவுகளோ கருத்துகளோ முன்வைக்கப்படாது. மாறாக எனது முடிவுகளும் நடவடிக்கைகளும் சமூகம் சார்ந்தவையாகவே அமையும்.

இரண்டரை வருடங்கள் அரசாங்கத்தின் பங்காளியாக செயற்பட்டுள்ளீர்கள். இந்த காலப்பகுதியில் மலையக மக்களுக்கு செய்த குறிப்பிட்டு கூறக்கூடிய விடயங்கள் என்ன?

கடந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த வீடமைப்புத் திட்டங்கள் முழுமையடைவதற்கு முன்னரே ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவந்துவிட்டது. அந்தத் திட்டங்களை முழுமை செய்துவிட்டு புதிய திட்டங்களை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்தோம். ஒருநாடு ஒரே சட்டம், தேர்தல் முறை திருத்தம் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளில் தலையிட்டு செயற்பட்டு வருகிறோம். நுவரெலியாவில் புதிய பல்கலைக்கழகமொன்றை நிர்மாணிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொட்டகலை ஒரு சுற்றுலா நகரமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

குறித்த இரு வருடங்களில் ஒரு வருடம் கொரோனாவால் அனைத்து திட்டங்களும் முடங்கி விட்டன. அதுமாத்திரமல்ல, 1000 ரூபா சம்பளம் பெற்றுக்கொடுப்பதற்கு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவும் நடவடிக்கை எடுத்தோம்.

1000 ரூபா சம்பளம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தாலும் அது முறையாக கிடைக்கிறதா என்பது கேள்விக்குறியாகவுள்ளதே?

1000 ரூபா சம்பளம் தொழிலாளர்களுக்கு முறையாக கிடைக்கவில்லை. ஒப்புக்கொள்கிறேன். காரணம், தொழில் ஆணையாளர் அவரின் கடமைகளை முறையாக முன்னெடுப்பதில்லை. அரசாங்கம் வர்த்தமானியொன்றை வெளியிட்டால் நிர்வாகம் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால், தொழில் திணைக்களம் அதனை இதுவரையில் நடைமுறைப்படுத்தவில்லை.

அவ்வாறாயின், தொழில் திணைக்களத்துக்கு நீங்கள் அழுத்தம் பிரயோகிக்க வேண்டுமல்லவா?

தொடர்ந்து வலியுறுத்தியே வருகிறோம். தலைவர் பதவி ஏற்றதும் தொழில் திணைக்களத்துக்கு இதுதொடர்பில் அறிவித்துள்ளேன். ஒரு மாதத்தில் இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். இதுதொடர்பான வழக்கு நீதிமன்றத்திலும் இருப்பதால், தொழில்நுட்ப ரீதியாக ஆராய்ந்து விட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்போம்.

தேர்தல் காலப்பகுதியில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள், 1000 ரூபா சம்பளம் என்பவை முறையாக பெற்றுக்கொடுக்கப்படவில்லை. கட்சியின் இயலாமையா காரணமா?

அதற்கு கட்சியின் இயலாமை காரணம் என்று கூற முடியாது. அரசாங்கத்தின் பொருளாதார சிக்கலே அதற்கான காரணம் என்று சொல்லலாம். 2019ஆம் ஆண்டு வரை நாட்டில் கடனே இருக்கவில்லை. மத்திய வங்கியில் டொலர்கள் அதிகமாக இருந்தது. ஆனால், இந்த ஜனாதிபதி பதவியேற்றப் பின்னரே இந்த கடன் எல்லாம் அதிகரித்தது என்பது போன்றே அநேகமானவர்கள் கருத்து வெளியிடுகிறார்கள்.

அவ்வாறு கூறமுடியாது. தனியார்த்துறை தலையீடு வந்தது முதலே இந்த சிக்கல் நிலை உருவாகிவிட்டது. ஆரம்பக் காலத்திலிருந்து கடன் வாங்கியவர்கள், கடன் வாங்கி தோல்வியை சந்தித்தவர்கள் என சகலரும் தற்போதுள்ள நிலைமைக்கு பொறுப்புக் கூற வேண்டும். அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கும்போது ஓர் அளவுக்கு அரசாங்கத்தின்மீது அழுத்தம் பிரயோகிக்க முடியாது.

ஆசிரிய உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுக்க முடியாமல் போயுள்ளதல்லவா?

நானே எண்ணூறுக்கும் அதிகமானவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்துள்ளேன். ஆனால், ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல, சகல பிரிவுகளிலும் புதிய நியமனங்கள் வழங்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்தியுள்ளது. குறித்த சுற்றறிக்கை இரத்து செய்யப்படும் வரை இந்த நியமனங்களை வழங்க முடியாது.

சந்தாப் பணக் கணக்கு வழக்கு ஏன் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை?

கடந்த தேசிய சபையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் மருதபாண்டி ராமேஷ்வரனால் சந்தாப் பணக் கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பொதுச் சபைக்கு வெளிப்படுத்தியிருந்தால், சந்தா வழங்கியவர்களுக்கு பகிரங்கப்படுத்தாதது ஏன்?

இதற்கு முன்னர் இடம்பெற்ற பொதுச்சபையிலும் இதுதொடர்பில் பிரச்சினை எழுந்திருந்தது. ஆனால், இறுதியாக இடம்பெற்ற பொதுச் சபையில் அந்த விபரங்களை எமது நிதிச் செயலாளர் வெளியிட்டிருந்தார். நிதி செலவு விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

மானிய அடிப்படையில் தொழிலாளர்களுக்கு கோதுமை மா பெற்றுக்கொடுப்பது தொடர்பில் மடக்கும்புர பிரதேசத்தில் பாரிய வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், கோதுமை மா முறையாக பெற்றுக்கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதே?

கடந்த இரு மாதக் காலப்பகுதிக்குள் நாட்டின் செயற்பாடுகள் தலைகீழாக மாறிவிட்டன. இதுவே, இந்த வேலைத்திட்டத்திலும் தாக்கத்தை செலுத்தியுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குடும்ப கட்சியே

சந்தாப்பணம் அறவிடாத கட்சியாக தொழிலாளர் காங்கிரஸ் மாற்றமடைவது எந்தளவுக்கு சாத்தியம். அது எப்படி நடக்கும்?

அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. நான் தலைவராக இருக்கும் காலப்பகுதிக்குள் அது நிறைவேற்றப்படும். தேவையான மாற்று வழிகள் இடம்பெற்று வருகின்றன.

நாட்டின் தற்போதைய நிலை மலையக மக்களின் வாழ்வாதாரத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

எரிபொருள், மின்துண்டிப்புக் காரணமாக தேயிலை உற்பத்தி பெரிதும் பாதித்துள்ளது. இதனால், மலையக மக்கள் எதிர்காலத்தில் பெரிதும் பாதிப்படைய போகிறார்கள். எம்மை போன்றே நெருக்கடியை சந்தித்து மீண்ட நாடுகளுடன் கலந்துரையாடி சரியான அணுகுமுறைக்கு சென்றால் மாத்திரமே பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

கடன் மீள் செலுத்துகை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றாலும் அவர்கள் கடன் உதவி வழங்க குறைந்தது எட்டு மாதங்களாவது தேவைப்படும். இந்தக் காலப்பகுதிக்கு குறுகிய காலத் திட்டம் இந்த அரசாங்கத்திடம் இருக்க வேண்டும்.

ஜனாதிபதி ஏனைய நாடுகளுடன் நேரடியாக தொடர்புபட்டு செயற்பட்டால் ஓரளவு எழுச்சியை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். சுற்றுலாத்துறை வீழ்ச்சி, அந்நிய செலாவணி வீழ்ச்சியை சந்தித்தபோதே அரசாங்கம் அடுத்தக்கட்டத்துக்கு சென்றிருக்க வேண்டும். ஆனால், அதனை இந்த அரசாங்கம் உரிய நேரத்துக்கு செயற்படுத்தவில்லை.

மக்களின் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் காங்கிரஸின் நிலைப்பாடு?

மக்கள் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தமையினாலேயே அரசாங்கத்தைவிட்டு வெளியேறியுள்ளோம். எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு என்ன செய்யப்போகிறார்கள் என்று தெரிவதில்லை. அடுத்த மூன்று வருடங்களில் மக்களுக்கு ஆட்சியை வழங்குவதா அல்லது வெளியேறுவதா என்பதை ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும்.

பிறர் மனதை புண்படுத்தாமல் வாழ்பவனே சிறந்த சமூக சேவையாளன்

நேர்காணல் - இக்பால் அலி

யோகா குருஜீ ஜெயக்குமார்

யோகாசனக் கலை பயிற்றுவிப்பாளர் யோகா குருஜீ ஜெயக்குமார் ஞாயிறு 'தமிழன்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

Q உங்களது ஆரம்ப வாழ்க்கை பற்றி கூறுங்கள்?

நான் வெள்ளவத்தையில் 1973-08-09களில் பிறந்தேன். அவ்வாறு அங்கு பிறந்தாலும் கேகாலை மாவட்டத்தில் தெரணியகல பிரதேசத்தை வசிப்பிடமாகக்கொண்டு வாழ்ந்து வந்தோம். அப்பா ஆறுமுகம்பிள்ளை. அம்மா ஞானம்மாள், அப்பா தெரணியகலயில் ஒரு சாதாரண ஹோட்டல் நடத்தி வந்தார்.

Q நீங்கள் எங்கு கல்வி கற்றீர்கள்?

தெரணியகல கதிரேசன் தமிழ் மகா வித்தியாலயத்தில் படித்தேன். இங்குதான் ஆரம்பக் கல்வியமுதல் க.பொ.த சாதாரண தரம் வரையிலும் கற்றேன். தொடர்ந்து படிப்பதற்கும் வீட்டிலுள்ள பொருளாதார நெருக்கடி இடம்கொடுக்கவில்லை.

ஆரம்பத்தில் நான் ஓர் ஆடைத்தொழிற்சாலையில் வேலைக்கு இணைந்துகொண்டேன். அதேநேரம் அறநெறிப் பாடசாலையும் நடத்தினேன். மேலதிகமாக யோக பயிற்சியினையும் பயின்றேன்.

Q உங்களுக்கு யோகாசனம் படித்துக்கொள்வதற்கு எப்போது ஆசை வந்தது?

எனக்கு சிறிய வயதிலிருந்தே சமயப்பற்று அதிகம். அதன் காரணமாக யோகாசனத்தைப் பயிலவேண்டும் என்ற ஆவல ஏற்பட்டது. மிகுந்த ஆர்வத்தோடு இதனைக் கற்றேன். இந்தியாவில் அப்பாவின் உறவினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் இந்தியாவில் கோயம்புத்தூரில் யோகாசன வகுப்புகள் நடத்தினார்கள். சமய தொன்டுகள் செய்யவேண்டும். உறவினர்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையும் அதேவேளை, யோகாசனம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் இருந்தது.

யோகாசனம், சூரிய நமஸ்காரம் போன்ற அம்சங்கள் இருக்கின்றன. ஆனாலும் இந்து மதத்தைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையில் யோகாசனம் செய்தால் முற்றும் துறந்த முனிவராகி விடுவோமா என்ற அச்சமும் இருந்தது. அதனால் ஆரம்பத்தில் ஈர்ப்பு ரொம்ப குறைய இருந்தபோதிலும் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நூல்களை நிறைய வாசித்தேன். உண்மையிலேயே இதனைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகம் ஏற்பட்டது.

அந்தவகையில் 2000ஆம் ஆண்டுகளில் இந்தியா சென்றேன். ஆறு மாதங்களில் ஆரம்ப யோகாசனப் பயிற்சியை நிறைவுசெய்தேன். 2003களில் இந்தியாவிலிருந்து இலங்கை வந்து சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ணன் மிஷனியில் இணைந்து மேலதிகப் பயிற்சிகளையும் பெற்றுக்கொண்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்து சேவா அமைப்பினர் என்னை இணைத்துக்கொண்டனர். குறிப்பாக, இந்த அமைப்பின் ஊடாகத்தான் நான் யோகாசனக் கலையின் பயிற்றுவிப்பாளராக அறிமுகப்படுத்தப்பட்டேன். அதன்மூலம்தான் நான் மிகவும் பிரபல்யமானேன். ஆன்மீக வளர்ச்சிக்காக யோக பயிற்சியை முற்றுமுழுதாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இக்காலகட்டத்திலேயே ஏற்பட்டது. அந்த அமைப்பைப் பற்றி விமர்சனம் இருந்தாலும் சரி எது பிழை எது என்று அறிந்து அதிலுள்ள நல்ல விடயங்களைப் பெற்றுக்கொண்டேன்.

2006களில் திரும்பவும் இந்தியா சென்று சென்னை ஆசிரமத்தில் இணைந்து ஆன்மீக வளர்ச்சிக்காக சிலம்படி பயிற்சியையும் பெற்றேன். பின்னர் அங்கேயே மதுரை அண்ணா நகரில் வகுப்புகள் நடத்த ஆரம்பித்தேன். நிறைய பிரபல்யமானவர்கள் வந்து படித்தார்கள். உலகப் புகழ்பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் வந்து படித்தார்கள். பின்னர் இலங்கையிலும் அதனை ஆரம்பித்து இலங்கையிலும் இந்தியாவிலும் அங்கும் இங்குமாக தொடர்ந்து சிவனடிய நடத்திவந்தேன்.

இலங்கையில் எவ்வாறு தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் என்னுடைய வகுப்புக்கு வந்து பயிற்சிகளைப் பெற்றுக்கொன்டார்களோ அதேமாதிரிதான் இந்தியாவிலும் தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் வந்து பயிற்சியைப் பெற்றார்கள்.

Q அப்படியாயின் நீங்கள் தற்கால சூழலில் எத்தகைய முறையிலான யோகாசனப் பயிற்சிகளை வழங்கி வருகின்றீர்கள்?

இன்றைய நவீன உலகில் யோகாசனம் எப்படிப் படிப்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அதனை வகுத்து கற்பித்து வருகின்றேன். பழைய காலத்து யோக முறைதான் சரியான முறையாகும். ஆனாலும் அதனை மக்கள் ஏற்றுக்கொள்வது குறைவு. வேகமான உலகத்தில் மக்கள் எதிர்பார்ப்பது என்னவென்றால், அதிகளவு உடல் எடை உள்ளவர்கள் ஒரு மாதத்தில் குறைந்தளவு உடல் எடை குறைய வேண்டும் என்று தப்பான எண்ணம் கொண்டுள்ளனர்.

இதற்கினங்க புதியமுறையில் அதனை நவீனமயப்படுத்தி மக்களைக் கவரக்கூடிய மாதிரி மக்கள் விரைவில் பலனைப் பெறக்கூடிய வகையில் பயிற்றுவித்து வருகின்றேன்.

Q இதன் பயன்கள் பற்றி கூறுவீர்களா?

சமூகத்திற்கோ தனிமனிதனுக்கோ நல்லதொரு மனப்பான்மையை உருவாக்கும் பண்புகளைக்கொண்டவையே

இது. உலகில் நல்ல மனிதனாக வாழ்வதற்கான ஒரு மனநிலையைத் தோற்றுவிக்கும். உடலிலுள்ள நாடி நரம்புகள், உள்ளுறுப்புகள் தூய்மையாகின்றபோது இரத்தம் தூய்மையாகின்றது. நல்ல சிந்தனை எழுகின்றது.

எவ்வாறாயினும், இதனைச் சரியான முறையில் கற்றுக்கொள்வதை நிறைய பேர் விரும்புகின்றார்கள் இல்லை. இன்றைய உலகம் வேகமாக இயங்கக்கூடியது. வேகமாக இயங்கக்கூடிய உலகில் எதை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்றால் கூடிய உடல் எடை உடையவர்கள் குறைந்தளவிலான உடல் எடையை விரைவில் குறைக்க வேண்டும் என்று மட்டுமே எதிர்பார்க்கின்றனர். பழைய யோகாசனத்தைத்தான் ஒரு வகையில் நவீனமயப்படுத்தி படிப்பித்து வருகின்றேன்.

மக்கள் கவரக்கூடிய மாதிரியும் மக்களுக்கு விரைவில் பலன்களைப் பெறக் கூடிய மாதிரியும் படிப்பித்து வருகின்றேன். யோகாசனத்தில் மூச்சுப்பயிற்சிதான் வெகு ஆழமாக செய்யப்படும் பயிற்சியாகும். மூச்சுப்பயிற்சி செய்யும்போது உடலில் தூய்மையான காற்று உடலுக்குள் உள்வாங்கப்படும். தூய்மையான காற்று உடலுக்குள் சென்று இரத்தம் தூய்மையாகும். இதயப் பகுதி தூய்மையாகும். நுரையீரல் நன்றாக இயங்கும். மூளைக்கு இரத்தோட்டம் செல்லும். நல்ல சிந்தனைகள் தோன்றும். புத்துணர்ச்சி ஏற்படும்.

Q யோகாசனப் பயிற்சிகளை எங்கெங்கு நடத்தி வருகின்றீர்கள்?

கண்டி, பேராதனை வீதியிலும் கேகாலை நகரத்திலும் கொழும்பு வெள்ளவத்தையிலும் என மூன்று நிலையங்களில் பயிற்சிகள் வழங்கி வருகின்றேன். இந்தப் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்காக மூவின மக்களும் வருகை தருகின்றார்கள்.

குறிப்பாக, பல்லின மதத் தலைவர்களும் இந்த யோகாசனப் பயிற்சியை ஆர்வத்துடன் பெற்று வருகின்றார்கள். அதற்கு காரணம் எந்தவொரு மதம் சார்ந்தவர்களாக இருந்தாலும் மனித உறுப்புகள் சரியாக வேலை செய்யவேண்டும். அது சரியாக வேலை செய்யவேண்டுமாயின் அதற்கான பயிற்சி சரியானதாக வழங்கப்பட வேண்டும்.

அதற்கு சரியான

பயிற்சி கிடைப்பதென்பது யோகாசனக் கலையின் மூலம் மட்டும்தான் சாத்தியம்.

அரசியல்வாதிகள், நீதிபதிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பல்தரப்பட்ச சார்ந்தவர்களும் இந்த யோக கலையைக் கற்றுக்கொள்வதற்காக வருவார்கள். குறிப்பாக, பெரியவர்களாக இருந்தாலும் சரி சிறியவர்களாக இருந்தாலும் சரி என்னை குருஜி என்றுதான் அழைப்பார்கள்.

யோகாவில் ஆயிரக்கணக்கான ஆசனங்கள் இருக்கின்றன. ஒருவர் கிட்டத்தட்ட 50-60இற்கு இடைப்பட்ட ஆசனத்தைக் கற்றுக்கொன்டால் போதுமானதாகும். இது உடல் ஆரோக்கியத்திற்கும் பயனுள்ளதாக அமையும்.

இதற்குவயது எல்லை தேவையில்லை. 90வயதுடையவர்களும் சிரசு ஆசனம் (தலை கீழ்) செய்வார்கள். இந்த ஆசனத்தை செய்தால் இன்னும் இளமைத் தோற்றத்தை உண்டுபண்ணும். ஞாபகக்சக்தி அதிகரிக்கும்.

பாடசாலையில் ஒய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் என தனிப்பட்ட ரீதியாக பயற்சிகளை வழங்கிவருகின்றேன். இதுவரையிலும் வகுப்பு ரீதியாக 50,000இற்கும் மேற்பட்டவர்கள் வந்து பயிற்சியைப் பெற்றுள்ளார்கள். உலகில் இன்று சர்வதேச யோகா தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தினங்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் கலந்துகொள்வார்கள்.

யோகா தினத்தை உலகெங்கிலும் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு பிரேரணையைக் கொண்டு சென்றவர் இந்தியப் பிரதமர் மோடி.

மருத்துவமில்லாமல் மனிதன் ஆரோக்கியமாக வாழவேண்டும். உலகத்தில் சுந்தி சமாதானம் ஏற்படவேண்டும் என்று அடிப்படையில் 2014ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியப் பிரதமர் முன்மொழிந்தார். இதில் விசேஷம் என்னவென்றால், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறும் 192 நாடுகளில் 170 நாடுகள் ஆதரவு தெரிவித்து அங்கீகாரம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. 2015 ஜூன் 21ஆம் திகதியிலிருந்து உலகம் முழுவதும் தொடர்ந்து யோகா தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இத்தினங்களில் கண்டியில் பூரண ஒத்துழைப்பை நான் வழங்கி வருகின்றேன்.

Q உங்களது சமூகப் பணி பற்றி கூறுவீர்களா?

நான் சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கான முக்கிய காரணம் யோகாசனம். அடுத்து நான் பெருமையாக சொல்லிக்கொள்கிற விடயம்தான் முத்தையா முரளிதரனின் தந்தை எஸ்.முத்தையாவும் அவரது துணைவியார் வக்ஷிமியுமாகும்.

15 வருடகாலமாக என்னுடைய யோகாசனப் பயிற்சியை பெற்று வருகிறார்கள். அவர்கள் இந்த யோகாசனப் பயிற்சியை இலவசமாக மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும் என்று என்னைத் தூண்டிக்கொன்டே இருப்பார்கள். இன்றைக்கு நிறைய சமூக சேவைகள் செய்வதற்குக் காரணம் அவர்களுடைய வழிகாட்டல்தான்.

வறிய மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்குதல், அனர்த்தங்களின்போது தேவையான உருளைப் பொதிகள் வழங்குதல், இப்படி அவ்வப்போது பொதுமக்களின் தேவைகள் கருத்திற்கொண்டு உதவிசெய்து வருகின்றேன். இதில் நான் சற்று சோர்ந்துபோனாலும் முத்தையா தேவையான உதவிகளைச் செய்து தந்து என்னை தொடர்ந்து பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்யுமாறு அவர் என்னை தினமும் தூண்டிக்கொண்டு இருப்பார். இப்படி யோகாசனம் கற்பதன் மூலம் ஒரு மனிதனிடத்தில் நல்ல சமூக சிந்தனை இயல்பாகவே வரும்.

அந்தவகையில் ஏதோ மக்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற நல்ல சிந்தனை முரளியின் தந்தைக்கும் அம்மாவுக்கு இருக்கிறது. ஆதலால் அவர்களுடைய பங்களிப்போடும் நல்லாதரவோடும் அவர்களுடைய நிதி உதவியோடும் நிறைய பணிகள் செய்து வருகின்றேன்.

சமூகப் பணிகள் எனும்போது பொியவளவில் பணம் செலவு செய்யவேண்டியதில்லை. நான் வந்து பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு இலவசமாக யோகா பயிற்சி வழங்கி வருகின்றேன். இதுவும் ஒரு சமூகப் பணிதான். பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வருகின்றேன். நாட்டுக்கான 10இலட்சம் மரக்கன்றுகள் நடுகைத் திட்டம் ஆரம்பித்துள்ளேன். தற்போது 2இலட்சத்திற்கு அதிகமான மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Q களனிப் பல்கலைக்கழக ஊடகத்துறை பேராசிரியர் பியதாசவுக்கும் உங்களுக்கும் இடையிலான உறவு எப்படி வந்தது?

களனி பல்கலைக்கழக ஊடக கற்கைநெறிப் பேராசியர் பியதாச என்னுடைய யோகாசனப் பயிற்சியை கற்றுக்கொள்ள வந்த ஒருவர். யோக கலையை மட்டுமல்ல, சமூகப் பணியையும் கண்டு மிக நெருக்மான உறவைப் பேணி வருகின்றார். என்னுடைய சேவையை ஊக்குவிப்பதற்காக அவர் யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு ஹாராகம என்ற இடத்தில் அமைந்துள்ள சுமார் 15 கோடி ரூபா பெறுமதியான வீட்டொன்றை யோகா பயிற்சியை நடத்திச்செல்வதற்கு எந்தவிதமான வாடகையுமின்றி

கையளித்துள்ளார். இதில் யோகா ஆசிரமம் செய்துகொன்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொன்டு வருகின்றேன். எட்டு ஏக்கர் காணியுடன் பெரிய பங்களாவொன்றை கையளித்துள்ளார். இதனை நானும் முத்தையாவும் சேர்ந்து இவ்விடத்தை பயனுள்ளதாக மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். தற்போது இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவராக செயற்பாட்டு வருகின்றார்.

Q உங்களது திருமண வாழ்வு பற்றி யோசிக்கவில்லையா?

நான் தனி மனிதனாக வாழ்ந்து வருகின்றேன். திருமணம் செய்து குடும்பமாகிவிட்டால் யோகா பயிற்சியினை நடத்திச்செல்வது கஷ்டமாகும். அதேவேளை, சமூகப் பணிகளில் ஈடுபடுவதும் ஒரு சிரமமான காரியமாக இருக்கும் எனக் கருதி திருமணத்தை தவிர்த்து வருகின்றேன். நான் திருமணம் முடித்திருப்பது யோகா கலையையாகும். அதேபோன்று சமூகப் பணி என்பது என்னுடைய பிள்ளைகளைப் போன்றதாகும். இதற்காகத்தான் காலம், நேரம் முழுவதையும் செலவு செய்கின்றேன்.

சீறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களை இனங்கண்டு நான் தேடும் பணத்தை அவர்களுக்கு ஊதியமாக கொடுத்து வருகின்றேன். கொரோனா காலத்தில் கண்டி, கம்பளை, கேகாலை முதலிய இடங்களுக்குச் சென்று உருளைவுப் பொதிகள் வழங்கினேன். இவற்றையெல்லாம் என்னுடைய சொந்தப் பணத்தைக்கொண்டு மக்களுக்காக செலவு செய்கின்றேன்.

என்னுடைய குடும்பத்திலுள்ள சகோதரர் சகோதரிகள் திருமணம் முடித்து நன்றாக வாழ்ந்து வருகின்றார்கள். உண்மையிலேயே நான் மக்களுக்காக துறவறம் பூண்டு வாழ்ந்துவருகின்றேன். யோகா கலை அந்த இடத்திற்கு சென்றுசென்று வைக்கும் தன்மை வாய்ந்தவை. அதுதான் சிறந்தது என்ற அடிப்படையில் இன்று வாழ்ந்து வருகின்றேன். சொந்தபந்தம் எல்லாம் தாமரை இலையில் தண்ணீர் பட்டும் படாமலும் இருப்பதைபோல் என்பார்கள். அந்தமாதிரியான ஒரு வாழ்க்கையை நான் வாழ்ந்து வருகின்றேன்.

Q நீங்கள் சமூகத்திற்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

எதுவாக இருந்தாலும் சமூகத்திற்குச் சொல்வதைவிட செயற்படுத்திக் காட்டவேண்டும். அதுதான் என்னுடைய கொள்கை. அதை எவ்வாறு செயற்படுத்த வேண்டும். அந்த கடமைக்கு வரக்கூடியவர்கள் எவ்வகையிலான மனோநிலையை உடையவராக இருத்தல் வேண்டும் என்பது பற்றி பயிற்சியூடாக விளங்கப்படுத்தி வருகின்றேன். நாங்கள் மற்றவர்களுக்கு சொல்வதை விட நாங்கள் முன்மாதிரியாக இருந்து காட்டுதல் வேண்டும். இதுதான் நாம் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

எல்லா மனிதர்களோடும் பழகி அவர்களுடன் பரஸ்பர எண்ணத்தோடும் புரிந்துணர்வோடும் ஒற்றுமையாக வாழ்ந்து காட்டினால் அடுத்த சந்ததியினர்களும் அவ்வாறு வாழ முற்படுவார்கள். பிரிவினைவாதத்தையும் இனவாதத்தையும் துண்டி வாழ முற்படுவோமாயின் ஒருபோதும் ஒரு நிலையான மனிதநேயமுள்ள மக்கள் சமூகத்தைக் காண்பது அரிது.

Q உங்கள் பணிகளுக்காக கிடைக்கப்பெற்ற சான்றாதாரங்கள், பாராட்டுகள், ஆவணங்கள் உண்டா?

2009 களில் இந்தியாவிலிருந்து வரும்போது அங்குள்ள மதுரை அண்ணா நகர் மக்கள் இணைந்து ஒரு விருது வழங்கினார்கள். பாராட்டுகள் நமது சமூகப் பணியை வீழ்த்தக்கூடியவை. எனவே, நான் பாராட்டுகளை எதிர்பார்த்து செய்வதில்லை. ஒரு சமூகப் பணியை செய்தாலும் நான் முன்னின்று செய்வதில்லை. ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துவிட்டு பின்னால் நின்று அவதானித்திருப்பேன்.

இதற்கு பெயர் போடவேண்டும் என்ற அவசியமில்லை. இது என்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயமாகும் . இந்த இரத்தின தீப விருது கூட நண்பர் ஊடகவியலாளர் ஹேரத்தின் அழுத்தம் காரணமாகத்தான் பெற்றுக்கொன்டேன். அதனை நான் நூறு விதிகம் விருப்பமே பெற்றுக்கொள்ளவில்லை. சான்றிதழ்கள் என்பது காட்சிகளில்லை. எல்லாவற்றையும் விட மிக உயர்ந்ததுதான் மனசாட்சி. அது வே நான் செய்யும் பணிகளுக்கு ஆதாரமும் சான்றுமாகும். அடுத்தவர்களுக்கு எதைச் செய்யும்போதும் அவர்களிடமிருந்து நன்றியோ எந்தவிதமான எதிர்பார்ப்புகளையோ நான் எதிர்பார்ப்பதில்லை. முழு வேலையும் அவர்களைச் சென்றடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய முழுமையான எதிர்பார்ப்புகள்.

என்னிடம் இரு மோட்டார்சைக்கிள்கள் இருந்தன. கொரோனாவினால் நாடு முடக்கப்பட்ட காலம். ஆட்கள் உணவிபின்றி நெருக்கடியான நிலையில் இருந்தார்கள். இந்த இரண்டு மோட்டார்சைக்கிள்களையும் வைத்துக்கொன்டு இருப்பதில் அர்த்தமில்லை. ஒன்று போதுமானது எனக் கருதி அதில் ஒன்றை விற்பனை செய்தேன். அப்போது கண்டியிலுள்ள சிங்கள ஊடகவியலாளர்கள் வறிய குடும்பங்களுக்கு உருளைவுப் பொதிகள் வழங்குமாறு என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள். அந்த மோட்டார்சைக்கிள் விற்ற பணத்திற்கு உலருணவுப் பொதிகள் வாங்கி அவர்களிடம் அன்பளிப்புச் செய்தேன். இந்த உலருணவுப் பொதிகள் கண்டி கச்சேரியில் வைத்து வறிய குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

கண்டி, கம்பளை போன்ற பல இடங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கினேன். இந்தக் காட்சிகளை புகைப்படம் எடுத்து

நான் வைத்துக்கொள்வனே தவிர அதனைப் பிரயோயப்படுத்த வேண்டும் என்று நான் ஆர்வம் காட்டுவதில்லை. நான் மூவின மக்களோடு நேசம் வைத்துப் பழகி வருகின்றேன். கண்டி கட்டுக்கலை அரபுக் கல்லூரியில் சுமார் நான்கு வருடம் யோகக்கலை பயிற்றுவித்துக் கொடுத்துள்ளேன். நாங்கள் மக்களிடத்தில் அன்பைப் பெறவேண்டுமாயின் முதலில் நாங்கள் நல்லவர்களாகவும் தூய்மையானவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

நான் ஆரம்பத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இருந்தேன். ஆனாலும் அந்தக் கொள்கை என்னிடத்தில் இல்லை. நான் அதில் நல்லதை எடுத்துக்கொள்வேன். அல்லது வேறு அமைப்புகளில் இருந்தாலும் அதில் நான் நல்லதை எடுத்துக்கொன்டேன். மக்களுக்கு பயனுள்ளது எவை இருக்கின்றனவோ அதனை எடுத்துக்கொன்டு செயற்படுவதுதான் சிறந்த முறையாகும். மக்கள் மனதை எவர் புண்படுத்தாமல் வாழ்கின்றாரோ அவரே சிறந்த சமூக சேவையாளனும் சிறந்த மனிதனும் ஆவார். இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதே சமூக சேவையாகும்.

தமிழன்

வணிக உலகம்

Business world

www.thamilan.lk

சன்லைட் (Manudam Viyamana) சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவுடன் கைகோர்த்துள்ளது

பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்த உதவுவதற்காக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின்கீழ் இயங்கும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு மற்றும் சிங்கர் பெஞ்சின் அக்கடமி ஆகியவற்றுடன் கூட்டாண்மையொன்றை ஏற்படுத்தி யுள்ளது.

இதன்மூலம் சன்லைட் (Manudam Viyamana) சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவுடன் கைகோர்த்துள்ளது

சமூகங்கள் மீதான அக்கறையுடன், பிணைப்புகளை வலுப்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை மேலும் மேம்படுத்தும் வகையில், யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பிரதான வர்த்தகநாமமான சன்லைட், தனது 'மனுதம் வியமன' என்ற பெயற்றிட்டத் தினூடாக தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள ஆடைத் தொழில்துறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் வளர்ச்சியை தொடர்ந்து மேனுவதில் சன்லைட்டின் ஓயாத அர்ப்பணிப்பை இந்நிகழ்ச்சித் திட்டம் காண்பிக்கின்றது.

ஆடைத் தொழில்துறை மீது கவனம் செலுத்தும் தொற்றுநோய் மற்றும் அதன் தொடர்ச்சியான பொருளாதார சவாக்களால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் வளர்ச்சியை தொடர்ந்து மேனுவதில் சன்லைட்டின் ஓயாத அர்ப்பணிப்பை இந்நிகழ்ச்சித் திட்டம் காண்பிக்கின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் 10,000 தொழில் முயற்சியாளர்களை இலக்குவைத்து வனிக அடிப்படைகள் குறித்த இலவச செயலமர்வுகளை நடத்துவதற்காக சிங்கர் பெஞ்சின் அக்கடமியுடன் கைகோர்க்கும்.

அவர்கள் தமது நிபுணத்துவ விரிவுரையாளர்கள் அணியின் மூலமாக இலவச ஒன்லைன் செயலமர்வுகளை நடத்துவர். இந்த நிகழ்ச்சித்திட்டத் திற்காக பதிவை மேற்கொண்டுள்ள பங்கேற் பாளர்களில்250பேருக்குபணஉதவி வழங்கப்படவுள் ளதுடன், இதனை அவர்கள் தங்கள் வனிகத்தின் தரத்தை மேம்படுத்த பயன்படுத்திக்கொள்ளலாம்.

இந்தச் செயலமர்வில் பங்கேற்க ஆர்வமுள்ளவர் கள் இதற்கான பதிவை www.manudamviyamana.lk என்ற இணையத்தளத்தில் உள்நுழைந்து மேற்கொள்ள முடியும்.

INSEE Cement நிறுவனம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மாகாண பொறியியலாளர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை தென் மாகாணத்திற்கு விரிவுபடுத்துகிறது

நாடு முழுவதிலுமுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பொறியியலாளர் களுக்கான மிகவும் வெற்றிகரமான திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்தும் நோக்கத்துடன், INSEE Cement நிறுவனம் தென் மாகாண சபையுடன் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

தென் மாகாண பிரதம செயலாளர் ஆர்.சி. டி. செம்பா மற்றும் INSEE Cement நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான நந்தன ஏக்நாயக்க ஆகியோருக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைமாற்றம் செய்யப்பட்டன. இந்த சிறப்பான நிகழ்வில் மாகண பிரதி பிரதம செயலாளர்கள், பணிப்பாளர்கள், பிரதம பொறியியலாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

சிறந்த தொழில்முயற்சிக்கான தங்கப் பதக்க விருதை வென்ற Ceylon Facet

மாணிக்கக்கல் அரிதல் மற்றும் பட்டைத் தீட்டுதல் துறையில் இலங்கையின் முதன்மை யான நிறுவனமான Ceylon Facet தனியார் நிறுவனம் கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) ஏற்பாடுசெய்த சிறந்த கைத்தொழில்களுக்கான விருது வழங்கும் விழாவில் மாணிக்கக்கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் பிரிவின் மத்திய அளவிலான பிரிவின் தங்கப் பதக்க விருதை வென்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்றுமுன்தினம் (08) கொழும்பு விழாவில் Ceylon Facet நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சஞ்சீவ பொன்சேகா தமக்கான விருதை பெற்றுக்கொண்டார்.

30 ஆண்டுகளுக்கு அண்மித்த வரலாற்றைக் கொண்டுள்ள Ceylon Facet தனியார் நிறுவனம் கலைநயமிக்க முறையில் மாணிக்கக்கல் அரிதல் மற்றும் பட்டைத் தீட்டுதல் தொடர்பான உள்நாட்டில் மாத்திரமல்ல, உலக அரங்கிலும் புகழ்பெற்று விளங்குகிறது. நியூசிலாந்து, ஹொங்கொங், ஜப்பான், சீனா, தாய்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து கிடைக்கும் மாணிக்கக்கல் அரிதல் மற்றும் பட்டைத் தீட்டுதல் மற்றும் அமெரிக்கா, சீனா, ஜரோப்பா உள்ளிட்ட உலகெங்கிலும் பல நாடுகளுக்கு அரிந்து பட்டைத் தீட்டிய மாணிக்கக்கற்களை ஏற்றுமதிசெய்யும் Ceylon Facet நிறுவனம் தற்பொழுது சுமார் 100 நேரடி தொழில்வாய்ப்புகளையும் 25 மறைமுக தொழில்வாய்ப்புகளையும் வழங்கியுள்ளது. சமூக பணியாகக் கருதி மாற்றுத்திறனாளிகள் சிலருக்கும் தொழில்வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக ஒரு முழுமையான வங்கிச் சேவையை அறிமுகப்படுத்துகிறது HNB

இலங்கை மத்திய வங்கியின் (CBSL) உத்தியோகபூர்வ வழிநடத்தலின்கீழ் உள்நோக்கிய பணப்பரிமாற்றங்களை ஊக்குவிக்கும் உந்துதலை ஆதரிக்கு. இலங்கையின் முன்னணி தனியார்துறை வங்கியான HNB PLC, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு பல மதிப்புக் கூட்டல்களை வழங்குவதற்காக HNB Adhishtana கணக்கை அறிமுகப்படுத்தியது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நிதி மற்றும் சமூகத் தேவைகள் குறித்த வங்கியின் விரிவான புரிதலின் மூலம், புலம்பெயர்ந்த இலங்கையர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நிலையான வாழ்வாதார மேம்பாடு மற்றும் நல்வாழ்வை ஆதரிக்கும் வகையில் வங்கி இந்தத் திட்டத்தை வடிவமைத்துள்ளது.

HNB Adhishtana தொகுப்புடன் இணைக்கப் பட்டுள்ள கேமிப்புக் கணக்கு, உலகெங்கிலுமுள்ள இலங்கையர்களுக்கு பாதுகாப்பான, வசதியான மற்றும் செலவு குறைந்த முறையில் தாயகத்திலுள்ள தங்கள் அன்புக்குரியவர் களுக்கு நிதியை அனுப்புவதற்கான நேரடி அணுகலைப் பெற உதவுகிறது.

HNB Towerஇல் நடைபெற்ற HNB Adhishtana தொகுப்பின் வெளியீட்டு நிகழ்விற்கு, இலங்கை மத்திய வங்கியின் (CBSL) ஆளுநர் அழித் நிவார்ட் கப்ரால், HNB முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, ஜோனதன் அலஸ், CBSL உதவி ஆளுநர் டி. குமாரதுங்க, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, அமைச்சின் மகளிர் மற்றும் சிறுவர்கள் மேம்பாடு, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் துணை ஆணையர் சுதீர வித்தான, HNB Assurance - Life பிரதம நிறைவேற்று அதிகாரி லசித விமலரத்ன, ALFEAஇன் தலைவர் எவ்.மிக்கார், Mobitel, பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி வஷிக செனரத், IHS பிரதம நிறைவேற்று அதிகாரி/ஸ்தாபகரான கலாநிதி கித்சிறி எதிரிசிங்க மற்றும் HNBஇன் பிரதி பொது முகாமையாளர் சில்ரை ட SME வங்கியியல் சஞ்சய் விஜோரன்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

DFCC வங்கி இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முன்னோடியாக 25 வருடங்கள் நிறைவைக் கொண்டாடுகிறது

அனைவருக்கும் ஏற்ற வங்கியும், இலங்கையின் முன்னணி வங்கிகளில் ஒன்றுமான DFCC வங்கி, இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முன்னோடியாக 25 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடுகிறது. தேசத்தின் வளர்ந்துவரும் தேவைகளைப் பற்றிய தொலை நோக்குப் பார்வை மற்றும் புரிந்துணர்வுடனும் உலகளாவிய எரிசக்தித் துறையில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களை முற்கூட்டியே சிறப்பாக அறிந்து எதிர்வு கூறியுள்ள வங்கி, கடந்த 25 ஆண்டுகளாக இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவித்து வருகிறது.

DFCC வங்கியானது, 1996ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டின் முதல் தனியார்துறை நீர், காற்று, சூரிய மற்றும் கழிவுகளை எரிசக்தி அபிவிருத்திக்கு திட்டங்களாக மாற்றுவதற்கு நிதியளித்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையில் இலங்கையின் முன்னோடி வங்கியாகத் திகழ்கிறது. 1997இல் இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையில் தனியார் முதலீட்டிற்கான அனுசரணைக்கு அத்திவாரமிட்டு, தரப்படுத்தப்பட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகளை அறிமுகப்படுத்தியிருந்தது.

தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் இலங்கையின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாகக் கௌரவிக்கப்பட்டுள்ள AIA இன்ஷூரன்ஸ்

AIA இன்ஷூரன்ஸ் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக மூன்றாவது வருடமாகவும் மீண்டும் சர்வதேச ரீதியில் கௌரவிக்கப்பட்டுள்ளது. AIA சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற கெப்பிடல் பைனான்ஸ் இன்டர்நெஷனல் நிறுவனத்தினால் 2021இற்காக இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

இந்த கௌரவமிக்க அங்கீகாரமானது இலங்கையின் நிதித்துறை மற்றும் உலகளாவிய பொருளாதாரம் ஆகியவற்றினது உன்னிப்பான ஆய்வின் அடிப்படையான பிரதான செயற்றிறன் குறிகாட்டிகளின் ஆழமான மதிப்பாய்வினைத் தொடர்ந்தே வழங்கப்பட்டிருந்தது.

இந்த விருதானது மிகச்சிறந்த காப்புறுதித் திட்டங்கள் மற்றும் சேவைகள், மிகச்சிறந்த வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் இலங்கை மக்களுக்கான சேவைகள் சார்பாக இலங்கையின் ஆயுள் காப்புறுதித்துறைக்கு AIAஇனால் வழங்கப்படும் குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்கான சான்றாகவும் அமைந்திருந்தது.

இந்த விருதினை வெற்றிபெறுவதற்குப் பங்களிப்புச் செய்த பல சிறப்பான பண்புகளை AIA தன்னகத்தே கொண்டுள்ளதுடன், இலங்கையின் ஆயுள் காப்புறுதி நிறுவனங்களில் மிகச்சிறந்த 6 காப்புறுதிச் சேவை வழங்குநர்கள் மத்தியில் மிகவும் உறுதியான மூலதன நிறைவு விகிதத்தினை (CAR) நிறுவனம் உள்ளடக்கியுள்ளது. நிறுவனம் 2021இன் நிறைவில் 547% ஒழுங்குமுறையான மூலதன நிறைவு விகிதத்தினை (CAR) பதிவுசெய்திருந்தது. இது உண்மையில் ஒழுங்குபடுத்துனரால் நிர்ணயிக்கப்படுகின்ற மூலதன நிறைவு விகிதத்தின விட நான்கு மடங்கு அதிகமானதாகும்.

நிறுவனத்தின் வியாபாரச் செயற்பாட்டுச் சூழலில் அதிர்ச்சிகளை தாங்கும் AIAஇன் திறனை இது மேலும் செயல் விளக்குவதோடு, வாடிக்கையாளர்களுக்குத் தொடர்சியாக தனது உறுதியான வாக்குறுதிகளையும் வழங்குகின்றது. மேலும், இது உயர் தரமான முதலீடுகளில் கவனம் செலுத்தும் நிறுவனத்தினுடைய விவேகமான முதலீட்டு மூலோபாயத்தினாலும் உந்தப்படுகின்றது.

மக்கள் வங்கியின் கோடிக்கணக்கில் வாசி வெற்றிச் சீட்டிழுப்பின் முதலாவது மில்லியன் வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

மக்கள் வங்கியின் "People's Remittance கோடிக்கணக்கில் வாசி அனுப்புங்கள் வெல்லுங்கள்" வெற்றிச் சீட்டிழுப்பின் முதலாவது மில்லியன் வெற்றியாளராக பெப்ரவரி மாதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாதம்பே பேரிய வசிக்கும் பீ.ஏ.ஹசினி கௌசல்யாவுக்கான ஒரு மில்லியன் பரிசுத் தொகையை கையளிக்கும் நிகழ்வானது கொழும்பு – 02இல் அமைந்துள்ள மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்தில், மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

அதேபோல் பெப்ரவரி மாதத்துக்கான வாராந்த இரண்டு வெற்றியாளர்களான கொபெயிகனே யிலுள்ள டப்ளியூ.பீ.ரேணுகா பியசீலி மற்றும் கெழுனுபுரவிலுள்ள ஆர்.எம்.பீ.கே. குமார ரத்நாயக்க ஆகியோருக்கு 22 கரட் மதிப்பிலான தங்க நாணயங்களும் அன்றைய தினம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் (வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் சேவைகள்) ரொஹான் பத்திரகே, பிரதி பொது முகாமையாளர் (கிளை முகாமைத்துவம்) மதிற்ற பிரேமரத்ந, உதவி பொது முகாமையாளர் (வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் சேவைகள்) அருணி லியனகுணவர்தன, விற்பனைத் தலைவர் நாலக விஜேவர்தன, பிரதான முகாமையாளர் (வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் சேவைகள்) ரேணுகா அருணசாலம், சிரேஷ்ட முகாமையாளர் (வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் சேவைகள்) திலினி பெரேரா மற்றும் மாதம்பே பிரதேச முகாமையாளர் ஜே.எம்.பண்டு ஷாந்தினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அலியான்ஸ் லங்கா நிறுவனம் மஹியங்கனையில் தனது 2ஆவது நிலைபேற்றியல் முயற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது

உலகளாவிய காப்புறுதி வர்த்தகநாமமான அலியான்ஸ் லங்கா, நிலைபேற்றியல் கொண்ட பொருளாதாரங்கள் மற்றும் சமூகங்களைத் தோற்றுவித்து வளர்ப்பதற்கு உதவும் நிறுவனத்தின் உலகளாவிய மற்றும் உள்ளூர் குறிக்கோளை உண்மையாக நிலைநாட்டும் வகையில் தனது 2ஆவது பாரிய நிலைபேற்றியல் முயற்சியை மஹியங்கனை பிரதேசத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்து கையளிப்பது தொடர்பில் அறிவித்துள்ளது. இந்தத் திட்டமானது, மஹியங்கனையிலுள்ள பிபிலை/மஹியங்கனை/னோனிகம ஆரம்ப பாடசாலையில் ஒளிமின்னழுத்த சூரிய மின் உற்பத்தித் தொகுதியை பொருத்துதல் மற்றும் தொழிற்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்தத் திட்டம் இப்போது பாடசாலை தனது தினசரி எரிசக்தித் தேவைகளை பூதப்பிக்கத்தக்க எரிசக்தி மூலத்திலிருந்து பெற முடியும் என்பதை உறுதிப்படுத்தும் அதே நேரத்தில், உற்பத்தி செய்யப்படும் தேவைக்கதிகமான மின்சாரத்தை தேசிய மின் விநியோகத்திற்கும் பங்களிக்கிறது.

DPMC முதலாவது புதிய மோட்டார் சைக்கிளை அறிமுகப்படுத்தியது

வாகன உற்பத்தி/ஒருங்குசேர்த்தல் தொழில்துறை மற்றும் வாகன உதிரிப்பாக உற்பத்தித் தொழில்துறைக்கு கைத்தொழில் அமைச்சினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான செயற்பாட்டு நடைமுறையின்கீழ் உள்நாட்டில் பெறுமதிசேர்க்கப்பட்ட மோட்டார்சைக்கிளை அறிமுகப்படுத்திய முதலாவது நிறுவனமாக டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (லங்கா) லிமிட்டெட் விளங்குகிறது.

20 வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் விருப்பமான மோட்டார்சைக்கிள்களாகத் திகழும் பஜாஜ் CT 100 இரண்டு வருட கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் புதிதாக சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. பஜாஜ் குடும்பத்தில் அதிகம் விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்களில் ஒன்றான பஜாஜ் CT 100 அதன் எளிபொருள் திறன், நீடித்துழைப்பு மற்றும் செயல்திறனுக்காக புகழ்பெற்றிருப்பதுடன், இது தற்போதைய பொருளாதாரச் சூழலில் சிறந்த வாகனமாகவும் உள்ளது.

தங்கப் பதக்க விருதை வென்ற ஆர்.எம்.பெரேரா நிறுவனம்

தளபாட உற்பத்தி மற்றும் உட்புற வடிவமைப்புத் துறையின் முன்னோடி நிறுவனமான ஆர்.எம். பெரேரா தனியார் நிறுவனம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்த சிறந்த கைதொழிலுக்கான விருது வழங்கும் விழாவில் மத்திய மற்றும் பாரியளவிலான பிரிவுகளில் தங்கப் பதக்க விருதை வென்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச ஆகியோரின் தலைமையில் வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர்.எம்.பெரேரா தமக்கான விருதை பெற்றுக்கொண்டார்.

தொடர்ச்சியான முறையில் வர்த்தகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லுதல், பொருட்கள் உற்பத்திக்கு புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு செய்தமை ஆகிய காரணிகள் இந்த விருதை வெல்வதில் பெரும் பங்காற்றியுள்ளன.

அந்தாரதெனிய எஸ்டேட்ஸ் நிறுவனத்துக்கு தங்கப்பதக்க விருது

இலங்கை தேயிலைக் கைத்தொழில்துறையில் பல தசாப்தகால புகழ்மிகு நாமமாக திகழ்கின்ற அந்தாரதெனிய எஸ்டேட்ஸ் தனியார் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் (IDB) ஏற்பாடுசெய்யப்பட்ட சிறந்த கைத்தொழில்களுக்கான விருது வழங்கும் விழாவில் பெறுமதிசேர் தேயிலை மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் பிரிவின் தங்கப் பதக்க விருதை வென்றுள்ளது. ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவின் தலைமையில் வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்ற மேற்படி விருது விழாவில் நிறுவனத்தின் அதிபர் கலாநிதி டபிள்யூ. ஜினதாச அதற்கான விருதை பெற்றுக்கொண்டார்.

AGM Products நிறுவனத்துக்கு சிறந்த கைத்தொழிலுக்கான வெண்கலப் பதக்க விருது

இலங்கையின் முதன்மையான வாசனைத் திரவியப் பொருள் உற்பத்தி நிறுவனமான AGM Products தனியார் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) ஏற்பாடுசெய்த சிறந்த கைத்தொழில்களுக்கான விருது வழங்கும் விழாவில் சிறியளவிலான பிரிவின் வாசனைத் திரவியப் பொருட்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திப் பிரிவின் வெண்கலப் பதக்க விருதை வென்றுள்ளது. ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவின் தலைமையில் வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் மேற்படி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அப்துல் வாஹிட் மொஹமட் பாருக் தமக்கான விருதை பெற்றுக்கொண்டார்.

திகதி 07.04.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lanlb

மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் : 4730

இதில் முதலாம் வெள்ளப்பரிசு தொகுப்பு பின்வருமாறு

ரூ. 11,157,180.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு

ரூ. 20,933,839.00

ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கம் 0 8 9 7 7 9

ஹந்தான Handahana ரூபாய் ஒரு பரம்பரை

ஜெயந்தி 0039 தினம் வரை ரூ. 4,469,280.00

ஜெயந்தி குலுக்கல் திகதி 39 42 46 55

இலக்க தேசிய நிதியத்தின் நற்பணிக்காக ரூ. 2,651,205.00

தன நிதானய

சீட்டிழுப்பு இலக்கம் : 780

இதில் முதலாம் வெள்ளப்பரிசு தொகுப்பு பின்வருமாறு

ரூ. 3,674,260.00

V 06 57 59 79 வெற்றி இலக்கங்கள்

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு

ரூ. 106,759,856.80

மேகா POWER 23+ மேகா சுபர் மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம் 1078

இதில் முதலாம் வெள்ளப்பரிசு தொகுப்பு பின்வருமாறு

ரூ. 5,058,960.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு

ரூ. 246,497,160.00

Q 11 01 65 72 79

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபையினது வெற்றி இலக்கங்கள் National Lotteries Board

தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk

பெக்ஸ்: 011-4609475 Web : www.nlb.lk

புதிய ஃபினிஷராக உருவெடுத்துள்ள தமிழக வீரர் தினேஷ் கார்த்திக்

சர்வதேச போட்டிகளிலிருந்து பல காலத்திற்கு முன்பே விலகிய ஒரு வீரரால் எப்படி இந்தளவுக்கு ஒரு ஃபினிஷராக முடியும்? ஆர்.சி.பியின் புதிய ஏ.பி.டியாக, ஃபினிஷர் அவதாரம் எடுத்துள்ளார் தினேஷ் கார்த்திக்.

திறமைகளும், வாய்ப்புகளும் ஒன்றாய்ச் சந்திக்கும் புள்ளியாகத்தான் ஐ.பி.எல். பார்க்கப்படுகிறது. இது சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கான மேடை மட்டுமல்ல, முடிந்ததாகக் கருதி, முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, ஏன் 'முற்றும்' என்றே எழுதப்பட்ட பலரது கதைகளிலும் புதிய அத்தியாயங்கள் இங்கே தொடங்கியுள்ளன. அந்த வரிசையில், தற்போது இணைந்துள்ள பிரதான வீரர்தான் தினேஷ் கார்த்திக். தொடரின் முதல் மூன்று போட்டிகளிலும் அவரது செயற்பாடுகள் இதனையே உறுதிசெய்துள்ளன.

இந்தாண்டு ஐ.பி.எல். ஏலத்தில் 5.50 கோடி கொடுத்து ஆர்.சி.பி. அணி தினேஷ் கார்த்திக்கை வாங்கியபோது, அந்த முடிவில் சில ஆர்.சி.பி. ரசிகர்களுக்கே பெரிதாக உடன்பாடில்லை. விமர்சனத் தோட்டாக்கள் அதிவேகமாக சமூக வலைத்தளங்களில் எல்லாம் புறப்பட்டு வந்தன. கரியர் முடியும் தறுவாயில் இருக்கும் டு பிளெஸ்ஸியைக் கூட ஒப்பனராகவும், புதிய தலைவராகவும் ஏற்றுக்கொண்டவர்கள், ஃபினிஷராக தினேஷ் கார்த்திக்கை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என வெளிப்படையாகவே தெரிவித்திருந்தனர்.

இத்தனைக்கும் வீரராக, விக்கெட் கீப்பராக, டொமெஸ்டிக் கிரிக்கெட் உலகை அறிந்தவராக, பல தமிழக வீரர்களை மெருகேற்றிய அணித்தலைவராக அவரின் பணி அளப்பரியது. ஒரு கெப்டனாக பல வீரர்களுக்கு அடையாளத்தைத் தந்து உலகறிய வைத்தவர், சரியான வீரர்களைக் கனகச்சிதமான இடத்தில் பொருத்தி, வெல்வதற்கான வித்தையையும் தமிழக அணிக்குக் கற்றுத் கொடுத்தார். கெப்டனாகவும் பல ஏற்ற இறக்கங்களைப் பார்த்த முன்னனுபவம் அவருக்கு உண்டு. இந்தக் காரணத்திற்காகவே, அவரை ஆர்.சி.பியில் கோஹ்லிக்கு அடுத்ததாக கெப்டன்ஷிப் பதவிக்கு ஏற்றவர் என டு ப்ளஸ்ஸி மற்றும் மெக்ஸ்வெல்லுக்குச் சரிசமமாக பார்த்தவர்களும் உண்டு.

அப்படியிருக்க, அவரை சில ரசிகர்கள் தள்ளிவைத்துப் பார்க்கக் காரணம், அவருடைய வயது. சர்வதேச போட்டிகளிலிருந்து பல காலத்திற்கு முன்பே விலகிய ஒரு வீரரால், எப்படி இந்த இளைஞர்களுடைய ஃபார்மட்டில் கோலோச்ச முடியும்? மாதக்கணக்கில், வர்ணனையாளராக அடுத்தவர்களின் ஆட்டத்திறனைப் பற்றியும் போட்டிகளின் நீக்கு போக்குகள் பற்றியும் ஏற்ற இறக்கத்தோடு வர்ணித்துக்கொண்டிருப்பவர். கிரிக்கெட்டை ஆதிமுதல் அந்தம்வரை அறிந்து வைத்திருப்பவர். என்றாலும்கூட அவருக்குக் களத்தில் மணிக்கணக்கான பயிற்சியும் முயற்சியும் ஐ.பி.எல். தவிர்த்த மாதங்களில் இல்லையே, அப்படியிருக்க எப்படி அவரிடம் எழுச்சியை எதிர்பார்க்க முடியும்?

இவையெல்லாம்தான் அவரை ஏற்றுக் கொள்ளாதவர்களின் வாதமாக இருந்தது. அவை எல்லாவற்றிற்கும், "கமென்ட்ரி பாக்ஸில் மட்டுமே உதடுகள் பேசும், களத்தில் பேட்தான் பேசும்" என்பதை மீண்டும் ஒருமுறை உரக்கச் சொல்லியிருக்கிறார் தினேஷ் கார்த்திக். அதற்கான உதாரணம், இந்த சீசனில் மூன்று போட்டிகளில் 204.55 ஸ்ட்ரைக்ரேட்டில் அவரிடமிருந்து வந்து சேர்ந்திருக்கும் ரன்கள்.

பொதுவாக ஓர் அணியின் ஃபினிஷர் எப்படி இருக்கவேண்டும்? அழுத்தத்தை அடித்தளத்தை மாற்றிக்கொண்டு, அதீத பிரஷருடன் ரேஸ் குதிரையாக தறிகெட்டு ஓடும் இரண்டாம் பாதி ஓவர்களை அவர்கள் சந்தித்தாக வேண்டும். ஒரு தவறான பந்தின் விலை, ஒரு போட்டியின் முடிவாகக்கூட இருக்கலாம். அதுவும் இறுதி ஓவர்கள், டெத் ஓவர்கள் எனச் சொல்லப்படுவதற்கேற்ப மரண பீதியை ஏற்படுத்தும். அத்தகைய நிலையில் இறங்கி எட்டவேண்டிய இலக்கு, விக்கெட் கையிருப்பு, வீச இருக்கும் பந்துகளின் எண்ணிக்கை, குறிவைக்க வேண்டிய பௌலர்கள், அவர்களிடம் எஞ்சியுள்ள ஓவர்கள், உடன் நிற்கும் இன்னொரு பேட்ஸ்மேனின் பலம் மற்றும் பலவீனங்கள், தன்னுடைய எல்லைகள், இவை எல்லாவற்றையும் மனதில் அசைபோட்டு, சரியான வகையில், அதுவும் குறுகிய நேரத்திற்குள் செயல்பட வேண்டும்.

கண்ணை மூடிக்கொண்டு லாங் ஆஃபுக்கு ஒன்று, மிட் விக்கெட்டில் ஒன்று, ஃபீல்டரே இல்லை என லாங் ஆன் பக்கம் இன்னுமொன்று என பேட்டை சுற்றுவது மட்டுமல்ல, அதையும் தாண்டி பல கூறுகளை உள்ளடக்கியது ஃபினிஷிங் ரோல். ஏற்றப்படும் அழுத்தத்தை எதிரணியின் பக்கமே எதிரொலிக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஒன்றிரண்டு பெரிய ஷொட்களைக் கவனமாக அடித்தாலே பௌலிங் பக்கம் பதறும். புது ஸ்ட்ராடஜிக்கு எதிரணி மாறும் சமயங்களில் சில இடங்களில் தடுமாறும், தவறிழைக்கும். அந்தத் தவற்றினை தனது வாய்ப்பாக மாற்றினாலே ரன்கள் வந்துசேரும். இதைத்தான் பல போட்டிகளில் செய்துவருகிறார் ஃபினிஷர் தினேஷ் கார்த்திக்.

ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில்கூட, ஒரு கட்டத்தில் இவருக்கு எப்படி ஃபீல்டிங் நிறுத்துவது என்ற குழப்பத்தை சாம்சன் முகத்தில் பார்க்க முடிந்தது. இதனால்தான் அவரால் தன் அணியை வெற்றியின் விளிம்புக்கு அழைத்துச்செல்ல முடிகிறது. 2013இல் மும்பைக்காக ஆடியபோது அவரது ப்ரைம்

ஃபார்மில் 500 ரன்களைக் கடந்தார். அங்கிருந்து டில்லி, ஆர்.சி.பி, குஜராத், கே.கே.ஆர். எனச் சென்று திரும்பவும் ஆர்.சி.பிக்கு வந்துசேர்ந்துள்ளார் தினேஷ் கார்த்திக். ஐ.பி.எல். ஆரம்பித்த ஆண்டில் தொடங்கிய அவரது ஓட்டம், இன்னமும் தொடர்கிறது. ஒன்றிரண்டு சீசன்கள் தவிர்த்து, மற்ற எல்லா சீசன்களிலும் இவரது ஸ்ட்ரைக்ரேட்டும் சிறப்பாகவே இருந்துவந்திருக்கிறது.

குறிப்பாக, 2018ஆம் ஆண்டு கே.கே.ஆர். அணியை பிளேஆஃபிற்கு எடுத்துச் சென்றார் என்பதையும் தாண்டி, வீரராகவும் அங்கே அவரது செயற்பாடுகள்தான் இன்னமும் அதிகமாகவே பேசப்படுகின்றன. கே.கே.ஆர். அணியில் பல போட்டிகளில் இவரோ, மோர்கனோ, ரசலோ இவர்களில் யாரேனும் ஒருவர் நின்றுவிட்டாலே அணியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. கரீபியன் வீரர்களால் மட்டுமே நிரப்ப முடியும் என்று பல அணிகள் கருதும் அந்த ஃபினிஷிங் ரோலை, ஓர் ஓவர்சீஸ் பிளேயருக்கான இடத்தை விரயமாக்காமல் இந்திய வீரராக செய்து முடிப்பார் என்பதுதான் அவரது கூடுதல் சிறப்பு. அதுதான் ஆர்.சி.பிக்குக் கிடைத்த பொக்கிஷம் அவர் என்பதை உணர்த்தியது.

ஆர்.சி.பி. ஆடிய முதல் மூன்று போட்டிகளுக்கும் உள்ள ஒற்றுமைகள், களத்தில் இறுதிவரை ஆட்டமிழக்காமல் நின்று கொண்டிருந்த பேட்ஸ்மேன்களில் ஒருவர் தினேஷ் கார்த்திக் என்பதுதான்.

பஞ்சாப்பிற்கு எதிராக 14 பந்துகளில் 32

டு ப்ளெஸ்ஸி, அனுஜ், கோஹ்லி ஆகிய மூவருமே ஓரளவு ரன்களைச் சேர்த்திருந்தாலும் 18ஆவது ஓவரில் களமிறங்கி, பௌலர்களைக் கலங்கடித்தார் தினேஷ் கார்த்திக். ஒரு கட்டத்திற்குப் பின், ஸ்ட்ரைக்கை அவரிடம் மாற்றிவிட்டு, மறுபுறமிருந்து அதை அணுஅணுவாக ரசித்துக் கொண்டிருந்தார் கோஹ்லி. ஓடியன் ஸ்மித்தின் ஸ்லோ பாலும் சிக்ஸருக்குப் பறந்தது, சந்தீப்பின் யார்க்கரும் பவுண்டரிக்குப் பலியானது. அவரின் 228.57 ஸ்ட்ரைக்ரேட்தான் அணியை 200 ரன்களுக்கு மேல் குவிக்கவைத்தது. தோல்விமுகம் கண்டாலும், ஆர்.சி.பிக்குள் "அவரது மறுவரவு, அணிக்கான மறுவாழ்வு" என்ற நம்பிக்கையை விதைத்தது

கொல்கத்தாவிற்கு எதிராக 7 பந்துகளில் 14

129தான் இலக்கு என்றாலும் அதனைக் கடைசி ஓவர்வரை நீடிக்க வைத்துவிட்டது தொடக்கத்தில் விழுந்த அதிவேக விக்கெட்டுகள். களத்திற்குள் தினேஷ் கார்த்திக் வந்தபோது 10 பந்துகள்தான் இருந்தன என்றால், அதில் போட்டியை முடிப்பதற்கு அவருக்குத் தேவைப்பட்டது 7 பந்துகள் மட்டுமே. அதிலும் கடைசியாகச் சந்தித்த இரண்டு பந்தும் ரசலுடையது. ஆனால், அந்த இரண்டு பந்துகளுமே யார் வீசியது என்பதை எல்லாம் யோசிக்காமல் சிக்ஸர் மற்றும் பவுண்டரியாக மாறின.

ராஜஸ்தானுக்கு எதிராக 23 பந்துகளில் 44

மிரட்டும் தோல்வி பயத்திடம் அதை ஏற்றுக் கொள்பவர் ஒரு ரகம் என்றால், அந்தத் தோல்வியையே தன்முன் மண்டியிடச் செய்பவர் ஒரு ரகம். தினேஷ் இதில் இரண்டாவது வகை. 170 ரன்கள் இலக்கைத் துரத்திய ஆர்.சி.பிக்கு விக்கெட்டுகளற்ற பவர்பிளே ஓவர்கள் நம்பிக்கை தந்தன. ஆனாலும், அடுத்த மூன்று ஓவர்களில் நான்கு விக்கெட்டுகள் விழுந்துவிட, மீதமுள்ள 45 பந்துகளில் 83 ரன்கள் சேர்க்க வேண்டும் எனத் தேவைப்படும் ரன்ரேட் 12ஐ தொட்டிருந்தது. அந்தத் தருணத்தில் ஷபாஸ் கூட சற்றே தடுமாற்றத்தில்தான் நின்றிருந்தார். ஏறக்குறைய தோல்வி ஊர்ஜிதப்படுத்தப்பட்டபோதுதான் கார்த்திக் வந்தார்.

களமிறங்கிய பின் சந்தித்த அஷ்வினின் ஓவரிலிருந்து தனது வெறியாட்டத்தைத் தொடங்கினார் தினேஷ். ஸ்லாட்டில் விழுந்த பந்து தண்டனைக்குட்பட்டு பவுண்டரி லைனில் தஞ்சம் புகுந்தது என்றால் புல் ஷொட்டுகள், ஸ்வீப், ரிவர்ஸ் ஸ்வீப் ஆகியன கண்களுக்கு விருந்து வைத்தன. இதனாலேயே பல ரசிகர்கள் டி.கே, மிஸ்டர் 360 ஆன ஏ.பி.டியை நினைவூட்டுவதாகவும், அவரது ஷொட்டுகள் களத்தை முழுவதும் கட்டுக்குள் கொண்டு வருவதாக இருந்ததாகவும், ஏ.பி.டி. இல்லாத குறையை இவர் நிறைவேற்றுவதாகவும் கூறியிருந்தனர்.

அதிலும் எந்த ஆக்ரோஷத்தையும் கண்களிலோ, முகத்திலோ காட்டாமல் அதை பேட்டிங்கில் காட்டுவதும் ஒரு கலைதான். அவரது கமென்டரி எப்படி இருக்குமோ அப்படித்தான் அவரது ஆட்டத்தில் இன்டென்ட் நிரம்பி வழிந்தது. அது கவனத்தைக் கவர்வதாகவும் அமைந்தது. அவரது ஆட்டம் கொடுத்த ஊக்கமும் நம்பிக்கையும்தான், ஷபாஸையும் சிறப்பாக ஆடச்செய்தது. அணியும் சுலபமாக வெற்றிபெற்றது. இந்த ஃபினிஷர் ரோலை சர்வதேச அரங்கில் கிடைத்த சொற்பப் போட்டிகளிலும் தினேஷ் சரியாகவே செய்திருக்கிறார்.

2018ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இலங்கை – இந்தியா

> "கமென்ட்ரி பொக்ஸில் மட்டுமே உதடுகள் பேசும், களத்தில் பேட்தான் பேசும்" என்பதை மீண்டும் ஒருமுறை உரக்கச் சொல்லியிருக்கிறார் தினேஷ்

– பங்களாதேஷ் அணிகள் பங்கேற்ற சுதந்திர கிண்ணத் தொடரை யாராலும் மறக்க முடியாது. அத்தொடரில் பங்களாதேஷுடனான இறுதிப் போட்டியில், இறுதி இரண்டு ஓவர்களில் 34 ரன்கள் தேவைப்பட, 8 பந்துகளில் 29 ரன்களை அடித்து த்ரில்லரில் வெற்றியை இந்தியாவுக்குப் பரிசளித்தார். உலகத்தரம் வாய்ந்த போனி இருந்ததால்தான், இவரது பெரும்பாலான நாட்கள் பேக்கப் விக்கெட் கீப்பராகவும், பிளேயிங் லெவனில் இல்லாததாகவும் கழிந்தன. அவரது முழுத்திறமையையும் வெளிப்படுத்த வாய்ப்பளித்த களங்கள் உள்ளூர் கிரிக்கெட்டும் ஐ.பி.எல். உம்தான்.

அதேபோல் தற்போது ஆர்.சி.பியில் மிகச் சிறப்பாக மெக்ஸ்வெல், ஏ.பி.டி. இல்லாத குறைகூடத் தெரியாத அளவு இவர் நிவர்த்திசெய்து வருகிறார். கடந்தாண்டு ஒரு ட்வீட்டில், தினேஷ் கமெண்டேட்டராக இருப்பதைக் குறிப்பிட்டு, "நான் நானாகவே இருக்கிறேன்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தார். அதற்கு ரோஹித் சர்மா, "உங்களிடம் இன்னமும் கிரிக்கெட் மீதமுள்ளது" எனத் தெரிவித்திருந்தார்.

உண்மையில் 37 வயதை நெருங்கினாலும், இன்னமும் கிரிக்கெட் மீதான அவரது வேட்கை தணியவில்லை. ரி20 ஃபார்மெட்டில் இந்தியாவுக்காக கம்பேக் கொடுக்க வேண்டும், அதற்காக எனது திறமையை பயிற்சியாளர் அபிஷேக் நாயரின் உதவியோடு வளர்த்துக்கொண்டுள்ளேன் என்று கடந்த பெப்ரவரியில் கூறியிருந்தார் தினேஷ். அதற்கான ஆரம்பகட்டமாகக்கூட இது அமையலாம்.

காரைக்கவி

சித்துவக்கேடு

182

நாடக மேடையில போடுற திரையலைப் பற்றி இளங்கோவடிகள் சொன்ன பாட்டை சொன்ன ஆச்சி, "அடட மோன உவர் இளங்கோவடிகள் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கந்து வரல் எழினி எண்டு மூண்டு விதமான திரையலைப் பற்றி சொல்லி இருக்கிறார்" எண்டா.

ஆச்சி உப்பிடி சொல்லவும் எனக்கெண்டா பெரியதொரு இதுவா இருந்தது. அதை என்னண்டு சொல்லுறது. பெரிய பெருமையா இருந்துது. என்னண்டால் உங்கை கனபேர் நினைக்கினம் எல்லாம் வெளிநாடுகளிலை தான் திறமா இருந்தது எங்களிட்டை ஒண்டும் இல்லை எண்டு. உங்கை போன போன நாடுகளில்லை போய் நிரந்தரமா தங்கினவை கனபேர் அப்பிடித்தான் நினைக்கினம்.

தற்செயலா உதுகளைப் பற்றித் தெரிஞ்சாலும் அதுகளைத் தங்கட பிள்ளை குட்டியளுக்கு சொல்லிக் குடுக்கிறேல்லை. உப்ப பாத்தம் எண்டால் ரெண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியே எங்கட ஆக்கள் உந்த மேடை எப்பிடி போட வேணும். மேடையில திரையல் எப்பிடி போட வேணும் எண்டெல்லாம் கதைச்சிருக்கினம் செய்திருக்கினம்.

ஆச்சியிட்டை அது சரி எனை உந்த திரையலைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லணை எண்டவும் ஆச்சி தொண்டைய செருமிக் கொண்டு உந்த ஒரு முக எழினி எண்டது மேடையின்ரை ஒரு பக்கத்தில சுருக்கி கட்டுற திரை உங்க பாத்தம் எண்டால் உப்பவும் மேடை வழியை உப்பிடி ஒரு பக்கத்தில சுருக்கி கட்டுறதை பாக்கலாம். அதாவது, உந்தத் திரைய மேடையின்ரை ஒரு பக்கத்தில இருந்து இன்னொரு பக்கத்துக்கு இழுத்துக் கொண்டுபோகலாம். பிறகு திரும்பவும் இழுத்து விடலாம் எண்டா.

அதுமாதிரி பொருமுக எழினி எண்டது ஒரு திரையை ரெண்டாப் பிரிச்சு ஒண்டோடை ஒண்டு சேர்க்கவும் பிரிக்கவும் கூடியதா இருக்கும். உங்கை பாத்தி எண்டால் உங்க உந்த பள்ளிக்கூட மேடையளிலை முன்னுக்கு போட்டிருக்கும். நிகழ்ச்சி தொடங்க முந்தி ஒவ்வொரு பக்கமா இழுப்பினம். பிறகு நிகழ்ச்சி முடிய இழுத்து மூட ரெண்டும் ஒண்டா வந்திடும் எண்டா.

அதுமாதிரி கந்துவரல் எழினி எண்டது மேலை இருந்து கட்டித் தொங்கும். மேலை இழுத்து சுருட்டிக்கொண்டு போகலாம். பிறகு தேவை எண்டால் அவிட்டு விடலாம். உங்கை எங்கட கோயில் வசந்த மண்டபங்களிலை உப்பிடியான திரைகளைத்தான் போட்டிருப்பினம். உங்க அரச நாடகங்கள் நடக்கேக்கை உப்பிடியான திரையளைப் பாக்கலாம் எண்டா.

அச்சி உப்பிடி சொல்லவும் அப்பு, அட பெடி உவர் இளங்கோவடிகள் தனிய உந்த மேடை எப்பிடி இருக்கவேணும் திரையல் எப்பிடி இருக்கவேணும் எண்டு மாடும் சொல்லேல்லை. ஒரு மேடையில நடிகர்கள் எந்தப் பக்கத்ததால போக வேணும் வர வேணும் எண்டெல்லாம் சொல்லி இருக்கிறார் கண்டியோ எண்டார்.

"இயல்பினின் வழாஅ இருக்கை முறைமையின்
குயிலுவ மாக்கள் நெறிப்பட நிற்ப
வலக்கால்
முன்மிதித்து ஏறி
அரங்கத்து
வலத்தூண் சேர்தல்
வழக்கு எனப் பொருந்தி
இந்நெறி வகையால்
இடத்தூண் சேர்ந்த
தொல்நெறி இயற்கைத்
தோரிய மகளிரும்"

எண்ட பாட்டில அவர் உதுகளை வலு விலாவாரியாச் சொல்லி இருக்கிறார் எண்டார்.

உதில அவர் என்ன சொல்லுறார் எண்டால், மாதவி வலது காலை முதல் வைச்சு உந்த பொருமிக எழினியுள்ள வலத்தூண் பக்கம் வந்தாளாம். அப்பிடி அவள் வரேக்கை அவளின்ரை தோழிமார் மேடையின்ரை இடப்பக்கத்தால அதாவது ஒருமிக எழினியுள்ள இடதுத்தூண் பக்கம் போனவையாம்.

இப்பவும் எங்கட நாடகங்களைப் பாத்தியெண்டால் வீட்டுக் காட்சி வரேக்கை வீட்டுக்கு உள்ளை போறதுக்கு வலப்புறமும் வீட்டிலை இருந்து வெளியாலை போறதுக்கு இடப்புறமும் பாவிப்பினம் எண்டார் .

உந்தப் பாட்டிலை இளங்கோவடிகள் இன்னுமொரு விஷயம் சொல்லுறார். என்னண்டால் உந்த பக்கவாத்தியக் கலைஞரை அவர் குயிலுவர் எண்டு. அதாவது குயிலுவக் கலைஞர் எண்டு சொல்லுறார். அது மட்டுமில்லை உவை உந்த பக்க வாத்தியம் வாசிக்கிறவை ஒரு கோல் இடைவெளியிலை மேடையின்ரை ஒரு பக்கத்தில நிக்க வேணும் எண்ட செய்தியையும் சொல்லுறார் எண்ட அப்பு, நூந்துபோன சுருட்டைப் பத்த வக்க அடுப்படிக்கு எழும்பிப் போனார்.

(தொடரும்)

வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம் சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய குருக்கள்

இவ்வார இராசி பலன்கள்

மேஷ ராசி அன்பர்களே!

பணப்புழக்கம் அதிகரிக்கும். திருமண வயதிலுள்ள பிள்ளை அல்லது பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். கணவன் - மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்றாலும் உடனே சரியாகிவிடும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவருடன் அனுசரித்துச் செல்வது நல்லது. இழுபறியாக இருந்த அரசாங்கக் காரியங்கள் அதிகாரிகளின் ஆதரவால் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் சற்று இறுக்கமான சூழ்நிலையே காணப்படும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே நடைபெறும். சக வியாபாரிகளுடன் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக நடந்துகொள்ளவும். புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகம் உற்சாகம் தரும். பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

ரிஷப ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் சிலருக்கு சிறுதொகை கைமாற்றாக வாங்க நேரிடும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் மறைந்து மகிழ்ச்சி உண்டாகும். வெளியூர்ப் பயணங்களின்போது கூடுதல் கவனம் தேவை. இளைய சகோதரர்களால் உதவியுண்டு. பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தையுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கச் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். உழைப்புக்கேற்ற இலாபம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர். பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது. அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும்.

மிதுன ராசி அன்பர்களே!

பல வகைகளிலும் அனுகூலமான வாரம். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் வாழ்க்கைத்துணையின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமை இழக்காமல் இருப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. பெண்களுக்கு நிம்மதியான வாரம். எதிர்பார்த்த சுபநிகழ்ச்சி ஒன்று நடப்பதற்கான வாய்ப்புள்ளது. பணவரவும் திருப்திகரமாக இருக்கும்.

கடக ராசி அன்பர்களே!

ஓரளவுக்கு நன்மைகள் நடக்கும் வாரம். ஆனால், பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. பால்ய நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருவதாக இருக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கவனமாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஒருசிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்காது. வியாபாரம் அபிவிருத்தியடைய கூடுதலான முயற்சியும் உழைப்பும் தேவை. பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைப்பது தாமதமாகும். பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவருடன் ஏற்பட்டிருந்த மனக் கசப்புகள் நீங்கி மகிழ்ச்சி ஏற்படும்.

சிம்ம ராசி அன்பர்களே!

தேவையான அளவுக்கு பணவரவு இருந்தாலும், சேமிக்க முடியாதபடி செலவுகள் ஏற்படும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் உங்களைப் பற்றி அவதூறாகப் பேசினாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலுவலகத்தில் உங்களின் பணித்திறன் மேம்படும். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும். கடையை வேறு இடத்துக்கு மாற்ற நினைத்தால் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வாடிக்கையாளர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். பெண்களுக்கு உற்சாகமான வாரம். புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி, அவர்களுடன் உறவு சுமுகமாகும்.

கன்னி ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருப்பதாலும், தேவையற்ற செலவுகள் இல்லை என்பதாலும் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தாய் வழி உறவினர்களால் வீண் குழப்பங்கள் ஏற்படக்கூடும். சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் தேவையற்ற பிரச்னைகளைத் தவிர்த்துவிடலாம். சிலருக்கு வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே ஏற்படும். வியாபாரத்தில் இலாபம் குறைவாகத்தான் இருக்கும். கடையை விரிவு படுத்தவோ அல்லது வேறு இடத்துக்கு மாற்றவோ சாதகமான சூழ்நிலை இல்லை. கடன் வாங்குவதை கண்டிப்பாகத் தவிர்க்கவும். பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதில் சற்று சிரமம் ஏற்படும் என்றாலும் சமாளித்துவிடுவீர்கள். உங்கள் தேவைகளை கணவர் நிறைவேற்றுவார்.

துலா ராசி அன்பர்களே!

இந்த வாரம் உற்சாகமான வாரமாகவே அமையும். புதிய முயற்சிகளுக்கு ஏற்ற வாரம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் சிறிது அலைச்சலும் அதனால் சோர்வும் உண்டாகும். பொறுமை அவசியம். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகள் கிடைப்பதற்கும் வாய்ப்புண்டு. வியாபாரத்தில் விற்பனை இருந்தாலும்கூட அதற்கேற்ற இலாபம் கிடைக்காது. எனவே, பொறுமையை விடாமல் வியாபாரத்தில் கவனமாக இருப்பது நல்லது. பணியாளர்களிடம் அனுசரணையாக நடந்துகொள்ளவும். வாரப் பிற்பகுதியில் பிள்ளைகள் மூலம் எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

விருச்சிக ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். அவசியத் தேவை ஏற்பட்டால் மட்டுமே கடன் வாங்கவும். உறவினர்களுடன் வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான எந்தவொரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருக்கும் வேலையில் இருந்து வேறு வேலைக்கு இப்போது முயற்சி செய்யவேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து செல்லவும். வியாபாரத்தில் விற்பனை நல்லபடியாக இருப்பதுடன், எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பங்குதாரர்களிடம் கேட்கும் பண உதவி கிடைக்கும். பெண்கள் பொறுமையாக இருக்கவேண்டிய வாரம்.

தனுசு ராசி அன்பர்களே!

பண வரவுக்குக் குறைவிருக்காது. குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். சகோதர வகையில் சிற்சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பெரியளவில் பாதிப்பு இருக்காது. கணவன் - மனைவி ஒருவரையொருவர் அனுசரித்து செல்வது நல்லது. அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்கள் உதவிகேட்டு வருவார்கள். வியாபாரத்தில் விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம். புதிய முதலீடுகள் விஷயத்தில் நன்றாக யோசித்து இறங்கவும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம் இது. சகோதரர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புள்ளது.

மகர ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததைவிட பணவரவு அதிகமாக இருக்கும். தேவையற்ற செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. வராது என்று நினைத்த கடன் தொகை கைக்கு வந்துசேரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாக செயல்படுவீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே திருப்தி தருவதாக இருக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். கடையை விரிவுபடுத்துவது போன்ற முயற்சிகளை இந்த வாரம் மேற்கொள்ளலாம். பெண்களுக்கு தேவையற்ற செலவுகள் ஏற்படுவதன் காரணமாக மனதில் சிறுசிறு சஞ்சலம் ஏற்படக்கூடும். புகுந்த வீட்டு உறவினர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது அவசியம்.

கும்ப ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் கூடும். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சி உண்டாகும். பிறருக்குக் கொடுத்து வராது என்று நினைத்த கடன் தொகை கிடைக்கக்கூடும். வேலைக்குச் செல்லும் அன்பர்கள் வேறு வேலைக்கு முயற்சி செய்யலாம். நல்ல வேலை கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. அலுவலகத்தில் சக ஊழியர்களால் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வியாபாரத்தில் கடுமையாக உழைத்தால் மட்டுமே விற்பனையை அதிகரிக்க முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். கணவருடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை காப்பது நல்லது.

மீன ராசி அன்பர்களே!

பணவரவு ஓரளவு திருப்தி தரும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்துகொண்டு உறவு பாராட்டுவார்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை நிலவும். ஒருசிலருக்கு பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்கு சாத்தியமுண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருப்பது மகிழ்ச்சி தரும். பற்று வரவில் பிரச்சினை எதுவும் இருக்காது. வியாபாரம் தொடர்பாக சிலருக்கு தொலைதூர பயணங்கள் மேற்கொள்ள நேரிடும். பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் சிலருக்குக் கடன் வாங்க நேரிடும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.



தமிழன் சிறுகதை

களையெடுப்பு

எம்.சீ.யே.பரித் சாயிந்தமருது

பதவி உயர்வுடன் கிடைத்த இடமாற்றக் கடிதத்துடன் அந்த வங்கியின் கடகைளை பொறுப்பேற்பதற்காக வந்திருக்கின்றேன். வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கடன்கள் மற்றும் நிலுவைகள் பற்றிய விவரங்களை பரிசீலித்துக்கொண்டிருக்கின்றேன், குறைந்தது இன்னும் மூன்று நாட்களின் பின்புதான் முகாமையாளின் ஆசனத்தில் அமரலாம் என நினைகிறேன். அதன் பின்னர்தான் ஏற்கனவே கடமையாற்றிக்கொண்டிருக்கும் முகாமையாளர் அவருக்கு கிடைத்திருக்கின்ற கிளைக்கு சென்றுவிடுவார்.

காலை பத்து மணி "சார் சுகமாக இருக்கிறீகளா?" தேநீர் கப்புடன் என் முன்னால் நின்றுகொண்டிருந்தான் அங்கு சிற்றாழியனாக கடமையாற்றும் அருதயன்.

"ஆ .. அருதயன் நீ எப்படி சுகமாக இருக்கிறாய." பதிலுக்கு நானும் அதே வினாவை அவனிடம் கேட்டுவிட்டு "பரவாயில்லை" என்று சுருக்கமாக சொல்லிவிடுகிறேன் "ஆறிப்போய்விடும் சார். கெதியா குடிங்கோ" என்று சொல்லிவிட்டு மற்ற சக ஊழியர்களின் பக்கமாக சென்றுவிடுகிறான்.

பதினைந்து வருடன்களுக்கு முன்னர் நான் வங்கியில் சேர்ந்த புதிதில் அம்பாறை கிளைக்கு நியமனம் பெற்று வந்திருந்தபோது, அங்கு கடமையாற்றும் எல்லோரும் பெரும்பான்மை இன சகோதரர்கள். எனக்கு அவர்களின் மொழி பேசத்தெரியாது. ஆனால், பேசுவதை ஓரளவு புரிந்துகொள்வேன். வாடிக்கையாளர்களின் வேண்டுகோளை புரியாமல் தடுமாறும்போதெல்லாம் கைகொடுப்பது இந்த அருதயந்தான்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது அருதயநாதனுடன் பழகிய அந்த நாட்கள். ஆரம்பத்தில் அவரவர் பெயரைக்கொண்டு அழைத்துக்கொள்வோம். காலப்போக்கில் நான், நீ, மச்சான்.. என்று அழைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தோம். இன்று அவன் என்னை சார் போட்டு அழைக்கும்போது அவனின் மனநிலை எப்படி என்று என்னால் புரிய முடியாவிட்டாலும், எனக்கு மனதளவில் சங்கடமாகவே இருந்தது, இருந்தபோதும் எனது பதவி நிலையால் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டிய நிலை. அவன் பிறந்தது, வாழ்ந்தது எல்லாம் அம்பாறையை அண்டிய பகுதியில்தான். அவனது குடும்ப உறவினர்கள் எல்லாம் ஒரு சிறிய கிராமமாக வாழ்கின்றார்கள். அநேகமானவர்கள் அரச காரியாலயங்களில்தான் சிற்றாழியர்களாக கடமையாற்றுகின்றார்கள். தாய்மொழி தமிழ் என்றாலும் சிங்களமொழி சரளமாக பேசுவார்கள்.

அருதயன் வேலைக்கு வரும்போது வெள்ளை நிற சேர்ட்டும் நீள காற்சட்டையும் அணிந்திருப்பான். கண்டதும், சிற்றாழியரென்று உடனே எவரும் எடைபோட முடியாது. அநேகமான நேரங்களில் முகாமையாளரின் அறைக்குள் அவனை காணக்கூடியதாக இருக்கும். காரியாலய வேலை முடிந்த நேரங்களில் முகாமையாளரின் சொந்த வீட்டுவேலைகளையும் கவனித்துக்கொள்வான். இதனால் இவனுக்கு முகாமையாளிடம் ஒரு தனி மதிப்பும் இருந்தது. அதை ஒரு மூலதனமாக வைத்துக்கொண்டு அவனுக்கு இணங்கிப்போகாத சக ஊழியர்களை பற்றி உண்மைக்குப்பும்பான கட்டுக்கதைகளை முகாமையாளரிடம் அள்ளிவைப்பதும் அதனால் சிலவேளைகளில் முகாமையாளருக்கும் ஊழியர்களுக்கும் இடையில் சில முரண்பாடுகள் ஏற்படுவதுமுண்டு.

காலப்போக்கில் அருதயனுக்கு விளங்கப்படுத்தும் நிலைக்கு சிங்களமொழியில் நான் தேர்ச்சிபெற்றிருந்தேன். அதனால் எனக்கும் முகாமையாளருக்கும் இடையில் அருதயனின் மொழிபெயர்ப்பு வேலைக்கு இடமிருக்கவில்லை.

சிலவேளைகளில் முகாமையாரைப்பற்றி என்னிடம் பொய்யான குறைகளை சொல்லி எனக்கும் முகாமையாருக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் அளவிற்கு பலமுறை முயற்சிசெய்து, தோற்றுபோயிருக்கின்றான். அப்போதெல்லாம் அவனுக்கு புத்திமதி சொல்லியிருக்கின்றேன்.

"உங்களுக்கென்ன. நீங்க இப்ப மனேஜர் ஆள். நான் எது சொன்னாலும் உங்களுக்கு புரியாது" என்று சொல்லிக்கொண்டு ஏதோ உத்தமன்போல் அறிவித்திருக்கின்றேன்" - என்றார் முகாமையாளர்.

அதன்பின்னர் ஒரு வாரத்தால் தூர இடத்திற்கு மாற்றலாகியிருந்தான். நானும் சில மாதங்களின்பின் கொழும்பிற்கு மாற்றம் கேட்டு சென்றுவிட்டேன். இப்போதுதான் சொந்த ஊருக்கு பதவியுயர்வுடன் வந்திருக்கின்றேன். அதுதனைத் தவிர, எல்லோரும் எனக்கு அறிமுகம் இல்லாத புது முகங்கள். நான் ஓய்வாக இருக்கும்போதெல்லாம் அருகில் வந்து ஒவ்வொருவரைப் பற்றியும் சில அறிமுக குறிப்புகளை சொல்லிவிட்டு சென்றுவிடுவான். "அவள் அப்படித்தான் சார். வருகிற முகாமையாளர்களை கைக்குள் போட்டுக்கொள்வாள். ஜாக்கிரதையாக இருகவேண்டும் சார்."

"ஓ..அப்படியா" இவன் இன்னும் மாறவேயில்லை என எனக்குள்ளேயே நினைத்துக்கொள்கின்றேன். அவன் சொன்ன அவளும் அவன்களும் ஏதோ அவனது பார்வையில் பிழையாகவும் குற்றமுள்ளவர்களாகவுமே இருந்தார்கள்.

"இது உங்கள் வங்கி. எல்லோரும் ஒற்றுமையாகவும் மனவிருப்பத்துடனும் வேலைசெய்தால்தான் முன்னேற்றமடைய முடியும். எனக்கு உங்களை பற்றி பெரிதாக தெரியவிட்டாலும் எல்லோரைப் பற்றியும் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் என்னோடு ஒன்றாக வேலைசெய்த அருதயன் அறிமுகப்படுத்திமிருந்தார். அவர் அன்று எப்படி இருந்தாரோ இன்றும் அப்படியே இருக்கின்றார். மாறவே இல்லை. அதனால்தானோ என்னவோ இன்னும் அவரது பதவியில் கூட மாறமலே இருக்கின்றார்."

நான் சிலேடையாக கூறியது அவனுக்கும் புரிந்திருக்க வேண்டும். அவனது முகம் மாறியதை என்னால் உணர்க்கூடியதாக இருந்தது. சக ஊழியர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டே..அவளையும் அவதானித்தார்கள்.

அடுத்தநாள் அவள் சொன்ன அவள் என் முன்னால் அமர்ந்து, அவளை உடனடியாக இடமாற்றும்படியான எனது வேண்டுகோள் கடிதத்தின் விவரங்களை மாவட்ட முகாமையாருக்கு அனுப்புவதற்காக சிறு குறிப்பெடுத்துக்கொண்டிருந்தார்.

(கற்பனை)

(1 - 8)

(கோப்பி தோட்டத்தில்)

விளைந்த அந்த
கோப்பிச்செடி
தலைநிமிர்ந்து நிற்கிறது
கனிந்து விட்ட சிவப்பு
காய்கள் மிளகாயின்
நிறம்போல அழகாக
கருக்கின்றன....

கோப்பி சேகரிக்கும்
சாக்குப் பை புறமிருக்க..
முன்னாடி முற்றானை
தலைப்பிலொரு
தொட்டிலொன்னு
செய்து வைத்து வேலைய
தொடங்குகிறா மூக்காயி.....

தொட்டிலுல தொங்குகிறா
சின்னப் பொண்ணு..

நல்லா வருடெடுத்து
எண்ண
வச்சி சீவகவிட்ட
கருத்த தலைமுடி...

சிவப்பு கல்லுவச்ச மூக்குத்தி
மதுரைக்கி போன நேரம்
முனியாண்டி ஆசயா
வாங்கி தந்த அழகான
சொத்து அது...

மொகத்துல கன்னமும்
மின்னுறது...

தங்கமா கும்பானு
சேட்டுக்கட போனாத்தா
தெரியுங்கிற மாதிரிக்கி
பூட்டுமாதி பெரிய தோடு....

"காது ஓட்ட கையளவு"

ஒத்தப்புள்ள பெத்துவிட்ட
தேகம் தானா
என்று சொல்லி பிரிக்க
வைத்துவிடும் அவளழகு....

உள்ளுக்குள்ள
சோகங்கள
மூட்டக்கட்டி
வச்சிருந்தாலும்...
வெளியில வரவான
வண்ணமுகம்...

கன்னும் கொஞ்சம்
பொம்பளைங்க
சேத்து அங்க மலையினில
வேலை செய்யும்
நேரத்துல

நாட்டுப்புற பாட்டுகளும்
சேர்ந்து வருகிறது....

கோண கோண மலையேறி
கோப்பி பழம் பொருக்கயில
ஒரு பழம் தப்பிச்சின்னு
ஒதச்சானய்யா சின்ன
தொர....

பாதையில வீரருக்க
பழனி சம்பா சோறிருக்க
எனுமே தமிரிருக்க ஏண்டி
வந்தோம் கண்டிச்சீம....

கோப்பி மரமானோம்
நாலுபக்க வாதுமானோம்
கங்குலீசு காரனுக்கு
ஏறிப்போக காருமானோம்...

ஊரான ஊரிழந்தேன்
ஒத்த பண தோப்பிழந்தேன்
ஊரான கண்டியிலே
பெத்த தாய நா
மறந்தேன்.....

நெத்தியில நீர் வடிய...
உச்சி வெயில் எரிக்க...
வல செய்யி என்கிறானே
வலையத்த கங்காணி....

கப்படி பாட்டுக்கள் கோப்பி
மலையை அழகு செய்ய..
குதிரையில் வந்த
சீமைதுரையின்
பார்வை படுது..
மூக்காயின் மேல்....

வளைஞ்ச முதுகை
கன்னும்
வளைச்சு வரவேற்கும்
கங்காணியை தாண்டி...
மூக்காயின் முன்
நெருங்குகிறான்
கங்காணி....

அவள்
நொருங்கிடுவாளோ.....

(சொல்ல மறந்த கதை
கன்னும் சொல்லப்படும்)

தொடரும்...
எம். ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் தொடர்கதை

முகநூல் காதல்

அத்தியாயம் 04

அதுக்கென்ன சந்திச்சிட்டா போச்சு..... எனக்கும் கூட அப்படிதான் உன்னை பார்க்கணும்னு ரொம்ப....! ரொம்ப.... ஆசையாதான் இருக்குதுடா செல்லம்.

நேருல பார்த்து உன்னுடைய ஒவ்வொரு அங்கமா ரசிச்சு கவிதை எழுதணும். கோவைப் பழம்போல் சிவந்திருக்கும் உன் உதடு, குஞ்சு மீனாய் சுற்றித் திரியும் விழிகள், பஞ்சு மிட்டாய் தொட்டுப்பார்த்ததாய் விரல்கள், புகைப்படத்திலும் கானொளியிலும் பார்த்த அழகு தேவதையை நேரில் பார்த்து தரிசிக்கணும். அழகை ருசிக்கணும் என்று எனக்கு விருப்பம் இருக்காதா செல்லமே.

அதனாலே என்ன இதுக்கு ஒரு வழி இருக்குது. அதாவது நீ இந்தியாவுக்கு வந்திடு. சிலநாள் தங்கிவிட்டு சந்தோஷமாக சுத்தித் திரிந்து விட்டு திரும்பிப் போகலாம்" என்றான் பிரகாஷ்.

அதற்கு அவள்,

"என்ன பிரகாஷ் நீ.....! நான் எப்படி தனியாய் அங்கு வரமுடியும்? நான் ஒரு பெண்ணாச்சே பிரகாஷ். அதனாலேதான் நான் சொல்கிறேன். நீ.... இங்கு வாவேன்..... பிரகாஷ்?" என்று அவள் கெஞ்சிக் கேட்க,

"நான் அங்கு வாறதுல எனக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால், என்னுடைய வேலையைப் பொறுத்தவரைக்கும் அப்படி விடுமுறை எடுக்க முடியாது. அதற்கான வாய்ப்புகள் எனக்கில்லை.

என்ன செய்வது தினமும் வேலைதான். செய்ய வேண்டியிருக்கிறது. இந்த வேலையிலே நான் இணைந்துக் கொண்டும் இப்போதைக்கு எட்டு மாதம் மட்டில்தான் ஆகுது. அதுதான் உனக்கு நன்றாவே தெரியும்தானே செல்லம்.

இங்கு வேலை ஒன்று தேடுவதென்பது மிகவுமே கடினமான விடயம். அதனால் எப்படி இந்த வேலையை விட முடியும்? அதற்குள் எப்படி விடுமுறையெல்லாம் கேட்க முடியும்? இன்னும் கொஞ்ச காலம் போகவேண்டும். அதுவரைக்கும் அப்படியெல்லாம் கேட்க முடியாது. அப்படி கேட்டால் அது எனக்கு பெரும் சிக்கலாகிவிடும்.

நமது திருமணத்திற்கு பின்னாடி நாம் வாழவேண்டுமே.... இப்போதைக்கு நாம் இருவரும் அவசரமாய் சந்திக்க வேண்டும் என்றால் வேறு வழியில்லை. அதற்காக உள்ள ஒரே வழி நீதான் இங்கே வரவேண்டும்.

இங்கு உன்னை கவனிக்கும் விதத்தில் நன்கு கவனித்துவிட்டு உன்னை உன்னுடைய நாட்டுக்கு பத்திரமாக அனுப்பி வைத்துவிடுவேன். அதனைப்பற்றி நீ ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை.

நீ... இங்கு வந்தால் நான் தங்கியிருக்கின்ற அறையில் தங்கியிருக்கலாம். அப்படி தங்கியிருந்துவிட்டு உனக்கு எப்போதைக்கு நாட்டுக்கு போக வேணும்னு தோணுதோ அப்போதைக்கு போகலாம். அதில் எந்தப் பிரச்சினையுமில்லை.

நீ.... தங்கப் போறது வேறு யாருடனும் இல்லையே..... நீ வாழப் போகிற உன்னுடைய எதிர்கால புருஷனுடன்தானே தங்கப்போறே... அதனால் உனக்கென்ன பயம் என்மேல் உனக்கு நம்பிக்கையிருந்தால் போதும்.

தாராளமாக நீ இங்கே வா.... வந்து என்னுடன் உன்னுடைய ஆசை தீரும் வரை இருந்து தங்கிவிட்டுப் போ....! அதுல எனக்கு எந்த விதமான சிக்கல்களுமில்லை.

அப்படி இல்லேனா, என்னுடன் தங்குவதிலே உனக்கு சம்மதம் இல்லேனா சொல்லி விடு. வேறு ஓர் இடத்தில் உனக்கு தனியான அறை ஒன்னு எடுத்து தருகிறேன். அங்கே உனக்கு தாராளமாய் திரும்பிப் போகும் வரைக்கும் தங்கிவிட்டுப் போகலாம். அதுலயும் எனக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. கஷ்டங்களுமில்லை" - என்றான் பிரகாஷ்.

அதைக் கேட்டவள்,

"அது ஒன்னும் பிரச்சினையில்லை பிரகாஷ்" என்று வார்த்தைகளில் உறுதியின்றி பேச, அதனைக் கேட்ட பிரகாஷ்

அது என்றால் சரிதான். எப்படியிருந்தாலும் முன் பின் தெரியாதவனோட தனியாக தங்குறது என்பது நல்லதில்லைதான். காலம் வேறு கெட்டுக் கிடக்குது. நீ சொல்வதைபோல் அது நம்பிக்கையில்லைதான்" என்றான் பிரகாஷ்.

அவ்வாறு பிரகாஷ் சொன்னதைக் கேட்டவள்,

"என்ன பிரகாஷ் நீ கதைக்கிறே.... நானென்ன உன்னை நம்பாமலா சொல்றேன். உன்னை நான் நம்பாதது என்னை நான் நம்பாததற்கு சமன் பிரகாஷ்" என்றாள்.

அதனை கேட்ட பிரகாஷுக்கு தூக்கிவாரிப் போட்டதைப்போலிருந்தது. அதனை தனக்கு சாதகமாக்கிக் கொண்டவன்,

"அப்படி நம்பிக்கையிருந்தால் என்னுடன் தாராளமாக வந்து தங்கலாம்தானே. அது உனக்கு நூறு வீத பாதுகாப்பு. அதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன்" என்று அவளுக்கு உறுதிமொழி வழங்கினான் பிரகாஷ்.

அதனைக் கேட்டவள்,

புத்தளம் ஸாலிஹ் அலீம்

ஒரு நாளைக்கு எத்தனை பாதாம் சாப்பிடலாம்?

ஒரு நாளைக்கு எத்தனை பாதாம் பருப்பை சாப்பிட வேண்டும் என்பது பலருக்கும் தெரியாத ஒன்றாக இருக்கிறது. பல ஊட்டச்சத்து நிபுணர்கள் ஒரு நாளைக்கு 22இலிருந்து 23 பாதாம் சாப்பிட வேண்டும் என சொல்கிறார்கள். எதற்காக 23 பாதாமை தினமும் சாப்பிட வேண்டும். இப்படி சாப்பிடுவதால் நம்முடைய உடலுக்கு என்ன ஆரோக்கிய நன்மைகள் கிடைக்கின்றன என்பதைப் பற்றி பார்ப்போம்.

பாதாமில் புரதங்கள், நார்ச்சத்து, கொழுப்பு, விற்றமின் ஈ, மெக்னீசியம், மாங்கனீஸ், தாமிரம் மற்றும் பொஸ்பரஸ் போன்ற ஊட்டச்சத்துகள் அதிகம் காணப்படுகின்றன. தொடர்ந்து பாதாம் சாப்பிட்டு வருவது உடல் எடை குறைப்பிற்கு உதவுகிறது. இதய ஆரோக்கியத்திற்கு சிறந்தது. பாதாம் உடலில் இருக்கக்கூடிய கெட்ட கொழுப்பை குறைக்க உதவுகிறது. உடலுக்கு பல ஆரோக்கிய நன்மைகளை தரக்கூடிய இந்த பாதாமை நீங்கள் பச்சையாகவோ அல்லது ஊறவைத்தோ சாப்பிடலாம்.

அதிகளவிலான ஊட்டச்சத்துகளும் நன்மைகளும் நம்முடைய உடலுக்குக் கிடைக்க ஒருவர் தினமும் ஒரு அவுன்ஸ் பாதாம் பருப்பை சாப்பிட வேண்டும். அதாவது 28இலிருந்து 30 கிராம் பாதாம்பருப்பு. இதில் 22இலிருந்து 23 பாதாம் பருப்புகள் வரும்.

இந்த அளவில் தவறாமல் தினமும் இந்த பாதாம் பருப்பை சிறுறுண்டியாக நீங்கள் சாப்பிட்டு வரும்போது உங்களுடைய தொப்பையில் இருக்கும் அதிகப்படியான கொழுப்பை கரைக்க உதவுகிறது.

இடுப்பில் இருக்கக்கூடிய அதிகப்படியான கொழுப்பை கரைக்க உதவுகிறது. உங்களுடைய உடல் எடையை மிக வேகமாக குறைக்க ஆரம்பிக்கிறது. ஒருசிலர் பாதாமில் கொலஸ்ட்ரோல் அதிகளவில் உள்ளதென சொல்கிறார்கள். ஆனால், இது உண்மையல்ல.

தாவர பொருட்கள் எதிலும் கொலஸ்ட்ரோல் இல்லை. ஒருசிலர் நீரிழிவு நோய் இருப்பவர்கள் மற்றும் இதய நோயாளிகள் பாதாம் பருப்பை சாப்பிடக்கூடாது என சொல்கிறார்கள். ஆனால், இது உண்மையல்ல.

பாதாமில் பூஜ்ஜிய கொலஸ்ட்ரோல் இருப்பதால் இது கெட்ட கொழுப்பைக் குறைக்க உதவுகிறது. இதனால் இதய நோயாளிகளுக்கு நன்மை பயக்கும். பொதுவாக பலரும் பாதாம் பருப்பை சாப்பிடுவதற்கு முன்னால் ஊறவைத்து தோலை அகற்றி சாப்பிடுவார்கள். பாதாம் பருப்பை சாப்பிடுவதற்கு முன்னால் ஊறவைத்து சாப்பிடுவதில் தவறு இல்லை.

ஏனென்றால், இது நுண்ணூட்டச் சத்துகளை உறிஞ்சுவதற்கு உதவுகிறது. ஆனால், அதனுடைய தோலை உரித்து எடுக்காமல் அப்படியே சாப்பிட வேண்டும். காரணம், பாதாம் பருப்பில் நார்ச்சத்து அதிகம் இருப்பது இந்தத் தோல் பகுதியில்தான். தோல் பகுதியை நீங்கள் உரித்துச் சாப்பிடும்போது நார்ச்சத்து உங்களுக்கு கிடைக்காமல் போகிறது. அதனால் பாதாமை சாப்பிடும்போது ஊறவைத்து தோலை உரிக்காமல் சாப்பிட வேண்டும்

உடல் எடையைக் குறைப்பது எப்படி?

உடலில் சேரும் தேவையற்ற கொழுப்புகளால் ஏற்படும் பாதிப்பென்பது எடையின் அளவை அதிகரிப்பதில் ஆரம்பித்து உடலில் உருவாகும் பல நோய்களுக்கும் காரணமாக அமைந்துவிடுகிறது. நாம் சாப்பிடும் உணவில் ஆரம்பித்து, வாழ்க்கை முறை மாற்றங்கள்வரை உடலில் கொழுப்பு சேர்வதற்கு பல காரணிகள் உள்ளன.

பலரும் உடலிலுள்ள கொழுப்பைக் குறைக்க ஒடிக்கொண்டிருக்கும் நேரத்தில், என்ன செய்தாலும் வெயிட் குறைய வே மாட்டேங்குது என்று சிலர் வெயிங் ஸ்கேலை வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். தேவையற்ற கொழுப்பைக் குறைத்து உடல் எடையைக் குறைக்கப் பின்பற்றவேண்டிய சில எளிமையான வாழ்க்கைமுறை ஆலோசனைகள் இங்கே...

தூக்கம்

உடல் எடை குறையவேண்டும் என்றால், முதலில் தூக்க நேரத்தை சரியான முறையில் கையாள வேண்டும். தினமும் 6 முதல் 8 மணிநேர தூக்கம் மிக அவசியம். அமெரிக்காவில் நடந்த ஓர் ஆய்வு, 7 மணிநேரம் தூங்குபவர்களைவிட மிகச் சுலபமாகக் கொழுப்பை குறைக்கின்றனர் என்று தெரிவித்துள்ளது.

உணவு

★ உணவைப் பொறுத்தவரை நார்ச்சத்துள்ள பொருட்களை மிக அதிகளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, கரையக்கூடிய நார்ச்சத்துகள் (soluble fiber). இவை வயிறு நிறையும் உணர்வைக் கொடுப்பதால், அதிகமாகச் சாப்பிடும் ஆசை கட்டுப்படுத்தப்படும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. எனவே, ஆளி விதைகள், முளைகட்டிய பயறு வகைகள், அவகோடா போன்ற நார்ச்சத்து உணவுகளைத் தினமும் உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

புரத உணவு, எடையை சீராக வைத்துக்கொள்வதற்கான முக்கியமான உணவு. பசியைக் கட்டுப்படுத்தும். புரதம் வளர்சிதை மாற்ற விகிதத்தை அதிகரித்து, எடைக் குறைவின்போது தசையை தக்கவைக்க உதவும். புரதம் அதிகளவில் உள்ள முட்டை, இறைச்சி, மீன்ஸ், மீன், பனீர் போன்றவற்றைத் தினசரி உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

★ ஒமேகா 3 சத்துள்ள மீன்களை எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றில் உயர்தர புரதம் மற்றும் கொழுப்பு இருப்பதால் உடலுக்கு மிக நன்மையைக் கொடுக்கக்கூடியது. உடல் எடை அதிகரிக்காமல் சீராக வைக்கும். சாலமன், மத்தி, நெத்திலி என்று நமக்கு அருகிலேயே கிடைக்கும் மீன் வகைகளில் இந்த ஒமேகா 3 சத்து இருக்கிறது.

★ கிரீன் டீ, லெமன் டீ போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம். இவை கலோரி குறைந்த திரவம். உடல் எடையைக் குறைக்க உதவும்.

தவிர்க்கவேண்டிய உணவுகள்

★ மாச்சத்துள்ள பொருட்களைக் குறைந்தளவில் சேர்த்துக்கொள்ளவும். அரிசி உணவுகளைத் தவிர்த்து காய்கறிகள், பழங்களை அதிகளவில் எடுத்துக்கொள்ளவும்.

★ ட்ரான்ஸ் கொழுப்புகள் (Trans fat) உள்ள உணவுப் பொருட்களை முற்றிலுமாகத் தவிர்த்துவிடவும். நாம் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தும் எண்ணெயில் ஆரம்பித்து, பேக்கரி உணவுகள், ஜங்க் உணவுகள் என இவற்றில் எல்லாம் ட்ரான்ஸ் கொழுப்புகள் நிறைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

★ பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்க்கவும். இவற்றில் வெகு நாட்களுக்குக் கெட்டுப் போகாமல் இருப்பதற்காகச் சேர்க்கப்படும் பொருட்கள் உடலுக்குத் தீங்கு விளைவிப்பதுடன், கொழுப்பையும் அதிகரித்துவிடும்.

★ மைதா, கார்ன் ஃப்ளார், எண்ணெயில் பொரித்த உணவுகளைத் தவிர்க்கவும்.

★ முக்கியமாக தவிர்க்கவேண்டியது சர்க்கரை. எனவே, இளிப்புகளுக்கு ஸ்ட்ரிக்ட் நோ. நீரிழிவு நோயாளிகள் மட்டுமல்ல, எடைக் குறைப்பில் ஈடுபடுபவர்களும் தவிர்க்க வேண்டிய மிக முக்கியமான உணவு சர்க்கரை. அதேபோல, சர்க்கரை சேர்த்து அருந்தும் பழச்சாற்றைத் தவிர்த்து பழங்களை கட் செய்து சாப்பிடவும்.

★ மிக மிக முக்கியமாக தவிர்க்க வேண்டியது, மது. அதை அதிகமாக உட்கொள்ளும்போது, இடுப்புப் பகுதியில் கொழுப்பு சேர அதிக வாய்ப்புள்ளது. எடை குறைப்புக்காக மட்டுமல்ல, எப்போதுமே மதுவைத் தவிர்க்கவும்.

வாழ்க்கைமுறை மாற்றம்

★ உற்பயிற்சிகளை மேற்கொள்ளவும். நடைப்பயிற்சி, ஓட்டப்பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி என வயதுக்கு ஏற்ற ஒரு பயிற்சியைத் தினமும் குறைந்தது 30 நிமிடங்களாவது மேற்கொள்ள வேண்டும்

★ மருத்துவர், டயட்டீஷியன் ஆலோசனையுடன் உங்களுக்கு ஏற்ற டயட்டைத் தேர்ந்தெடுத்து பின்பற்றலாம். இது, அதிகமான எடையில் இருப்பவர்களுக்கு விரைவில் கொழுப்புக் குறைய கைக்கொடுப்பதுடன், இந்த சமச்சீர் உணவு முறையால் ஆரோக்கியமும் மேம்படும்.

★ மனதில் தேவையற்ற குழப்பங்களை நீக்கி, அமைதியாக வைத்துக்கொள்ளவும். மனதை ஒருநிலைப்படுத்தி, மனஅழுத்தம் இல்லாமல் இருக்கவும்.

நோன்புக் கஞ்சி

தேவையான பொருட்கள் :

பச்சரிசி - 100 கிராம்
பயத்தம் பருப்பு - 25 கிராம்
சின்ன வெங்காயம் - 100 கிராம்
கேரட் - 1
தக்காளி - 1
வெந்தயம் - 1/2 டீஸ்பூன்
சீரகம் - 1/2 டீஸ்பூன்
இஞ்சி பூண்டு பேஸ்ட் - 1 டீஸ்பூன்
பச்சை மிளகாய் - 2
பிரியாணி இலை - 1
கொத்தமல்லி - சிறிது
புதினா - சிறிது
தேங்காய் பால் - அரை கப்
எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்
நெய் - 1 டேபிள் ஸ்பூன்
உப்பு - தேவையான அளவு

செய்முறை:

கேரட், சின்ன வெங்காயம், தக்காளியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாயை நீளவாக்கில் வெட்டிக்கொள்ளவும்.

அரிசியை நன்கு நீரில் ஊற வைத்து, கழுவிக்கொள்ள வேண்டும். மிக்சியில் சீரகம், வெந்தயத்தை போட்டு பொடி செய்துகொள்ள வேண்டும்.

குக்கரை அடுப்பில் வைத்து, அதில் 650 மிலலி லிற்றர் தண்ணீர் ஊற்றி, அதில் பயத்தம் பருப்பு, அரிசியைப் போட்டு நன்கு 10 நிமிடம் கொதிக்க விட வேண்டும்.

தண்ணீரானது நன்கு கொதித்ததும், நறுக்கிய வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், கொத்தமல்லி, கேரட், புதினா, பிரியாணி இலை, அரைத்து வைத்துள்ள பொடி மற்றும் தேவையான அளவு உப்பு ஆகியவற்றை சேர்த்து கொதிக்க விட்டு, தீயை குறைவில் வைத்து, குக்கரை மூடி 15 நிமிடம் அடுப்பில் வைத்து இறக்க வேண்டும்.

கலவையானது நன்கு வெந்ததும், அதனை பருப்பு மத்து கொண்டு நன்கு மசித்து, தனியாக வைத்துக்கொள்ளவும்.

ஒரு வாணலியை அடுப்பில் வைத்து காய்ந்ததும், எண்ணெய் மற்றும் நெய் ஊற்றி சூடானதும் அதில் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து வதக்கி, தேங்காய்ப்பாலை ஊற்றி நன்கு நுரை வரும்வரை கொதிக்கவிட்டு, அதில் மசித்து வைத்துள்ள கலவையை ஊற்றி, ஒரு கொதி விட்டு இறக்கவும்.

இப்போது சுவையான நோன்புக் கஞ்சி ரெடி.

காரிகைகளம்

முகப்பருவிற்கு நிரந்தர தீர்வு தரும் பேஸ் பேக்

பெண்களுக்கு மிகவும் எரிச்சலூட்டும் ஒரு விடயம் முகப்பருக்கள். இந்த முகப்பருக்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு தரும் இயற்கை வழிமுறைகளை அறிந்துகொள்ளலாம்.

மஞ்சள் மற்றும் தயிர்

மஞ்சள், தயிர் இரண்டுமே மருத்துவ மற்றும் காயங்களை குணமாக்கும் தன்மைகள் உடையவை. அவை பருக்களை விரட்டி தூய்மையான சருமத்தை அளிக்கும். இதை உபயோகிக்கும் முறை : இரண்டையும் குழைத்து பேஸ்ட் ஆக்கவும். முகத்தில் சமமாக பூசவும். 15-20 நிமிடங்கள் கழித்து, கழுவவும்.

சந்தனம் மற்றும் ரோஸ் வாட்டர் பேஸ்ட்

சந்தனத்திற்கு வலியை குறைக்கும் தன்மையும் பரு மற்றும் மாசுவை நீக்கும் சக்தியும் உண்டு. அதை பின்வருமாறு உபயோகிக்கவும்: சந்தனப்பொடியை ரோஸ் வாட்டருடன் கலந்து குழைக்கவும். உங்கள் நெற்றி மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடவவும். ஒரு மணிநேரம் கழித்து கழுவவும்.

வேப்பிலை

வேப்பிலை உங்களுக்கு தூய்மையான, அப்பழுக்கற்ற சருமத்தை அளிக்கக்கூடிய ஒரு மிகச் சிறந்த கிருமிநாசினி. அதை உபயோகிக்கும் முறை:

சில வேப்பிலைகளை எடுத்து நன்கு கழுவவும். ஒரு பாத்திரத்தில் தண்ணீருடன் அந்த இலைகளைப் போட்டு, அடுப்பை இலேசாக எரியவிட்டு சில நிமிடங்கள் கொதிக்கவிடவும். அந்த நீரின் நிறம் மாறத் தொடங்கும்போது அடுப்பை அணைத்துவிடவும். அந்த நீரை ஆற விடவும் பின் வடிகட்டி அந்த நீரில் தினமும் முகத்தை கழுவவும்

இவை அனைத்தையும் பின்பற்றுவதுடன், கூடவே அதிகளவில் தண்ணீர் எடுத்துக் கொள்ளவும். உடலிலுள்ள கழிவுகளை வெளியேற்றும் ஒரு நல்ல வழிமுறை இது. இவற்றை எல்லாம் சரியாகப் பின்பற்றும் பட்சத்தில் belly fat உட்பட உடலிலுள்ள தேவையற்ற கொழுப்புகள் குறைய ஆரம்பிக்கும்.

சன்னி லியோன் நடிக்கும் 'ஓ மை கோஸ்ட்'

சுவாரசி நடிகை சன்னி லியோன் நடிக்கும் தமிழ்ப் படமான 'ஓ மை கோஸ்ட்' படத்தின் பொஸ்ட் லுக் தற்போது வெளியாகியுள்ளது. விஜய்சேதுபதி மற்றும் இயக்குநர் வெங்கட் பிரபு தங்கள் ட்விட்டர் பக்கத்தில் சன்னி லியோனின் அட்டகாசமான பொஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளனர்.

யோகி பாபு, தர்ஷா குப்தா, சதீஷ், ஜிபி முத்து உள்ளிட்ட ஏகப்பட்ட நடிகர்கள் இந்தப் படத்தில் நடித்துள்ளனர்.

ஆபாச பட நடிகையாக இருந்த சன்னி லியோன், அந்த தொழிலை விட்டுவிட்டு பொலிவூட்டில் கவர்ச்சி நடிகையாக பல ஆண்டுகளாக நடித்துவருகிறார். நடிகர் ஜெய்யின் 'வடகறி' படத்தில் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட்டு அறிமுகமான சன்னி லியோன், தற்போது ஹீரோயினாக தமிழ்ப் படங்களில் நடித்துவருகிறார்.

இயக்குநர் ஆர். யுவன் இயக்கத்தில் சன்னி லியோன், சதீஷ், யோகி பாபு, தர்ஷா குப்தா, ஜிபி முத்து உள்ளிட்ட பலர் நடிப்பில் 'ஓ மை கோஸ்ட்' எனும் பேய் படம் உருவாகிவருகிறது. நடிகை தர்ஷா குப்தா மற்றும் சதீஷ் உள்ளிட்டவர்கள் சன்னி லியோனுடன் எடுத்துக்கொண்ட போட்டோக்களை ஏற்கனவே ஷேர் செய்து அந்தப் படத்தில் நடித்துவரும் அப்டேட்டை வெளியிட்டனர்.

தர்ஷா குப்தா தான் சன்னி லியோன் என மொட்டை ராஜேந்திரனை ஏமாற்றும் விதமாக பழைய ஜோக் தங்கதுரை பண்ண பிராங் வீடியோவை சில மாதங்களுக்கு முன்னதாக நடிகை தர்ஷா குப்தா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஷேர் செய்து வைரலாக்கினார்.

பிரெண்டன் ஃபேசர் நடிப்பில் வெளியான 'மம்மி' படத்தில் வரும் வில்லனின் காதலி பேய் போல நடிகை சன்னி லியோன் செம கவர்ச்சியாக இருக்கும் அசத்தலான பொஸ்ட் லுக் போஸ்டர் தற்போது வெளியாகி டிரெண்டாகி வருகிறது. அவருக்கு பேக் ரவுண்டில் அருந்ததி கோட்டை போன்ற ஓர் அரண்மனையும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சன்னி லியோனின் இந்த செம ஹாட்டான 'ஓ மை கோஸ்ட்' படத்தின் பொஸ்ட் லுக்கை இயக்குநர் வெங்கட் பிரபு மற்றும் நடிகர் விஜய் சேதுபதி உள்ளிட்ட கொலிவூட் பிரபலங்கள் தற்போது தங்களது ட்விட்டர் பக்கங்களில் ஷேர் செய்து படக்குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

'விஜய் 66'

விஜய் 66 படத்தின் பூஜை.

சென்னையில் கோகுலம் ஸ்டுடியோவில் கடந்த புதன்கிழமை கோலாகலமாகத் தொடங்கியது. விஜய்யின் பீஸ்ட் ரிலீஸை நோக்கி காத்திருக்கும் வேளையில் விஜய் சத்தமே இல்லாமல் 'விஜய்66'க்கான படப்பிடிப்புக்கும் கிளம்பிவிட்டார் விஜய்.

'தோழா' படத்தின் இயக்குநர் வம்சியுடன் கைகோர்த்திருக்கிறார் விஜய். தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் தயாராக உள்ள இந்தப் படத்தை தில் ராஜூ தயாரிக்கிறார். குடும்ப சென்டிமென்ட் உடன் காமெடி கலந்த படமாக தயாராகிறது. இப்படத்தின் பூஜையில் விஜய், தயாரிப்பாளர் தில் ராஜூ, இயக்குநர் வம்சி, நடிகர் சரத்குமார், ஹீரோயின் ராஷ்மிகா மந்தனா, இசையமைப்பாளர் தமன் ஆகியோர் பங்கேற்றனர். தயாரிப்பாளர் தில் ராஜூ கிளாப் போர்டு அடித்து, படப்பிடிப்பைத் தொடங்கிவைத்தார். கோகுலம் ஸ்டுடியோவில் பிரம்மாண்டமான செட் ஒன்று அமைத்துள்ளனர். அதில் தான் முதல்கட்ட படப்பிடிப்பு நடக்கிறது.

விஜய் ஜோடியாகும் ராஷ்மிகா

விஜய்யின் தீவிர ரசிகை ராஷ்மிகா. இதற்கு முன்பு தெலுங்கில் எடுக்கப்பட்ட பேட்டியொன்றில் சிறிய வயது முதலே தான் விஜய்யின் ரசிகை என்பதை சொல்லியிருந்தார். விஜய்யின் 66ஆவது படம் பற்றிய அறிவிப்பு வந்ததிலிருந்தே அப்படத்தில் ராஷ்மிகாதான் கதாநாயகி என்று சொல்லி வந்தார்கள். கடந்த வியாழக்கிழமை ராஷ்மிகாவின் பிறந்தநாளன்று விஜய் 66 படத்தின் நாயகியாக ராஷ்மிகா நடிப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் முதன்முறையாக விஜய்யுடன் ஜோடி சேர்கிறார் ராஷ்மிகா. தென்னிந்திய சினிமா மட்டுமன்றி ஹிந்தியிலும் பிஸியாக நடித்து வருகிறார் ராஷ்மிகா. தமிழில் சுல்தான் படத்தில் நடித்தார். இந்த படத்திற்கு பின் வேறு படங்களில் நடிக்காத அவர் இப்போது விஜய்யின் படத்தை கைப்பற்றியுள்ளார்

சினிமா

விஷால் நடிக்கும் லத்தி

'வீரமே வாகை சூடும்' படத்திற்கு பின் விஷால் நடித்துவரும் படம் 'லத்தி'. 'சமி' படத்திற்கு பின் மீண்டும் விஷாலுக்கு ஜோடியாக சுனைனா நடித்துள்ளார். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்க, வினோத் குமார் இயக்குகிறார். இந்தப் படத்தில் விஷால் பொலிஸ் வேடத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் வெளியாகியுள்ளது. அதில் பொலிஸ் உடையில் பின்னால் திரும்பியபடி உடலில் காயங்கள், கையில் லத்தி உடன் விஷால் போஸ் கொடுத்துள்ளார்.

'லத்தி' பற்றி விஷால் கூறுகையில், ''நான் பல படங்களில் எக்ஷன் காட்சிக்காக பல எக்ஷன் இயக்குநர்களுடன் பணியாற்றி உள்ளேன். பீட்டர் ஹெய்ன் உடன் இந்த படத்தில் பணியாற்றியது என் வாழ்நாள் ஸ்பெஷல்'' என்கிறார்.

சோலோ ஹீரோயின் ஆனார் சுனைனா

ஐந்து மொழியில் தயாராகும் படத்தில் சோலோ ஹீரோயினானார் சுனைனா. டொப் ஹீரோயின்கள் சோலோ ஹீரோயின்களாக நடிப்பது அதிகரித்துள்ளது. நயன்தாரா, சமந்தா, த்ரிஷா, ஹன்சிகா, அமலாபால், ஆண்ட்ரியா உள்ளிட்ட பலர் சோலோ ஹீரோயினாக நடித்து வருகிறார்கள். அந்த வரிசையில் இப்போது சுனைனாவும் சேர்ந்திருக்கிறார்.

படத்தின் பெயர் ரெஜினா. கணவனை கொன்றவர்களை தேடி புறப்படும் ஒரு பெண்ணின் கதை. இதில் வில்லனாக நிவாஸ் ஆதித்யனும், ரெஜினாவின் கணவராக அனந்த் நாக்கும் நடித்துள்ளனர். சதீஷ் நாயர் தயாரித்து, இசை அமைத்திருக்கிறார். டோமின் டி சில்வா இயக்குகிறார்.



விஜய் ஆண்டனி தற்போது கிரைம் திரில்லர் வகை படமொன்றில் நடித்துள்ளார். இந்தப் படத்திற்கு 'கொலை' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தை 'விடியும் முன் புகழ்' இயக்குநர் பாலாஜி குமார் இயக்கியுள்ளார். 'கொலை' படத்தை இன்பினிட்டி & லோட்டஸ் புரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ளது. இந்தப் படத்திற்கு சிவகுமார் விஜயன் ஒளிப்பதிவு செய்துள்ளார். கிரீஷ் கோபாலகிருஷ்ணன் இசையமைத்துள்ளார். விஜய் ஆண்டனிக்கு ஜோடியாக நடிகை ரித்திகா சிங் நடித்துள்ளார். மீனாட்சி கௌதரி, ராதிகா சரத்குமார், முரளி சர்மா, அர்ஜுன் சிதம்பரம் உள்ளிட்ட பலர் இந்த படத்தில் நடித்துள்ளனர்.

குடும்ப வாழ்க்கை குறித்து டொப்சி

தெலுங்கில் சமீபத்தில் டொப்சி நடித்த மிஷன் இம்பாசிபிள் படம் பொக்ஸ் ஆபீலில் அமோக வெற்றிபெற்றது. டொப்சியின் அடுத்த பெரிய வெளியீடு ஹிந்தியில் உருவாகிவரும் சபாஷ் மிது. இந்தப் படம் இந்திய மகளிர் தேசிய கிரிக்கெட் அணி வீராங்கனை மிதாலி ராஜ் வாழ்க்கை வரலாறை மையமாகக்கொண்ட கதையில் உருவாகி வருகிறது.

எந்த மாதிரியான திருமண வாழ்க்கை வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, நாடகம் இல்லாத திருமணத்தை விரும்புவதாக அவர் கூறியிருக்கிறார். என்னுடைய தொழில் நடிப்பு மற்றும் நாடகமாக இருக்கிறது. எனவே, எனது திருமணம் எளிமையாகவும், சுமுகமாகவும், குழப்பம் அற்றதாகவும், எந்த நாடகத்துக்கும் இடமில்லாமல் இருக்க வேண்டும் என்று தான் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார் டொப்சி.

மகிழ்ச்சியில் தமன்

தமிழில் ஷங்கர் இயக்கத்தில் போய்ஸ் படத்தில் நடிகராக அறிமுகமானாலும் அதற்குப் பிறகு நடிக்காமல் இசையில் மட்டும் கவனம் செலுத்தி இன்று தெலுங்குத் திரையுலகில் முன்னணி இசையமைப்பாளர்களில் ஒருவர் என பெயர் எடுத்துள்ளார் தமன். தமிழில் நிறையவே படங்கள் பண்ணியிருந்தாலும் தெலுங்கில் புகழ்பெற்ற அளவிற்கு தமிழில் புகழ் பெறாமல் இருந்தார் தமன். விக்ரம், சிம்பு, விஷால், ஆர்யா, கார்த்தி ஆகியோர் நடித்த படங்களுக்கு மட்டுமே இசையமைத்துள்ளார். டொப் நடிகர்களான விஜய், அஜித் ஆகியோரது படங்களுக்கு இசையமைக்காமல் இருந்தார். அதில் ஓர் ஆசை தற்போது நிறைவேறிவிட்டது.

விஜய்யின் 66ஆவது படத்திற்கு தமன்தான் இசையமைப்பாளர் என சற்றுமுன் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்கள். அது குறித்து, "எனது நீண்ட காத்திருப்பு. நமது அன்புக்குரிய விஜய் அண்ணா படம் கடைசியாக நிகழுமானது. தில் ராஜு, வம்சி ஆகியோருடன் தளபதி 66 படத்தில் இணைந்தது சிறந்த பீலிங். என்னைப் பொறுத்தவரையில் 6-6-6-6-6-6. எங்கு பார்த்தாலும் இசை வெடிச்சத்தம் கேட்கும்" என மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

விஜய்யின் 66 ஆவது படம் 6 பாடல் 6 சிக்ஸ் என தமன் சொல்லியிருப்பதைப் பார்த்தால் படத்தில் அதிரடியான 6 பாடல்கள் இருக்கும் எனத் தெரிகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7